

திங்கள் இருமுறை
ஆக 16.1971. 35 காசு

# தமிழரசு



# 251-வது லட்சாதிபதியாக நீங்களே இருக்கலாமே!

## இன்றே வாங்குவோம்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு




தமிழ்நாட்டின் பரிசுத் திட்டத்தால் இதுவரை 250 லட்சாதிபதிகள் தோன்றியுள்ளனர். பரிசுத் திட்டத்தின் பெருமைதான் என்னே! 251-வது லட்சாதிபதியாக நீங்களே ஆகிவிடலாமே! ஒரு ரூபாய்தான். அது உங்களுக்கு உயர் வாழ்வு தருகிறது. நாட்டுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. வளம் சேர்த்து உங்கள் வீட்டையும், கல்வி, மருத்துவ, வீட்டு வசதிகள் மூலம் நாட்டையும் காக்கிறது.

# ரூ. 3,00,000
## உங்களுக்கே கிடைக்கலாம்!

மொத்தப் பரிசுத் தொகை: ரூ. **17,50,000**

மொத்தப் பரிசுகள் : **5328**

**தமிழ்நாடு தான் இவ்வளவு பெரிய பரிசுகளைத் தருகிறது.**

**கவனிக்கவும்**

### திருத்தியமைக்கப்பட்ட புதிய பரிசுத் திட்டங்கள்

**சிறப்புப் பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. **3,00,000** |
| இரண்டாவது சிறப்புப் பரிசுகள் இரண்டு: (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,00,000) | ரூ. **2,00,000** |
| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) | ரூ. **5,00,000** |

**சாதாரணப் பரிசுகள்**

| | | | |
|---|---|---|---|
| மூன்ருவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 10, 000 | : | ரூ. 50,000 |
| நான்காவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றுக்கும் | ரூ. 5,000 | : | ரூ. 50,000 |
| ஐந்தாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றுக்கும் | ரூ, 1,000 | : | ரூ. 50,000 |
| ஆருவது பரிசு ஆயிரம் ஒவ்வொன்றுக்கும் | ரூ. 100 | | ரூ, 1,00,000 |
| (இது ஒவ்வொரு வரிசைக்கும்) | | | ரூ. 2,50,000 |

செலவு ஒரு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய்

## குலுக்கல் நாள்: 30-8-1971

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**
**உடனே வாங்குங்கள். இல்லையேல் கிடைக்காது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

* 5 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது

# தமிழரசு

மலர் 1 16—8—1971 இதழ் 4

மின்வசதி முழுமை விழா
மஞ்சள் காமாலே
சிற்பத்திறனில் சிறந்த தாராசுரம்
மரமும் மணிக்குறளும்
திருவாளர் பொன்மொழியார்
பஞ்சம் பறந்துவிடும்
அரங்கேற்றம் (கவிதை)
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்


தூங்கிய மணலி
தொழில் நகராகிறது

அரசுத்துறை டெண்டர்
விளம்பரங்கள்

பக்கம் 29—44, 66

முகப்பில் :
சட்டமன்ற உறுப்பினர் நாளேயொட்டி
நடைபெற்ற போட்டிகளில்
சில காட்சிகள்




கோவில் நிதியிலிருந்து 50 அனாதை இல்லங்கள் அமைக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
கோவில் நிதி
செய்திச் சித்திரங்கள்
சுதந்திரப் போராட்டத் தியாகிகள் உதவிப் பணம் பெறுவதற்கு 31-3-1970 கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது 1971 செப்டம்பர் 15-ம் நாள் வரை மனு அனுப்பலாம்!
உதவிப் பணம் பெற மனு
மனு அனுப்பக் கடைசி நாள் 15-9-1971
செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களில் எல்லா ஊர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.
கோபர்...

# தூங்கிய மணலி தொழில் நகராகிறது

**முதல்வர் டாக்டர் கலைஞர்**

சில ஆண்டுகளுக்கு முன் வரையிலும்கூடத் தூங்கிவழிந்து கொண்டிருந்த மணலி கிராமம் தற்போது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடமாக உருமாறியிருக்கிறது.

தமிழக அரசு மணலியில் 1,700 ஏகரா நிலத்தை வாங்கி, அதனை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை, உரத்தொழிற்சாலை, டில்லி நூற்பாலை, அடிப்படை இரசாயனத் தொழிற்சாலை, நாக்பால்—அம்பாடி ஆகிய பல்வேறு தொழிற்சாலைகளுக்குக் கொடுத்திருக்கிறது.

இங்கு இப்பொழுது, நாடு முழுவதும் புகழ்பெற்று விளங்கும் கமானி நிறுவனத்தார் கார்பன் பிளாக் தொழிற்சாலையை அமைக்க முன்வந்ததன் வாயிலாகத் தமிழ் நாட்டோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக ஆகிவிட்டது எனக்குப் பெரிதும் மன நிறைவைத் தருகிறது.

தமிழ் நாட்டில் பெரிய டயர்த் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தமிழக அரசும் கூட்டுத் துறையில் ஒரு டயர்த் தயாரிப்புத் தொழிற்சாலையினை அமைக்க இருக்கிறது. இந்த ரப்பர் டயர்த் தயாரிப்பிற்கும் அச்சு யந்திர மை தயாரிப்பிற்கும் கார்பன் பிளாக் என்னும் மூலப் பொருள் மிகவும் இன்றியமையாத் தேவையாகும். எனவே, இங்கு கார்பன் பிளாக் தொழிற்சாலை அமைவதில் தமிழக அரசுக்கும் அக்கறை இருக்கிறது.

இதுதவிர, மணலியில் 65 கோடி ரூபாய் மூலதனமுள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை ஏற்கனவே இயங்கத் துவங்கிவிட்டது. எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் துணைப் பொருள்களைக் கொண்டு, மணலி வட்டாரத்தில் 'பெட்ரோ கெமிகல்' தொழிற்சாலைகள் பலவற்றை அமைக்க வேண்டும் என்பதிலும் மாநில அரசு பேரார்வம் காட்டி வருகிறது.

மணலியில் ஓர் உரத் தொழிற்சாலை விரைவில் இயங்க இருக்கிறது. நாக்பால்—அம்பாடி, இந்தியன் ஆர்கானிக் கெமிகல்ஸ், டில்லி நூற்பாலை ஆகியவை இன்னும் இரண்டாண்டுகளில் வேலை செய்யத் தொடங்கும். பாலிதீன், பிளாஸ்டிக், பாலியஸ்டர்இழை ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலைகள் குழுவை ( Complex ) 80 கோடி ரூபாய் மூலதனத்தில் அமைக்க மத்திய அரசு பச்சைக் கொடி காட்டவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. விரைவில் மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று நம்புகிறோம்.

தொழில் நிர்வாகிகளின் முயற்சியாலும், அரசின் முயற்சியாலும் 130 முதல் 150 கோடி வரை இந்த வட்டாரத்தில் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. இந்த மூலதனத்தின் காரணமாக இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவதற்காக எல்லா வசதிகளும் கொண்டதாக விளங்கும் குடியிருப்புகளைத் தோற்றுவிக்க அரசு 500 ஏக்கர் நிலத்தை வாங்கியிருக்கிறது. இந்தத் தொழிலாளர் குடியிருப்பு முன்மாதிரியான நகரமைப்பாக விளங்கும். இங்குள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் வசதி, மின்விசை வசதி, தகவல் தொடர்பு, சாலைகள் அமைக்க அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. தனியார் துறைக்கும் அரசுக்கும் இடையே இத்தகைய ஒத்துழைப்பு நிலவிடுவதன் காரணமாகச் செழிப்பான சகாப்தத்தை நோக்கி நாம் முன்னேற முடி

யும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் முறையைப் பரவலாகவும், எளிதாகவும் ஆக்க வேண்டும் என்பதை நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். இதைச் செய்யவில்லை என்றால், நம் நாட்டில் புதிய முறையில், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. பொதுவாக, அதிகாரக் குவியல் மூலம் ஏற்படுகிற தாமதங்கள் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகின்றன. எனவே, தொழில்களின் மீது மத்திய அரசுக்குள்ள கட்டுப்பாடு தளர வேண்டும் என்பதிலே இங்கு யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மாநிலங்களுக்குத் தான் தொழில்களின் தேவை தெரியும். எனவே, தொழில்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்ற மாநிலங்களுடன் மத்திய அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகிறது. தொழில் அமைதிக்கான சூழ்நிலையை உருவாக்குவதில் நாம் எல்லா வகையான முயற்சிகளையும் செய்து வருகிறோம்.

பின் தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் துவங்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டுப் பலவித முடிவுகளைக் கொள்கை அடிப்படையில் நாம் மேற்கொண்டுள்ளோம். தேசீய வளர்ச்சிக் குழுவில் நாம் பல முறை வாதாடிய பிறகு நமது வாதத்தின் நியாயத்தை உணர்ந்து தமிழ் நாட்டிலுள்ள எட்டு மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

பின்தங்கிய இந்தப் பகுதிகளில் தொழில்களைத் துவங்க முன்வருகிறவர்களுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் பல்வேறு சலுகைகள் கிடைக்கும்.

இராமநாதபுரம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் உள்ள பதினொரு பின் தங்கிய தாலுகாக்களில் தொழில்கள் துவங்க முன்வருகிறவர்களுக்கு அத்தகைய நிறுவனங்களின் மூலதனச் சொத்தில், பத்தில் ஒரு பங்கை ஒட்டு மொத்த மானியமாக மத்திய அரசு வழங்கும்.

இவை தவிர தமிழ்நாட்டில் உள்ள பின்தங்கிய 40 தாலுகாக்களில் தொழில் துவங்கினால், மின் கட்டணத்தில் தமிழக அரசு சலுகை அளிக்கும் என்று அறிவித்திருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த எட்டு பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் துவங்க தொழில் நிறுவனங்கள் முன்வந்தால் அவர்கள் முன்பு செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய விற்பனை வரியை ஒட்டியதான நீண்டகால வட்டியில்லாக் கடன் வழங்குகின்ற ஒரு திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தனியார் துறைக்கு இருக்கிற பங்கைத் தமிழக அரசு உணர்ந்திருப்பதையே இந்தச் சலுகைகள் நிரூபித்துக் காட்டும்.

தனியார் துறையும், பொதுத் துறையும் இடைவெளி அதிகம் உள்ளவை என்பதைத் தமிழக அரசு ஏற்பதில்லை. தொழில் துறையில் தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்த கூட்டுத் துறை என்னும் கோட்பாடு—இரு துறைகளும் இணைந்து நற்பயன்களை விளைவிக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. தொழில் துறையில் கடுமையான போக்கு என்று ஒன்று இருக்கமுடியாது. உண்மை நிலைக்கு ஏற்ப—வளைந்து கொடுக்கக் கூடிய—ஒரு கண்ணோட்டம்தான் தேவையானது.

அடிப்படையான நோக்கங்களையும், பரந்த கொள்கைக் குறிக்கோள்களையும் குறித்துக் கருத்து ஒருமைப்பாடு ஏற்பட்டு விடுமானால்—தனியார் துறை தொழில் அதிபர்களின் ஊக்கம், முன் முயற்சி ஆகியவற்றினுடன் அரசின் சமுதாய நோக்கமும், செல்வ வசதியும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும். இப்படிப்பட்ட கலவை ஒன்று நிகழ்ந்தால் செழிப்புக்கு வேறு தடைகள் இருக்க முடியுமா?

தமிழ் நாட்டில் தொழில்துறையில் மூலதனம் போடுவதை ஊக்குவிக்கத் தன்னால் ஆன முயற்சிகள்—தேவையான முயற்சிகள் அனைத்தையும் தமிழக அரசு செய்யும்.



நாமாகவே, நமக்காகவே, நம்முடைய நாட்டுக்காகவே, நம்முடைய மக்களுக்காகவே நினைப்பதும் சிந்திப்பதும் செயல்படுவதும்தான் பொது வாழ்க்கையினுடைய மிக இன்றியமையாத இலக்கணம்.

# மதராஸ் ரி:பைனரியைப் பொறுத்த மட்டிலும்
# சுதந்திர தினம் எழுச்சியூட்டும் இன்பத் திருநாள்!

சுதந்திரம் பெறுவதற்காக நாம் ஏற்ற இன்னல்களும், செய்த உயிர்த் தியாகங்களும் நினைவுக்கு வருகின்றன. அரும்பாடு பட்டுப் பெற்ற இந்த சுதந்திரத்தை எப்பாடு பட்டாவது நாம் காத்தாக வேண்டும்.

வெறும் பேச்சுக்களும், வேடிக்கை கேளிக்கைகளும் மட்டும் போதாது. உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நம் அனைவரது வாழ்வை வளப்படுத்தவும் வேண்டும்.

எம் ஆர் எல் இதற்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

உணவு உற்பத்தி பெருக, தொழில்துறை செழிக்க, போக்குவரத்து தழைக்க, வாழ்க்கைத் தரம் உயர உதவி செய்யும் பல பொருள்களை எம் ஆர் எல் தயாரித்தளிக்கிறது.

அத்துடன் தன்னைச் சுற்றிலும் சிறியதும் பெரியதுமாகப் பல தொழில்கள் வளரவும் எம் ஆர் எல் வகை செய்கிறது.

**சுதந்திரத் திருநாளில் எழுச்சிமிக்க நல்வாழ்த்துக்கள்!**

எம் ஆர் எல்லின் தயாரிப்புகள்: பெட்ரோல் ● கெரோஸின் ● டீஸல் எண்ணெய் ● ஜெட் எரிபொருள் ● விமான எரிபொருள் ● சமையலுக்கு உதவும் எரிவாயு ● நா:ப்தா ● லூப் கச்சாப் பொருள் ● தார் ● கந்தகம் ● தொழிற்சாலைக்குத் தேவையான எரிபொருள்






MRL

**மதராஸ் ரி:பைனரீஸ் லிமிடெட்,**
சென்னை

FDSMRL-1677 TM




**1953**-ஆம் ஆண்டு இறுதியில் ஒருநாள் எழும்பூர் ரயிலடியில் ஏகப்பட்ட கூட்டம். உணர்ச்சிப் பிழம்புகளாக கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. பிளாட்பாரத்திலும், ரயிலடிக்கு உள்ளேயும் வெளியேயும் எங்கும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம். கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறைத் தண்டனை ஏற்று மீண்டு வந்த தங்களுடைய அருமைத் தலைவனை, தண்டவாளத்திலே தலைவைத்துப்படுத்துத் தமிழகத்திற்காகத் தன் உயிரையே அளிக்க வந்த ஒப்பற்ற தியாகியை வரவேற்கத்தான் அந்தக் கூட்டம். ரயிலடிக்கு வெளியே பெரிய வளைவு ஒன்றிலே அழகுத் தமிழிலே ஒரு சொற்றொடர் என்னைக் கவர்ந்தது. ''அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவிளக்கே வருக வருக! .........''

காலம் ஓடுகிறது—பந்தயக் குதிரை வேகத்திலே......... அன்று கண்ட தமிழகமா இன்று? எங்கு பார்த்தாலும் வியத்தகு வளர்ச்சிப் பணிகள். தமிழகமே மாறி வருகிறது. புன்னகைப் பூங்காவாகப் பூத்துக் குலுங்குகிறது இன்று.

***1971*** ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள். மந்தமாருதத் தென்றல் இதயத்தைக் கிறங்க வைக்கும் இனிய மாலை வேளை. நாதசுர இசை, கூடியிருந்தோரைக் குளிர வைக்கிறது. அழகு மணிமாளிகையே மிஞ்சிவிடும் எழில்மிகு அலங்காரப் பந்தல். எங்கு பார்த்தாலும் விளக்குகள்! விளக்குகள்! காவல்துறை பாண்டுக் குழுவினர் ரம்யமான இசையை வழங்குகின்றனர். ஊரெல்லாம் திருவிழா. ஆலந்தூர் நகரமே அழகுத் திருக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். அலங்காரப் பந்தல் கொள்ளவில்லை. நிரம்பி வழிகிறது. எல்லோர் இதயங்களிலும் இனம் புரியாத ஓர் மகிழ்ச்சி. அன்று கல்லக்குடிப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறை மீண்ட தமிழ்த் தாயின் திருமகனை—இன்று நாலு கோடித் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் தமிழக முதல்வரை—ஊரெல்லாம் ஒளி வழங்கும் உத்தமத் தலைவரை—டாக்டர் கலைஞரை—வரவேற்க, அந்தத் தமிழ்ப் பெரு மகனின் தெள்ளு தமிழினை அள்ளி அள்ளிப் பருக ஆர்வத்துடன் கூடியிருந்தனர் மக்கள்.

கொள்ளை அழகு நிரம்பி வழியும் மேடையிலே, டாக்டர் கலைஞர், மின்துறை அமைச்சர், புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர்., வாரியத் தலைவர், தலைமை மின்பொறியாளர், செங்கை மாவட்ட நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், ஆலந்தூர் நகராட்சி தலைவர்.

டாக்டர் கலைஞர் ஒரு மின் விசைக் குமிழை அழுத்துகிறார். நீலத்திரை மறைகிறது. 'கிராம மின்சார வளர்ச்சி' என்றெழுதப் பட்ட தமிழகத்தின் வரைபடம் காட்சி அளிக்கிறது. தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களும் வரையப்பட்டிருந்த அந்தப் படத்திலே செங்கை மாவட்டம் மின்வசதி முழுமையாகப்பெற்றுவிட்டதைக் காட்டும் வகையில் ஒளிவிளக்குகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சிப் பெருக்கால் மக்கள் எழுப்பிய கரவொலி வானைப்பிளக்கிறது. நீலத்திரை விலகி செங்கை மாவட்டம் ஒளிப்பிழம்பாக வரைபடத்தில் காட்சி அளிக்க, மெல்லிய இசை—

பொன்சாரம் இட்டிழைக்கும்
பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற
நிலை மாற்றி,
எழுபத்தி ரண்டுக்குள்
எங்கணுமே மின்இணைப்பு
என்தமிழ்த் திருநாட்டில்
ஏற்படவே உழைக்கின்றோம்'

கலைஞரின் கவிதை வரி ஒலி பரப்பப்படுகிறது.

டாக்டர் கலைஞர் விழாவில் முழக்கமிடுகிறார்:—

''செங்கை மாவட்டத்து மக்களின் உள்ளமெல்லாம் களிப்படைகின்ற ஒப்பரிய விழா இது.

1969-ஆம் ஆண்டு தமிழகத்தை ஆளுகின்ற முதல்வர் பொறுப்பை அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுத் தமிழகச் சட்ட மன்றத்தில் முதல்வர் என்ற முறையில் முதல் உரையினை ஆற்றிய பொழுது இரண்டொரு சூளுரைகளை எடுத்துக் கொண்டேன்.

அப்படி எடுத்துக் கொண்ட சூளுரைகளில் ஒன்று தான் 1972-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மின்சாரவிளக்குகள் இல்லாத கிராமமே இருத்தலாகாது என்ற நிலையினை உருவாக்குவோம் என்பதாகும். இப்படிப்பட்ட ஆர்வத் துடிப்பு இருந்தால் மட்டும் போதாது. வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று தீவிரமாக ஈடுபட்டோம்.

நல்ல சுறுசுறுப்பும், பேரார்வமும், கட்டுப்பாடும், தன்மையும் கண்ணிய உணர்ச்சியும், கடமை யாற்றுவதில் அக்கறையும் கொண்ட அருமை நண்பர் மின்சாரத்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அந்தப் பணியை வெகு வேகமாக நடத்தத் தொடங்கினார்.

மின்வாரியத்தின் தலைவர் அவர்களின் ஒத்துழைப்போடும், வாரிய ஊழியர்களின் உறுதுணையோடும் பணியாற்றினார்.

இதற்கிடையே எத்தனையோ தட்டுப்பாடுகள், இடர்கள், இன்னல்கள், தேவையான சாமான்கள் வந்துசேருவதில் தாமதங்கள் ஆகியவற்றையெல்லாம் கடந்து இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் இன்முகம் காட்டிப் பணியாற்றிய அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நன்றியறிதலையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற அழகான படத்தை உங்களின் பலத்த கரவொலிக்கிடையே திறந்து வைத்தேன்.

குமரியும் நெல்லையும்—இராமநாதபுரமும், மதுரையும்—திருச்சியும், தஞ்சையும்—சேலமும், கோவையும்—நீலகிரியும், தர்மபுரியும் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களும் முழுமையாக ஒளிவிளக்குகள் சூழப்பெறாமல்செங்கை மாவட்டம் மட்டுமே ஒளி விளக்குகளால் சூழப்பட்டிருக்கும் இந்த வரைபடத்தைக் கண்டீர்கள்.

ஒரு மாவட்டத்தில் எல்லாக் கிராமங்களிலும் மின் விளக்கு ஏற்றி முடிக்கப்பட்டு விட்டது என்று தான் செங்கை மாவட்ட எல்லையைச் சுற்றிலும் மின் விளக்கு போடப்பட்டிருக்கிறது.

இந்தப் படம் முழுவதும் மின் விளக்குகள் இருக்கத் தக்க விதத்தில் இந்தப் பாமரர்களால்இந்தக் காரியம் முடியுமா? இந்த ஆட்சியில் இதை நிறைவேற்றமுடியுமா? இந்தச் சாமானியர்களால் இது முடிகிற செயலா என்று ''ஆகா ஊகூ'' என்றவர்களெல்லாம் மூக்கின்மேல் விரலைவைக்கத்தக்க விதத்தில் 1972-க்குள் சென்னை நகரில் அப்படிப்பட்ட தமிழகம் பூராவும் மின்வசதி பெற்றுவிட்ட நிறைவு விழாவினை நடத்திக் காட்டத்தான் போகிறோம்'' அந்த வீரத்திருமகனின் சூளுரை கேட்டு மக்கள் வெள்ளம் பெருத்த கரவொலியினை எழுப்புகிறது.

மக்கள் தலைவரின் கம்பீரக் குரல் தொடர்கிறது:

''1933-ஆம் ஆண்டுதான் தமிழ் நாட்டுக்கு மின்சாரம் அறிமுகமானது என்று கருதுகிறேன்.

33-ஆம் ஆண்டிலிருந்து 66-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு மின்சார வசதிசெய்யப்பட்டது என்று பார்க்க வேண்டும்.

1933-ஆம் ஆண்டிலிருந்து 66—67 வரை மின்சாரம் பெற்ற கிராமங்கள் 25 ஆயிரம். மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 57 ஆயிரம். இதில் மின்சாரம் பெற்றவை 25 ஆயிரம் கிராமங்களாகும்.

பிறகு 67—68-ல் ஓராண்டுக் காலத்தில் மின்சாரம் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை மூவாயிரம் உயர்ந்து 28 ஆயிரம் கிராமங்களாயிற்று.

1968—69-ல் கிராமங்கள் என்றாகி,

1969—70-ல் 31,727 கிராமங்கள் என்றாகி,

1970—71-ல் 42,229 கிராமங்களாகவும் உயர்ந்திருக்கின்றன.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் 33 ஆண்டுக் காலத்தில் மின் விளக்கு வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 25 ஆயிரம்.

இந்த நான்காண்டுக் காலத்தில் மட்டும் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு அவர் வழியில் நடக்கும் இந்தச் சாதாரணமானவர்களின் ஆட்சியில் மின் விளக்கு வசதி பெற்றிருக்கின்றன.

இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் 7 மாவட்டங்களில் மின் விளக்கு பூர்த்தி விழா நடைபெற இருக்கிறது. இதில் செங்கை மாவட்டம் முந்திக்கொண்டது. செங்கை மாவட்டத்திற்கு அந்தப் பெருமை இருக்க வேண்டியது தானே!

## மின் வசதி முழுமை விழா

ஏனென்றால், தமிழர்களைத் தட்டி எழுப்பி, தமிழ் நாட்டைத் தன்மான புரியாக்கி 'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பதை மெய்ப்பித்துக்காட்டியபேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாவட்டம் இது. அந்த மாவட்டம் இந்தப் பெரும் பணியில் பெருமை பெற்றிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் செங்கை என்று அழைக்கக் காரணம் என்ன?

கொடுத்துக் கொடுத்துக் கை சிவந்தவன் குமணன் என்பார்கள்; கொடுத்துக் கொடுத்துச் சிவந்தவன் பாரி என்பார்கள்.

அந்த முறையில் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த செங்கை படைத்த எம்.ஜி. ஆர். இருக்கின்றகாரணத்தால்முன்கூட்டியே செங்கை என்று பெயர் இட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன்''

மீண்டும் மக்களின் கரவொலி.

பிரச்சினையைத் தொடுகிறார் முதல்வர்:

''சாத்வீகமான முறையில் முன்னேற்றக்காரியங்கள் தமிழகத்தில் நடைபெறுகின்றன என்று மற்ற மாநிலத்தார் பாராட்டுகின்றனர்; விழுந்து போற்றுகிறார்கள்.

இந்தப் பாராட்டுக்குக் காரணம் நானோ, இந்த அரசாங்கமோ மாத்திரமல்ல. நான்கு கோடி மக்களின் ஆதரவு தான் இதற்குக் காரணம்.

இந்த அமைதி தொடர்ந்து இருக்கவும்—அமைதி காக்கப்படவும்—அதற்கு ஊனமேற்படாமலிருக்கவும் — கேடு படாமல் இருக்கவும் இன்று போல் என்றும் உங்களது ஆதரவு இருக்க வேண்டும்.

உரிமையுணர்ச்சியும், கடமை உணர்ச்சியும் உள்ள ஊழியர்கள் மின் வாரியத்திலே இருக்கின்றனர். அவர்களிடையே நல்ல மரத்தில் சில புல்லுருவிகள் இருப்பதுபோல் சிலர் இருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொழிலாளர்களுக்கும் உண்டு. கடமை உணர்ந்து பணியாற்றினால் தான், செங்கை மாவட்டத்தில் மட்டுமல்ல; மின் வசதி முழுமை பெற்று விட்டதாக அறிவிக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமல்ல ; தமிழகத்தில் உள்ள எல்லாச் சிற்றூர்களிலும் இந்தப் பணியை நிறைவேற்ற முடியும்.

இருண்ட தமிழகத்தை ஒளிமயமாக்கினோம் என்று பெருமை நமக்கு உருவாகும்.

அது மட்டுமல்ல. தமிழகத்தில் உள்ள 20 ஆயிரம் அரிசனக் காலனிகளிலும் மின் விளக்குப் போட வேண்டும் என்ற என் அன்புக் கட்டளையை அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் அவர்கள் செயல்பட வேண்டும்

அடிக்கடி நான் சொல்வது போல், பந்தயக் குதிரை வேகத்தில் நான் சென்று கொண்டிருக்கிறேன்.

அதிகாரிகளும், அரசு அலுவலர்களும் பந்தயக் குதிரை வேகத்தில் வர முடியாவிட்டாலும்; குதிரை எப்படிச் செல்கிறது , சரியான இலக்கில் செல்கிறதா என்பதை அறிய பின்னாலே விரைந்து செல்லும் ஜீப் கார் வேகத்திலாவது என்னைத் தொடர்ந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்பொழுதுதான் செங்கை மட்டுமல்ல ; செந்தமிழ் நாடு முழுமைக்கும் பரிமளிக்கத்தக்க அளவுக்கு அரசுப் பணி அமைந்திட முடியும்.''

உயிரோட்டமுள்ள முதல்வரின் பேருரை கேட்டுக் கூடியிருந்த மக்கள் உணர்ச்சிப் பிழம்பாக மாறி நின்ற காட்சியினை அந்த விழாவுக்கு நேரில் வந்தவர்கள் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது.

செங்கை மாவட்டத்தில்உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டதைக் குறிக்கும் அந்த மின்வசதி முழுமை விழாவிற்குத்தலைமைதாங்கினார்மாண்புமிகு மின்துறை அமைச்சர். தனது தலைமை உரையில் ''கலைஞரின் தலைமையிலே கட்டுப்பாடுடன் பணியாற்றுவோம். செங்கை மட்டுமல்ல. நீலகிரி மாவட்டம் முழுமைக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது என்ற செய்தியையும் நான் அறிவித்துக் கொள்கிறேன். அகில இந்தியாவில் யாராலும் செய்ய முடியாததைத் தமிழ்நாடு செய்துள்ளது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள்.

மின்சார வாரியத்தின் சார்பில் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூறு ரூபாயினை முதல் தவணையாக மின்சாரத் தலைமைப் பொறியாளர் திரு கோதண்டபாணி அவர்கள் கலைஞரிடம் அளித்தார்கள்.

மின்வாரியத்தின் சார்பில், மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பி. இராமன் அவர்கள் ரூபாய் முப்பது இலட்சத்து எழுபதாயிரத்து நூறுக்கான காசோலையைச் சிறு சேமிப்புத் திட்டத் துணைத் தலைவர் புரட்சி நடிகர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார்.

செங்கை மாவட்டச் சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு முனுஆதி அவர்கள் உரையாற்றினர்.

தலைமை மின் பொறியாளர் நன்றி கூற, நாட்டுப் பண் இசைக்க, செங்கை மாவட்ட மின்வசதி முழுமை விழா நிறைவு பெற்றது.

எழுச்சி மிகு மகிழ்ச்சி விழாவிலே கலந்து கொண்ட பூரிப்பில் திரும்பிச் செல்ல வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். அண்ணாசாலை. இருபுறமும் இருளைப் பகலாக்கும் ஒளி உமிழ் விளக்குகள் ! எங்கு பார்த்தாலும் ஒளி வெள்ளம் ! காப்பி சாப்பிடக் கடைக்குள் நுழைகிறேன். வானொலிப்பெட்டியில் இனிய இசை :—

''விளக்கேற்றி வைக்கிறேன் விடிய விடிய எரியட்டும் ; விடியும் நாட்களெல்லாம் நல்ல நாளாய் விடியட்டும்''


சிந்தனை எங்கெங்கோ ஓடுகிறது. ''அழகுமணி மாளிகையின் அலங்காரத் திருவிளக்கே வருக! வருக!'' என்ற அந்த வரிகள் நினைவுக்கு வருகின்றன. தமிழகத்தின் திருவிளக்கு டாக்டர் கலைஞர். அவருடைய பொற் கரங்களால் அவருடைய சீரிய தலைமையின் கீழ் இன்று ஊரெல்லாம் ஒளிமயமாகிக் கொண்டு வருகிறது கண்டு உள்ளமெல்லாம் சிந்தை யெல்லாம் தேனாகத் தித்திக்கிறது.

—வ.ச.

# டைதேன் எம் 45


உலகெங்கிலுமுள்ள விவசாயிகளிடையே மிகவும் பிரபலமான காளான் கொல்லி, டைதேன் எம் 45 தான். அது, பெரும்பான்மையான பயிர்களின் அதிகபட்ச நோய்களைக் கட்டுப்படுத்துகிறது. மழை, நீர்ப்பாசனம் இவற்றிலும் கரைந்து விடுவதில்லை. டைதேன் எம் 45, விதைகளின் விதை கலவையாக உபயோகிக்க 100 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

மட்டுமே
பெரும்பான்மையான
பயிர்களைப் பாது
காக்கக்கூடியது..
மென்மையான
பயிர்களுக்கு சாலச்
சிறந்தது!




இன்டோஃபில் கெமிக்கல்ஸ்
லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும் ஃப்ளாஸ்க் சின்னமும் ரோம் அண்ட் ஹாஸ் கோ/ பிலாடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு. எஸ். ஏ. விலும் இதர நாடுகளிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.




### "விளக்கத்திற்கு" முன்னுரை

'நமது நிலை' இலவச இணைப்பை முன்பு கொடுத்த நீங்கள் 'நமது விளக்கத்தை' ஆகஸ்டு முதல் தேதி இதழுடன் இலவச இணைப்பாகத் தந்திருக்கிறீர்கள். நன்றி! விளக்கத்தைப் படித்துச் சுவைத்தேன்.

முதல்வர் ஆற்றிய நிதி நிலை அறிக்கையையும், அதன் மீது எடுத்த விவாதத்திற்குப் பின்னர் முதல்வர் ஆற்றிய மறுமொழியையும் நூலாக்கித் தந்திருக்கும் 'தமிழரசு', நிதி நிலை உரை மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் செய்துள்ள விவாதங்களின் சுருக்கத்தை 'நமது விளக்கத்தின்' முன்னுரையாகக் கொடுத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

—எம். சிவராமன், தேனி.

### பருப்பிருக்க அறுவைச் சிகிச்சை ஏன்?

"பருப்பு வகைகளை அதிகமாக உண்பதால் இயற்கையாகவே குடும்பக் கட்டுப்பாடு ஏற்பட்டு விடும்" என்று சொல்லியிருக்கிறீர்களே, அப்படி என்றால் எதற்காக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்! பேசாமல் வீட்டுக்கு வாரத்துக்கு ஒரு லிட்டர் பருப்பு வகைகளைக் கொடுத்துவிடலாமே!

—ந. சுந்தரராஜன்,
வத்திராயிருப்பு.

### நகை நிறைந்த மாணவர்

'பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்' பரிசு பெற்ற மாணவப் பேச்சாளர்களுக்கு—அறுவைச் சக்கரவர்த்தி, அறுவை மன்னர், அறுவைப் பேரரசு என்பது போன்ற பட்டங்களைத் தருகின்றார்கள் என்பதைப் படித்ததும் விழுந்து விழுந்து சிரித்தேன். மாணவர் தம் நகைச்சுவையே தனி!

—கே. எஸ். சந்திரா, பி.ஏ,
குடந்தை.

### கிடங்கிற்குப் பாராட்டு

அரசினர் எழுது பொருள் கிடங்கு ஒன்று இருப்பது தெரியும்; ஆனால் அதன் பணி என்னென்ன என்பது இதுவரை எனக்குத் தெரியாது. ஆகஸ்டு முதல் தேதி இதழில் எழுது பொருள் கிடங்கின் தொண்டுகளைப் பற்றித் தெளிவாக எழுதியிருக்கிறீர்கள். இப்படி மக்களுக்கு அதிகமாகத் தெரியாத செய்திகளைத் தொடர்ந்து தெரிய வைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

—ஏ. எம். அழகப்பன்,
கண்டனூர்.

### பெண்மை வெல்லும்!

'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்று பெரியவர்கள் சொல்வதுண்டு; அதிலிருந்து, 'பெண் வலிமையானவள்; அவளால் எதுவும் நடக்கும்' என்ற கருத்துத் தெளிவாகியுள்ளது. அதே கருத்தைத் 'தாய்மை வெல்லும்' என்ற கட்டுரை தெரிவித்திருக்கிறது.

—கே. மருதப்பன்,
கோபிசெட்டிபாளையம்.

### ஆசிய அதிசயம்!

அடேயப்பா! நமது தமிழ் நாட்டிலுள்ள அரசு ஸ்டுடியோ, ஆசியாவிலேயேபெரிய ஸ்டுடியோவாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை எண்ணும்போது அதிசயமாக இருக்கிறது! நமது நாடுதானா இந்த அளவு முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று வியக்கத் தோன்றுகிறது.

—ஆர். நடராஜன்,
தரங்கம்பாடி.

### வளர்ப்பின் பெருமை

'வளர்ப்புப் பெண்' சுவையாக இருந்தது. இறுதி வரை வளர்ப்புப் பெண் 'நாய்' என்பது தெரிந்துவிடாத வண்ணம் அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

—சிவ. அருணாசலம்,
காளையார்கோயில்.

### செங்குளமா? பசுங்குளமா?

'செங்குளமே வாழி' என்ற கவிதை படிப்பதற்குச் சுவையாக இருந்தது. ஆனால், செங்குளத்தைப் பசுங்குளமாக்கிவிட்டீர்களே—வண்ணக் கலவையினால்! சிவப்பு உங்களுக்குப் பிடிக்காதோ?

—முரளி, திண்டிவனம்.

### ஆராய்ச்சி அரிச்சுவடி

'அன்னைத் தமிழில் அறிவியல் நூல்கள்' என்ற கட்டுரையில் 'அரிச்சுவடியையே மாற்ற வேண்டுமென்று' ஆணித்தரமாகக் கூறியிருக்கும் ஆசிரியரின் கருத்து பாராட்டத் தகுந்தது. இந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு அறிஞர்கள் ஆதரவு தர வேண்டும் என்பது மட்டுமல்ல—அது போன்ற ஆராய்ச்சியைத் தொடர வேண்டும்.

—இரா. கலையன்பன், தில்லை.

### உயர்ந்த பதவி!

'உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை' என்று ஔவைப் பாட்டி சொன்ன அருங் கருத்துக்கு வடிவாக அமைந்திருக்கிறது 'பதவி உயர்வு'—சிறுகதை; உயர்ந்த கதை இது.

—கே. கோபிநாத்,
சென்னை-23.

BALAJI FERTILISERS
- MADRAS -

அன்று : அணை கட்ட அணிலும் உதவியது.



திரு S. T. S. லக்ஷிமி நரசிம்மன்,
மேனேஜிங் பார்ட்னர்.

இன்று : பசுமைப் புரட்சிக்கு நாங்களும் உதவுகிறோம். பசுமைப் புரட்சியை நாடெங்கும் உண்டாக்கத் தமிழக அரசு செய்து வரும் பணிகள் ஏராளம். அவைகளைச் செயல்படுத்துவது நம் கடமை.

எப்படி : அதிக விளைச்சல்—அதிக மகசூல்—அதிக விளைச்சலைப் பெற—தக்கபடி உரமிட வேண்டும். யூரியா, அமோனியம் சல்பேட், அமோனியம் பாஸ்பேட், கலப்பு உரங்கள், பூச்சி மருந்துகள் எதுவாயினும்—உங்கள் தேவைகளுக்கோ, அல்லது ஆலோசனைக்கோ எங்களை அணுகலாம்.

மற்றும் : எங்கள் கம்பெனி மேனேஜிங் பார்ட்னர், திரு. லக்ஷிமி நரசிம்மன், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கெல்லாம் சென்று உர விநியோக முறைகளை நேரில் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்.

விவரங்களுக்கு எழுதுக :

**K. B. கோபாலன்,**

சேல்ஸ் மேனேஜர்,

பாலாஜி பெர்டிலைசர்ஸ்


54, நல்லதம்பி முதலி தெரு,

சென்னை-5.

போன் : 86905

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈசன் பம்புகள்




**ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்**

5-7 செகண்ட் லைன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 29321

# மாணவர் அரங்கம்



பசி, பஞ்சமென்ற சொல் இல்லாத தஞ்சையில் கல்விக்கும் பஞ்சமில்லை. கிராமப்பகுதியில்—பூண்டியில் (தஞ்சையிலிருந்து 7 மைல் கிழக்கில்) திருபுட்பம் கல்லூரி உள்ளது. மிகச் சாதாரண ஏழை எளியவர்கள்—உயர்படிப்பறியாத மக்கள் வாழும் இந்தக் கிராமப் பகுதியில் பிறந்த என்போன்ற—என்னுடன் பயிலும் மாணவர்கள், எந்த வகையில் நன்றி சொல்வதென்று தெரியவில்லை!

'அண்ணா மாணவர் இல்லம்' என்று பெயரிட்டோம் நாங்கள் தங்கி இருக்கும் இல்லத்திற்கு. அண்ணா இல்லில் உள்ள ஒவ்வொரு மாணவரும் வாரம் 25 காசு சேர்க்கின்றோம். எங்களை மாணவச் சீரணியினர் என்று பெயரிட்டுக் கொண்டோம். ஒவ்வொரு வாரமும் சேரும் பணத்தைக் கொண்டு தாள், எழுதுகோல், கரும்பலகை, கரும்பலகைக்குரிய குச்சிகள் வாங்கிக் கொண்டு பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை விடுமுறையிலும் செல்கின்றோம்.

அங்கு, கையொப்பமிடத் தெரியாதவர்களுக்குக் கையொப்ப மிடவும், எழுத்துக் கூட்டித் தட்டுத்தடுமாறிப் படிப்பவர்களுக்குத் தடங்கலின்றிப் படிக்கவும் கற்றுத் தருகிறோம். நம்நாட்டின் இன்றைய நிலையையும், உலக அறிவியலையும், அதில் உழவர்களாகிய அவர்கள் பங்கு என்ன வென்பதையும் எடுத்துக் கூறுகிறோம். நவீன முறை விவசாயத்தைப் பற்றிக் கூறுவோம், அதை அவர்கள் மிகவும் விரும்பிக் கேட்கின்றனர்.

நாகரிகமான மாணவ நண்பர்களுடன் கூடிப்பேசி இன்புற்று அறிவை வளர்க்கும் நாங்கள் கல்வி அறிவை மட்டும்தான் வளர்க்கின்றோம். கிராமப் புறத்து மக்களின் மனத்திலே நாங்கள் கற்ற கல்வியைப் பயனுள்ள தாக்குவதில் முழு இன்பத்தை அடைகின்றோம். நாங்கள் முதன் முதலில் ஒவ்வொரு கிராமத்திற்குச் செல்லும்போதும் அவர்கள் எங்களைக் கிருத்துவப் பள்ளி மாணவர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப வருவதாக எண்ணினராம். எங்களுக்கெனச் சேரி வாழ் மக்கள் தனிப்பாத்திரத்தில் தண்ணீரைக் கிணற்றினின்று தங்கள் கைபடாமல் மொண்டு கொடுத்தனர். தீண்டாமை ஒழிப்புப் பற்றி நாங்கள் எடுத்துக்கூறினோம். அதிகப் படியான மரியாதை காட்டி எங்கள் பால் பேரன்பு காட்டினர். 'நாங்கள் உங்களின் பிள்ளைகளே' என்றோம். இருந்தும் பல தடவை சென்றபின்தான் எங்களுடன் சரிநிகர் சகோதரத்துவம் காட்டிப் பழகினார்கள்.

காலையில் கிராமத்திற்குச் செல்லும் நாங்கள் மாலையிலே தான் திரும்புவோம். இதனால் அக்கிராமத்து மக்கள் எங்களுக்காக வீடுதோறும் மதிய உணவு தயாரித்துத் தருவர். நாங்கள் அவர்களுடன் அன்புடன் ஆடம்பரமின்றிப் பழகியது கண்டு ஒவ்வொருவரும் அவர்கள் பகுதிப் பழக்கத்திற்கேற்ப உறவு முறை கொண்டே அழைக்கின்றனர்.

ஒரு நாள், எல்லா வீட்டினரும், நாங்கள் கோடை விடுமுறையில் வீடு செல்கின்றோம் என்று உணர்ந்து தங்கச் செய்தனர். எங்களுடைய சொந்த வீட்டிற்குக் கொண்டு செல்லும் படி நிறையக் காய்கறி, தின்பண்டங்கள், தயாரித்துக் கொடுத்தனர்; மீண்டும் இந்த ஆண்டும் அதே பணியை மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றோம்.

வெள்ளை உள்ளம் கொண்ட கிராம மக்களுக்குத் தொல்லை தரும் அறியாமையைப் போக்க இன்றைய இளைய சமுதாய மாணவச் சகோதர, சகோதரிகள் அனைவரும் பாடுபட வேண்டும். இது ஒரு சிறந்த தொண்டு என்று நாங்கள் கருதுகிறோம். இத் தொண்டில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இன்றைய மாணவருலகம் இந்தப் பெருமகிழ்ச்சியில் பங்கு பெற முன் வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். யாம் பெறும் இன்பம் அனைவரும் பெறுக!

—தங்க. கைலாசம்
பி.காம்., (மூன்றாம் ஆண்டு).


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2


**மாணவர் சீரணி**

ளாக மாறித் தோன்றுகின்ற காமாலை நோய் முக்கியமாக இரண்டு வகைப்படும்.

1. மஞ்சள் காமாலை.
2. குருதி நீர்க் காமாலை.

### மஞ்சள் காமாலை—

காய்ச்சல், பசியின்மை, வாந்தி வருவது, போன்ற உணர்வு, வாந்தி, தலைவலி, முதுகு, கை கால் வலி, வயிற்றுக்கோளாறு முதலிய அறிகுறிகளுடன் வருவது மஞ்சள் காமாலை. இந்த அறிகுறிகள் தோன்றிய நான்கைந்து நாட்களில், காய்ச்சல் குறையும்; சிறுநீரில் மஞ்சள் நிறம், களிமண் போன்ற மலம் தோன்றுவது மஞ்சள் காமாலை வருவதை உணர்த்தும் அறிகுறிகளாகும். சிறுநீரிலும், மலத்திலும் தோன்றுகின்ற நிறத்தில் சில வேறுபாடுகள் இருக்கலாம்; காலதாமதமாக அதாவது 20-வது நாளுக்குப் பின்னர் கூட இவை தெரியக் கூடும். இந்த அறிகுறிகள் ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் இருக்கும். பின்னர் மறைந்துவிடும். சிலருக்கு ஆறு மாதங்களும் அதற்கு மேலும் கூட இவ்வறிகுறிகள் இருந்துவரும்.




மெல்ல மெல்லத்தான் உடம்பு தேறிவரும். சில நேரங்களில் திரும்பவும் நோய் கடுமையாவதுமுண்டு. 5 சதவீத நோயாளிகளுக்கு, நோய் தோன்றி நான்கு மாதங்கள் கழிந்த பின்னரும் காமாலை அறிகுறிகள் இருந்துவரும். இந்த வைரஸ் தாக்கப்பட்டு நோய்க்காளாகாமல் இருப்பவர் அதிகம். ஆனால் இவர்களிடமிருந்து மற்றவர்களுக்கு நோய் பரவுகிறது. காமாலை நோய்க்கு ஆளாகி இறப்போர் தொகை மிகவும் குறைவு.

இந்த நோய்க்குக் குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை.

அறிகுறிகள் வெளிப்படத் தெரியாமலே கூட வந்து குணமாகிவிடும். அதே நேரத்தில் கடுமையாகத் தாக்கும்போது நோயாளியின் ஈரல் மிகவும் பாதிக்கப்பட்டுவிடுகிறது.

### நோய் பரப்பும் கிருமி—

காமாலை நோய் 'வைரஸ்' எனப்படும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு நுண் கிருமியினால் வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நுண் கிருமிகள் வெப்பம், குளோரின் முதலான கிருமி கொல்லி மருந்து முதலியவற்றால் பாதிக்கப்படுவதில்லை என்று தெரிகிறது.

### நோய் உருவாகும் காலம்

சாதாரணமாக 23 முதல் 28 நாட்கள் அல்லது ஒரு மாதத்துக்கு ஓரிருநாள் குறைந்த காலத்தில் இந்த நோய் உருவாகிறது. அதாவது குறைந்தது 10 நாட்கள், உயர்ந்த அளவு 40 நாட்கள் என்ற கால அளவு எனலாம். இதுவே மஞ்சள் காமாலைக்கும், குருதி நீர்க் காமாலைக்கும் உள்ள வேறுபாடாகும். அதாவது குருதி நீர்க் காமாலை உருவாகும் காலம் சராசரி மூன்று மாத காலமாகும்.

### பரவும் வகை

நோயாளியிடமிருந்து நெருங்கிப் பழகும் மற்றவருக்கு இந்த நோய் பரவுகிறது. சமுதாயத்தில் இந்த நோய் மெல்ல மெல்ல பல மாதங்கள் ஓராண்டு அல்லது அதற்கு மேலும் பெரிய அளவில் பரவிவரும்.

மலத்தின் வழியே வெளிப்படும் நோய்க்கிருமிகள் வாய்வழி உடல் நலமுள்ளோரின் உடலுக்குள் புகுந்து நோய் தொற்றுவதாகத் தெரிகிறது. நாகரிக

வந்த காமாலை நோய், சில நோய்களில் குடும்பத்தினருக்குத் தொண்டை அடைப்பான், சீதபேதி போன்ற நோய்களைப் போல் பெரிய அளவில் வரத்தக்க ஆபத்து விளைவதாக ஒரு கருத்து நிலவுகிறது. நோய்க் கிருமி பரவுவதற்குப் பள்ளிக்கூடச் சூழ்நிலையும் ஒரு காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக நோய்த்தொற்று ஏற்பட்ட குடிநீர் முதலானவை மூலம் நோய் பெரிய அளவில் பரவுகிறது. பால், உணவு, முதலியவற்றின் மூலம் நோய்க் கிருமிகள் அவ்வளவு அதிகமாகப் பரவுவதில்லை.

1955 நவம்பர்—1956 ஜனவரி மாத கால இடைவெளியில் சுமார் ஆறு வார காலத்தில் டெல்லியில் இந்த நோய் அதிகமாகப் பரவியதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 29,300 பேருக்கு மஞ்சள் காமாலை தோன்றியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குச் சுமார் ஒரு வார காலம் கழிவுநீர் நகரத்திற்குக் குடிநீர் வழங்குகின்ற யமுனை நதியில் கலந்தது தான் காரணம். இந்தக் கொள்ளை நோய்த் தொற்றுதலில் ஒரு குறிப்பிடத்தக்க தன்மை யாதெனில் தண்ணீர் மூலமும் பரவுகின்ற டைபாய்டு காய்ச்சல் முதலான நோய்கள் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் முறைகளினால் தடுக்கப்பட்டன. ஆனால் காமாலை நோய் குளோரின் முதலியனவால் தடுக்கப்படவில்லை.

### நோய் பரவும் நிலை

இலேசான காமாலை நோய்கள் உட்பட நோய் பரவுதல் குறித்த புள்ளி விவரம் போதுமானதாக இல்லை. குழந்தைகளுக்கே இந்நோய் மிகுதியாகத் தோன்றுவதிலிருந்து வயதுவந்தவர்கள் காலப்போக்கில் நோய் தொற்றுதலினால் தாங்கும் சக்தியைப் பெற்றுவிடுகிறார்கள் என்று தெரிகிறது. அனாதை இல்லங்கள், நெருக்கடியான மருத்துவ

மனைகள் முதலான பொது நிறுவனங்களில் நெருக்கடி, சுகாதாரக் குறைவு ஆகிய காரணங்களினல் சாதாரணமாகக் காமாலை நோய் பரவுகிறது. இராணுவ முகாம்களில் மிகுதியாகப் பரவி, பலரைச் செயலற்றவர்களாக்குகிறது. சில இராணுவத்தினர் நோயுற்று செயலற்றவர்களாக இருக்க இது ஒரு முக்கிய காரணமாகிறது.

சிறு குழந்தைகளிடையே நோய்த் தொற்று வீதம் குறைவாகவும் 5 முதல் 9 வயதினரிடையே மிகுதியாகவும், அந்த வயதினர்க்கு மேல் வயது ஆக ஆக நோய் வீதம் குறைந்தும் தோன்றுகிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இந்நோய் தொற்றுவதில் வேறுபாடு இல்லை.

மறுமுறையாக நோய் வராமல் தடுப்புச் சக்தி வளருவதாகத் தெரிகிறது. அத்தகைய தடுப்புச் சக்தி எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை என்றாலும், பல்வேறு காரணங்களால் இரண்டாவது முறையும் நோய் தாக்கலாம்.

மஞ்சள் காமாலை பெரிய அளவில் தொற்றுநோயாகச் சமுதாயத்தில் பரவும்போது, சாதாரணமாக நோய்பரப்பும் சாதனங்களான தண்ணீர், உணவு, முதலியவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பெரிய அளவில் நோய் பரவுவதற்கு, இந்தச் சாதனங்களில் நோய்க் கிருமிகள் கலந்தமை காரணமாக இருக்கலாம்.

டைபாய்டு காய்ச்சலுக்குப்பின் தண்ணீர் வழி பரவும் இந்தக் காமாலை நோய் பரவாமலிருக்கத் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## குருதிநீர்க் காமாலை

*1883—84* ஆண்டுகளுக்கிடையில் ஜெர்மனியில் கப்பல் கட்டும், இயந்திரத் தொழிற்சாலைப் பணியாளரிடையே காமாலை நோய் பெரிய அளவில் பரவியது. அந்த நேரத்தில் நோயுற்ற அனைவரிடையேயும் பொதுவாக நிலவிய ஓர் உண்மையை டாக்டர் லூர்மென் என்பவர் கண்டறிந்தார். அந்த நோயாளிகள் அனைவரும் 2 முதல் 8 மாதங்களுக்கு முன்னதாகப் பெரியம்மைத் தடுப்புக்காக அம்மைப் பால் வைக்கப் பட்டிருந்தவர்.

மேலும் சிலர் இரத்த தானத்தின் பின் காமாலை நோய்க்கு ஆளாயினர். இரத்த தானச் சேர்க்கையினல் வருகின்ற காமாலை நோய் 5 முதல் 20 சதவீதம் என்று கணக்கிடப் பட்டுள்ளது. தனிப்பட்ட இரத்த தானம் அளிப்பவரைக் காட்டிலும் இரத்ததானச் சேர்க்கை இரத்தத்தால் காமாலை நோய் ஆபத்து மிகுதி என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நன்கு சுத்தம் செய்யப்படாமல் அவசரத்தில் சுத்தம் செய்யப்பட்ட (Sterilize) ஊசிகளினலும் சிரிஞ்சுகளினலும் இந்நோய் பரவுகிறது. பெரிய மருத்துவமனைகளில் அநேகம் பேர்களுக்கு ஊசி செலுத்தியதைத் தொடர்ந்து காமாலை நோய் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது; ஏனென்ருல் அவசரத்தில் சரியாக ஸ்டெரிலைஸ் பண்ணுத ஊசி சிரிஞ்சுகளால் வருகிறது.

இத்தகைய முறைகளினல் ஊசிமூலம் காமாலை நோய் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பச்சை குத்திக் கொள்வதன் மூலமும் காமாலை நோய் தோன்றியிருக்கிறது. லேபரேட்டரிகளில் பணிபுரிவோர் சிலரும் காமாலை நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

## குருதிநீர்க் காமாலை நோய்க் கிருமி—

சாதாரணமாக உடல் நலத்துடன் இருந்து இரத்ததானமளிக்கும் ஒரு சிலரின் இரத்தத்தில் 'காமாலைக் கிருமி' இருக்கிறது. இவர்களைக் கண்டறிவதற்கு எந்த ஒரு இரத்த சோதனையும் இல்லை. இவர்களுடைய கடந்தகால நோய்களைப் பற்றி விசாரிப்பதாலும் இவ்வுண்மையை அறியமுடியாது.

அறிகுறிகளினல் இவ்வேற்றுமையைக் கண்டறிய முடியாது.

குருதிநீர்க் காமாலை நோயின்-நோய் உருவாகும் காலம் மிக நீண்ட காலம் அதாவது 3 அல்லது 6 மாத காலம் என்பதே இரண்டுக்குமுள்ள வேற்றுமையாகும்.

## தடுப்பு முறை—

இரத்ததானம் அளிப்போரைப் பரிசோதனை செய்து எவரது இரத்தத்தில் 'வைரஸ்' இருக்கிறது என்று கண்டுபிடித்து அவர்களை நீக்குவது முடியாத காரியம் என்றாலும், இரத்த தான மளிப்போரை நன்கு சோதனை செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். முந்திய ஆண்டிலோ அல்லது சில மாதங்களுக்கு முன்னரோ காமாலை நோய்க்கு ஆட்பட்டவர்களை இரத்ததானம் கொடுப்பதிலிருந்து நீக்கவேண்டும்.

பலரிடமிருந்து சேகரிக்கப் பட்ட இரத்தத்தைவிட ஒரே ஒருவரிடமிருந்து இரத்தத்தைக் கொடுப்பது விரும்பத்தக்கது.

பெரிய மருத்துவமனைகளிலும் சிகிச்சை நிலையங்களிலும் தோலைக் குத்தப் பயன்படுத்தப் படும் கருவிகள் அனைத்தையும், இரத்த சேமிப்புக்குப் பயன் படுத்தும் கருவிகள் அனைத்தையும் நன்கு 160 டிகிரி சென்டிகிரேட் உலர் வெப்பத்தில் ஒரு மணி நேரத்துக்குக் கொதிக்க வைத்தால் 15 நிமிடம் கொதிக்க வைத்து நோய்த் தடைச் சுத்தம் செய்து (Sterilize) பயன்படுத்துவதன்மூலம் குருதிநீர்க் காமாலை தொற்றுவதைத் தவிர்க்கலாம்.

ஒரே ஊசி மூலம் தொடர்ந்து பல நோயாளிகளுக்கு . ஊசி போடக்கூடாது.

ஒரு முறையே பயன்படுத்தி எறிந்துவிடக்கூடிய (Plastic போன்ற) ஊசி மருந்துச் செலுத்துக் குழாயையும், ஊசியையும் பயன்படுத்துவது நல்லது.

குருதிநீர் காமாலைக் வேறு எந்த முறையில் பரவுகிறது. என்பது தெரியவில்லை.

மக்கள் தொகையில் ஒரு பகுதி முதியவர்கள், தங்கள் இரத்தத்தைப் பிறருக்குச்செலுத்துகையில், காமாலை நோய் பரப்பும் வைரஸை இரத்தத்தில் பெற்றுள்ளனர் என்று தெரிகிறது. இத்தகையவர்களே குருதிநீர்க் காமாலை நோய் பரப்புவோராக உள்ளனர். ஒரு முறை இத்தகைய இரத்தம் செலுத்தப் படுவோர் இத் தொற்றுதலை நீண்டகாலத்துக்கு வைத்துக் கொள்கின்றனர். இது ஊசி மூலமாகச் செயற்கை முறையில் பரவுகின்ற விந்தையான நோய்.


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்




## 14. நிலையை ஒழிக்க நினை!

பிள்ளையர்கள் ஒன்றிரண்டு பெற்றால்நம் வாழ்வினிலே
எள்ளளவும் தொல்லைதுயர் இல்லையடி—கிள்ளையே
பலசேய்கள் பெற்றுப் பயனின்றி வாடும்
நிலையை ஒழிக்க நினை!

—கலைநம்பி, சீர்காழி.

இரவும் முழுநிலவும் என்தலைவி ! உன்றன்
வரவு தனையெண்ணி வாட்டும்!—உறவே
அலைபோலென் நெஞ்சத்தில் ஆர்ப்பரிக்கும்! தாக
நிலையை ஒழிக்க நினை!

—நெல்லை. ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

வல்லதாந் தாய்மொழியின் வாயிலாய்க் கற்பதுவே
நல்லதாம் என்றுணர்ந்து நந்தமிழில்—எல்லாக்
கலையும் அறிவியலுங் கற்பதற் கில்லா
நிலையை ஒழிக்க நினை!

—பு. தே. வேங்கடகிருஷ்ணன், சென்னை-1.

மின்னல்விழிப் பார்வையினை வேண்டியுள்ளம் ஏங்குதடி
என்றன்நிலை காண்பதற்கும் ஏன்தயக்கம்?—உன்றன்
கொலைவாள் விழிவீச்சின் கூர்மையில்என் துன்ப
நிலையை ஒழிக்க நினை!

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

செந்தமிழ்வாழ் நாட்டினிலே சீர்பரப்பும் ஏருழவா!
வந்தவரை வாழவைப்பா யுன்தொழிலால்!—இந்த
நிலையதனை நன்கறிந்து நீயுழைத்துப் பஞ்ச
நிலையை ஒழிக்க நினை!

—அ. முத்துசாமி, பேரையூர்.

நாட்டிலே உற்பத்தி நாளும் பெருக்கென்றால்
வீட்டின் தொகைபெருக்கம் வீண்மனமே!—கேட்டிலையோ!
அளவுக்கு மிஞ்ச அமுதமும்நஞ் சாகுமிந்
நிலையை ஒழிக்க நினை!

—க. ச. சூசை, போச்சம்பள்ளி.

ஆண்டா னடிமையென ஆண்டவனா செய்திட்டான்?
வேண்டாத இக்கொடுமை வேண்டாமே—தீண்டாப்
புலைச்சாதி என்றோர் புறம்வாழ விட்ட
நிலையை ஒழிக்க நினை!

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

விண்ணூர்தி யின்றேல் வெளிநாட்டை வேண்டலாம்
தண்ணீரின் ஊர்தியும் 'தா' எனலாம்;—உண்ணும்
நிலக்குணவு கேட்டிரத்தல் நீதியல்ல வென்(று)அந்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் சோ. பா., வேதாரண்யம்.

எண்ணிப்பார் பிள்ளைகள் எத்தனை என்பதையும்
எண்ணிப்பார் இத்துன்பம் ஏனப்பா?—வண்ணக்
கலையைப்போல் எண்ணிக் கருத்தடைசெய் திந்த
நிலையை ஒழிக்க நினை!

—இரா. வைரமுத்து, சென்னை-30.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு கலைநம்பி,
மே/பா. புலவர் மருதங்குடி வெங்கடேசன்,
வள்ளுவக்குடி (அஞ்சல்),
மாயூரம், தஞ்சை மாவட்டம்.

கூட்டில் உயிர்வாழக் கூலிகளாய்ப் பாடுபட்டும்
வாட்டும் துயரில் வதைவாரை—நாட்டில்
பலவழியில் ஏய்த்துப் பயனடைவோர் வாழும்
நிலையை ஒழிக்க நினை!

—துறவி, சென்னை-12.

செய்யாதே நற்பணிகள்; செய்பவரைப் பார்த்துவசை
பெய்வாரே பண்பில்லார் பீடழித்(து)—உய்ய
மலைபோல நீநிமிர்ந்து மாற்றலரின் பொய்யாம்
நிலையை ஒழிக்க நினை!

—தா. சு. ஆ. தமிழ்க்குமரன், ஈரோடு-1.

இன்பத் தமிழ்நாடும் ஏற்றமிகு செந்தமிழும்
அன்புத் தமிழ்மக்கள் அத்தனைபேர்—இந்நாள்
கலைஞர் அருளால் களிப்பதனால் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, எழும்பூர்.

வர்க்கம் இரண்டு வகுத்தான் இறைவனெனத்
தர்க்கம் புரிவோர் தலைகுனிய—சொர்க்கம்
இலையென்ற போதும் இருவர்க்கம் என்னும்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்-1.

உண்ண உணவின்றிக் கட்ட உடையின்றி
ஒண்ட இடமின்றி ஊரெல்லாம்—உண்டிக்
கலைந்திரந்து வீதியிலே அல்லலுறு வோரின்
நிலையை ஒழிக்க நினை!

—எஸ். ஆரோக்கியசாமி, கடலூர்-1.

பன்னாட்டில் பெற்ற படிப்பினையால் தான்பிறந்த
பொன்னாட்டை நன்கு புதுக்கிவிட—உன்னும்
கலைஞர் மனம்போல் கடும்உழைப்பால் துன்ப
நிலையை ஒழிக்க நினை!

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-15.

பிஞ்சுக் குழந்தை பிணியால் தவிக்குதென
நெஞ்சம் துடிக்கக்கை நீட்டிநிதம்—கஞ்சிக்(கு)
அலைந்து திரிவார் அவதியுறும் இந்த
நிலையை ஒழிக்க நினை!

—க. ஒப்பிலான், திருச்சி-15.

மலையும் விரிகடலும் மாநதியும் மீனும்
சூலையும் பெரும்பொழுது கோணா—நிலைபாய்
அலைகா விரிபாய அண்டையர்தம் பேத
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் கு. பக்தவத்சலன், கல்லக்குடி.

கல்விக்குக் கால்பங்கைக் கன்னித் தமிழரசு
ஒல்லும் வகையான் ஒதுக்கியதால்;—நல்லாய்!
அலையும் மனத்தை அடக்கிநீ கல்லா
நிலையை ஒழிக்க நினை!

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

பாதிப்பேர் பிச்சைபெறப் பாதிப்பேர் இன்பமுறல்
நீதியன்று தோழா நிமிர்ந்துடனே—யாதும்
இலமென்றே யாண்டும் இரந்துண்ணும் தீய
நிலையை ஒழிக்க நினை!

—மு. முத்துக்கிருஷ்ணன், பூரிசை.

சிறுதொழிலும் நல்லுறவும் சீராகக் காத்துப்
பெருகிவரும் நம்மக்கட் பேற்றைச்—சுருக்கின்
இலையாம் துயரம்; இடும்பை; வறுமை
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் ச. சுந்தரேசன், பூட்டுத்தாக்கு.

உள்ளத்தில் நஞ்சும் உதட்டில்தேன் பேச்சுமுள்ளோர்
கள்ளத் தனவாழ்க்கைக் காட்சியெலாம்—முள்ளை
மலர்மறைக்கும் காட்சியே; வாழ்வரிக்கும் இந்நோய்
நிலையை ஒழிக்க நினை!

—வித்துவான் ச. சீத்தாராம், கோம்பை.

உண்ண உணவும் உடுக்க உடையோடு
கண்ணயரத் திண்ணையும் காணாராய்—மண்ணில்
''இலையே கதி!''யென்று ஏங்கிடும் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—தி. லீலா, நெல்லை.

காட்டைத் திருத்திக் கதிர்கண்டே நற்றமிழ்
நாட்டை உயர்த்தி நலமெங்கும்—காட்ட
அலையெனப் பாய்ந்தே அழித்திடுமச் சோம்பல்
நிலையை ஒழிக்க நினை!

—பாக்கியமணாளன், மட்டப்பாறை.

எல்லா நலத்துடனும் ஏற்றம் பலவுற்று
வல்லார் மிகச்சிலரே வாழ்கின்றார்—பல்லோர்
தலைக்கெண்ணெய் இல்லாது தாழ்கின்றார்! இந்த
நிலையை ஒழிக்க நினை!

—வெ. செகநாதன், பி.எஸ்ஸி., பி.டி., குறிச்சி.

நின்றுகுத்த கண்ணீரும் நீள்மூச்சும் நெட்டுயிர்ப்பும்
அன்றுகுத்த ஆவியும் கொண்டன்பாய்—இன்றும்
இலையென்றே வாழ்விழக்கும் எம்வங்க மக்கள்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் அரு. பெரியசாமி, குமாரபாளையம்.

16—8—59

பாலும் பழச்சாறும் பத்தடுக்கு மாடிகளும்
மேலும்பல் வாய்ப்பும் சிலர்பெறவா?—கூழும்
இலையென்று கூவி இரக்கும் கொடிய
நிலையை ஒழிக்க நினை!

—ஆ. சுப்பிரமணியன், அணியாப்பூர்.

கன்னித் தமிழ்மொழியில் காணாத எக்கலையைப்
பின்னைப் பிறமொழியில் கண்டாரோ?—அன்னைத்
தலைமொழிதான் ஈண்டிருந்தும் கல்லார் இழிவு
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் மு. கண்ணுசாமி, அப்பநாயக்கன்பட்டி.

நற்றமிழர் நெய்யும் நயமான கைத்தறியைப்
பற்றுடனே வாங்கிப் பயனடைவோம்—பெற்றோர்
நிலையறிந்து, நேர்மையுடன் ''டெர்லின், டெரிகாட்''
நிலையை ஒழிக்க நினை!

—செ. செயராஜ், தொண்டாமுத்தூர் அஞ்சல்.

கண்ணுறங்க வீடில்லோர் கட்டும் உடையில்லோர்
மண்ணுறங்கித் துன்ப மடிதவழ்ந்தோர்—புண்ணேய்
மலையை ஒழித்தே மறுவாழ்வாம் பிச்சை
நிலையை ஒழிக்க நினை!

—பூ.அ. இரவீந்திரன், கோவை-2.

சின்னக் குழந்தையைச் சிற்றிடையிற் றூக்கியே
இன்னல் சுமந்துண(வு) ஏற்கின்ற—சின்னங்
குலையக் கருணை குரலைக்கேள்; ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—கோவை புகழேந்தி, சென்னை-24.

வாட்டும் வெயிலில் வருந்துகின்ற பாட்டாளி
மாட்டுக்கும் கீழினமாய் வாழ்கின்றான்—நாட்டின்
தலைவிதியை நாம்மாற்றி வைக்கத்தான் அந்த
நிலையை ஒழிக்க நினை!

—சோலை இளம்பரிதி, சேயாறு.

ஆயகலை அத்தனையும் ஆங்கிலத்தில் கற்றால்தான்
தூயபயன் கிட்டுமெனச் சொல்வோரின்—மாய
வலையில் விழுந்து மதிமயங்கும் மக்கள்
நிலையை ஒழிக்க நினை!

—மு. சிவலிங்கம், பி.எஸ்ஸி., வேடசந்தூர்.

எத்திப் பிழைப்பாரும் பெற்றுப் பிழைப்பாரும்
கொத்திப் பிடுங்கும் கொடுமையினால்—நித்தம்
தலைகவிழ்ந்து சிந்தும் தலைவர்கள் கண்ணீர்
நிலையை ஒழிக்க நினை!

—ஆர். பூமா, அருப்புக்கோட்டை.

தீண்டாமை எண்ணம்; திருந்தாத சாதிமுறை
மாண்டேனும் நீக்கிடுவாய் மாத்தமிழா!—ஈண்டே
அலையின் துரும்பாய் அலைகின்ற ஏழை
நிலையை ஒழிக்க நினை!

—மு. வில்லவன், திண்டுக்கல்.

திறமைக்குப் பட்டத்தைத் தேர்ந்தளித்தால் காணப்
பொறுமையால் தொல்லைதரும் போக்கை—அறவே
கலைசூழ்நம் நாட்டில் கருவறுத்தே தீய
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

சிங்கமெனச் சீறியெழு தீதகற்ற; கல்லாமை
மங்கிவிழப் பொங்கியெழு, வீறுகொண்டு—எங்கும்
வலைசூழ் பறவையென வாடிநிற்கும் இல்லார்
நிலையை ஒழிக்க நினை!

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

பொருளென்று சொல்லிப் புறப்பட்டாய்; யானே
பொருளற் றவளாயிங்(கு) ஆனேன்—திருவே!
கலைநிலவும் சுட்டெரிக்கும் வாட்டும் தனிமை
நிலையை ஒழிக்க நினை!

—செண்பகப்பிரியன், லோகநாதபுரம்.

தொழுநோயால் துன்புற்றுத் தூர்நாற்றச் சீழ்வீழ்ந்(து)
அழுகியகால் கையினராய் யாண்டும்—பழுதாம்
புனைவாழ்வால் பிச்சைக்குப் போயலைவார் தங்கள்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.

திட்டமிட்டுப் பெற்றுச் சிறுகுடும்ப மாய்வாழ
நட்டமில்லாப் பல்வழிசொல் நற்குடும்பத்—திட்டக்
கலையை அறியாது கற்றாரும் வாழும்
நிலையை ஒழிக்க நினை!

—க. தங்கமுத்து, இராயப்பன்பட்டி.

இல்லாமை யால்வாடும் ஏழையர்கள் வாழ்ந்திடவும்
கல்லாமை நீங்கிக் கவின்பெறவும்—நல்லாய்!
தலையைக் கொடுத்தேனும் தாளா வறுமை
நிலையை ஒழிக்க நினை!

—பாட்சா கிருட்டிணமூர்த்தி, பூரிப்பாக்கம்.

பஞ்சுபடும் பாடு படுமேழை வாடுகிறார்
வஞ்சகத்தால் செல்வரிங்கு வாழுவதோ?—நெஞ்சே!
உலைக்கரிசி இன்றி உழல்வாரின் ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—குழ. அண்ணாமலை, கோவை.

வேலையில்லை நாளெல்லாம் வேர்வைமிகப் பாடுபட்டும்
கூலியில்லை என்ற குறையோடும்—ஞாலம்
நலமதனைத் தேடி நலிகின்ற பிச்சை
நிலையை ஒழிக்க நினை!

—ச. குஞ்சிதபாதம், வேலூர்.

கல்லாமை, மூடம், கணக்கில் மகப்பெருக்கம்,
இல்லாமை, இன்றமிழிற் பற்றின்மை,—பொல்லாக்
கொலைகளவு, வஞ்சம், கொடுநோய்க ளென்ற
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் சயராமன், தொட்டியம்.

வன்முறை யால்நாட்டை வாழவைக்க லாமென்று
கொள்முறையைக் கையாளும் கூட்டமே!—என்றும்
தலையை அழித்துத் தருக்கிடவே எண்ணும்
நிலையை ஒழிக்க நினை!

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

நல்வளஞ்சேர் நாடிருக்க, நாடி உழைத்திடவே
வல்ல உடலிருக்க வாடுவதேன்?—செல்வர்
தலைவாசல் தோறும் தலைதாழ்ந் திரக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—ஆசிரியர் பி. சிவலிங்கம், ஆலப்பட்டி.

அற்பத் தொழிலாய், அடிமைக் கொருவித்தாய்,
கற்றோரும் நாணும் கறையுடைத்தாய்—நிற்கும்
நிலையை உருவாக்கும்; நீளுலகின் பிச்சை
நிலையை ஒழிக்க நினை!

—கோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

அன்பாய், அமுதாய், அறிவார்ந்த பேரழகாய்
இன்ப மழைபொழியும் ஏந்திழையே!—துன்ப
வலைசூழ வாடுகிறேன்; வந்தேன்; தனிமை
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

ஆக்கப் பணிசெய்ய ஆர்வங்கொள்! நல்லறிவை
நோக்கித் தொழுதிடு; நன் நூலைக்கல்!—நாக்கில்
விளையாட வேண்டாம்! விரைந்துநீ அஞ்சும்
நிலையை ஒழிக்க நினை!

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

தண்டா மரைமுகத்துச் சந்தனக் கன்னங்கள்
கண்டால் சிவக்காதோ, கார்குழலே!—உண்டால்
மலைத்தேன் உதட்டில் வழியாதோ? எந்நோய்
நிலையை ஒழிக்க நினை!

—காங்கேயன், வெங்கல்பாளையம்

சின்னஞ் சிறுகுடிசை; சிற்றாடை நூறுதையல்;
உண்ணும் உணவிற்கும் ஓடேந்தல்—கண்ணில்
உலைபாயக் காய்கின்ற உம்மக்கள் துன்ப
நிலையை ஒழிக்க நினை!

—இராம சுப்பையா, தஞ்சாவூர்.

பிறவாத பேரின்பம் பிள்ளை அதிகம்
பிறவாது காத்தலின் பின்னும்—பிறந்தார்
அலைந்தும் இரந்தும் அழுதே பிழைக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் துரை. தில்லான், கோவிலூர்.

சேலத் திரும்புக்கும் சேதுக் கடல்துறைக்கும்
ஆலயத்தில் செந்தமிழில் அர்ச்சனைக்கும்—சிலக்
கலைஞர் வழிவகுத்தார்; காய்மனத்தார் தாக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—கரு. சிவப்பிரகாசம், நாட்டரசன்கோட்டை.

நாட்டுரிமை வாக்குரிமை நாவுரிமை மற்றும்நாம்
ஏட்டில் எழுதுரிமை பெற்றுமென்?—நாட்டில்
தொலைவில்நில் தீண்டாதே தொட்டால்தீட் டென்பார்
நிலையை ஒழிக்க நினை!

— பாரி, இலாலாப்பேட்டை.

எச்சில் இலையை இழுக்கின்ற நாயுடனே
பிச்சை யெடுப்போர் பெரும்போரை—நச்சி
அலையும் துயரத்தை ஆக்கம் சிதைக்கும்
நிலையை ஒழிக்க நினை!

—புலவர் க. நாகேஸ்வரன், திருத்தணி.

ஏடன்றிப் பிச்சை யெனும்சொல்லை இன்றிந்த
நாடறியா தென்றோதும் நாள்வரவே—ஓடி
அலைந்துழைக்கும் ஆட்சியீதை ஆதரித்தே ஈன
நிலையை ஒழிக்க நினை!

—எம். மார்க்கபந்து, அரக்கோணம்.

ஊழை வலியுறுத்தி உண்டுபலர் வாழ்ந்தாலும்
ஏழைச் சிரிப்பில் இறைவனைக்காண்—தோழா!
அலைந்துண்டு வாழும் அவலமிகு ஏழ்மை
நிலையை ஒழிக்க நினை!

—அரசுப் புலவர், வில்லிசேரி.

வள்ளுவன் கூறிய, வாணிய நீதியினை
எள்ளளவும் நெஞ்சில் இருத்தாது—கள்ள
விலைக்குப் பொருட்களை விற்றுயரும் வஞ்ச
நிலையை ஒழிக்க நினை!

—சு. மாரியம்மாள், முதலிபட்டி.

முக்கியமான பல வரலாற்றுச் சின்னங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. இவைகளைப் பொதுமக்கள் அறியாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை வல்லுநர்கள் இவற்றைப்பற்றித் தமிழில் நல்ல நூல்கள் எழுதாமல் இருப்பதும் ஒன்று. சில சமயங்களில் வரலாற்றுக் கதை எழுதும் ஆசிரியர்கள் இச்சின்னங்களைச் சுற்றிக் கதை புனைந்து எழுதியவுடன் அச்சின்னங்களுக்குப் பெருமை கிடைத்து வருகிறது. இவ்வாறாகப் பெருமை அடைந்த இரு ஊர்களை நாம் இங்கே எடுத்துக் காட்டலாம். மாமல்லபுரத்தைப் பற்றி நூறு ஆண்டுகளாக வரலாற்று ஆசிரியர்களுக்குத் தெரிந்திருந்தாலும் பொதுமக்களிடையே மாமல்லபுரத்துக் கலைக்கோயில்கள் அவ்வளவு புகழ் பெறவில்லை. ‘கல்கி’ எழுதிய சிவகாமியின் சபதம் வெளி வந்தபின் அக்கலைக் கோயில்களைக் காணவும் புகழவும் மக்களிடையே பேரார்வம் ஏற்பட்டது. அதேபோல் ராஜராஜேஸ்வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயில் பொன்னியின் செல்வன் வெளியான பிறகு பெருமதிப்புப் பெறத் தொடங்கியது. சுமார் இருபது, இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கவனிப்பாரற்ற நிலையில் புதர் மண்டிக் கிடந்ததை உள்ளூர் வாசிகள் நன்கு அறிவார்கள்.




[illegible] போலவே இன்னும் பல முக்கியமான வரலாற்றுச் சின்னங்களும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில். விஜயாலய சோழன் காலத்துக்குச் சற்று முன்னர் தொடங்கிய சோழர் சிற்பக்கலையின் திறமையை மிகப் பெரிய வடிவில் ராஜராஜனின் ராஜராஜேஸ்வரமாக நாம் காண்கிறோம். இக்கோயில், வடிவில் பெரியது; கலைத் திறமையுடன் கட்டப்பட்டுள்ளது.

சோழர் கலை முதிர்ச்சி அடையாத காலத்தில் தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டது என்றால், நல்ல தேர்வும் முதிர்ச்சியும் பெற்ற சோழர் சிற்பக்கலை எப்படி இருக்கும்? இதைத்தான் நாம் தாராசுரம் ஐராவதேஸ்வரத்தில் காண்கிறோம். ஐராவதேஸ்வரத்தை விடச் சிறந்த சோழர் சிற்பத் திறன் கொண்ட கோயில் வேறு இல்லை என்றே சொல்லலாம். தாராசுரம் என்று இப்பொழுது அழைக்கப்படும் ஊர், முன்னர் ராஜராஜபுரம் என்றே வழங்கிவந்தது. இக்கோயில் கட்டப்பெற்ற காலத்திலேயே ராஜராஜபுரம் ராராரம் என்று பெயர் மருவி வழங்கி வந்தது. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் இரயில்பாதையில் உள்ளது. கும்பகோணத்துக்கு அடுத்த நிலையம் ஆகும். நிலையத்துக்கு வெகு அருகிலே இக்கோயில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து தஞ்சை செல்லும் பெருவழியில் பட்டீசுவரத்துக்காகப் பிரியும் கிளைப் பாதையில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இக்கோயில் இருக்கிறது. கோயிலுக்கு முன்பாகத் தற்பொழுது பட்டு நூல் நெசவு செய்வோர் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

இக்கோயில் தற்பொழுது ஒரு மதிலுடன் இருக்கிறது. இதையும் இதற்கடுத்த தேவநாயகி அம்மன் கோயிலையும் சேர்த்து மதில்கள் ஓடி இருக்கின்றன என்று தெரிகிறது. கோயிலுக்கு முன் தற்போது தோரணவாயில் எனப்படும் வாயிலொன்று இருக்கிறது. இதற்குமேல் ஒரு கோபுரம்

இதுவரை இக் கோயிலைப் பற்றி எழுதியுள்ள அனைவரும் கூறி இருக்கிறார்கள். ஆனால், நன்றாக ஆராய்ந்து பார்த்தால் வாயில் கட்டப்பட்டதே தவிர கோபுரம் எழும்பவில்லை என்பது தெரியும். இதற்குச் சான்றாக வாயிலின் உள், மேல் பாரத்தைத் தாங்குவதற்காகப் பெருங்கற்களைக் கொண்டு அடுக்கப்பட்ட கல் சுவர் இன்னும் எடுக்கப்படாமலேயே இருக்கிறது. இது மட்டுமன்றி வாயிலின் இருபுறத்தேயும் உள்ள இடி பாடுகளினின்றும் இத்தோரண வாயிலின் அடிப் பீடத்துக்கு மேல் உள்ள பகுதிகள் கட்டுத் தளர்ந்திருப்பதையும் கொண்டு, இவ்வாயில், மிக அவசரமாகக் கட்டப்பெற்று இருக்கிறது என்றும் தெரிகிறது. இதைவிடப் பழைமையான சோழர் கோயில்கள் கட்டுத் தளராமல் இருப்பதையும் நாம் கவனிக்கலாம். இந்த அவசர நிலைமைக்குக் காரணம் இக்கோயில் கட்டிய இரண்டாம் ராஜராஜனுக்குப் பின் சோழ நாட்டில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நிகழ்ந்த போர்களும் அரசியல் குழப்பங்களுமேயாகும். கோயிலைச் சுற்றியுள்ள இரண்டாவது மதில் இருந்த சுவடுதான் தெரிகிறதேயொழிய அக்கற்களை அவ்விடத்தில் காணவில்லை. கும்பகோணத்தில் நாயக்கர் காலத்திலும் மராட்டிய மன்னர்கள் காலத்திலும் கட்டப்பெற்ற கோயில்களுக்கும் கட்டடங்களுக்கும் இக்கற்கள் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

தற்போதுள்ள முன் கோபுரத் தோரண வாயிலில் இரண்டு அழகான சாளரங்கள் உள்ளன. இவ்வாயிலினின்றும் நேராக உள்ளே நுழைந்தவுடன் ஒரு நந்தி மண்டபமும் அழகான


[illegible] உள்ளன. கட்டப்பட்டபோது இந்த நந்தி திறந்த வெளியில் இருந்திருக்கிறது. பலிபீடமும் சதுர வடிவாகத்தான் அமைந்துள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இக்கோயில் அமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் ஒன்று இப்படி பீடத்துக்குப் படிகள் அமைக்கப்பெற்றது. சற்றுப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பலி பீடத்தினுடைய சிற்ப அமைப்பும் படிகளினுடைய சிற்ப அமைப்பும் மாறுபட்டன என்று உடனே தெரிந்துவிடும். மேலும் பின் சேர்க்கையான படிகள் பீடத்துடன் சரியாகப் பொருத்தப்படவில்லை என்பது படத்திலிருந்து தெளிவாகிறது. கைப்பிடிச் சுவர்களின் இருபக்கமும் கோட்டம் (கோஷ்டம்) எனப்படும் இடத்தில் சிற்ப இலச்சினையாக அடிக்கடி காணப்பெறும் கோடியைப் பிடித்துக் கொண்டு ஒரு காலை

[illegible] யாளிப் பெண்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவர்களது தாதியர்கள் இருபக்கமும் நிற்கின்றனர்.

சுமார் ஒன்றரை அடியே உள்ள இவ்வுருவங்கள் தலை அலங்காரம், ஆபரணங்கள் யாவற்றையும் நுண்ணியதாகக் கொண்டுள்ளன. இவ்விரண்டு பெண்களிலும் இடது பக்கத்துப் பெண் மிக அழகானவள். இப்பீடமும் படிக்கட்டுகளும், சமீப காலம் வரை, கீழிருந்து சுமார் மூன்றடி வரை மூடப்பட்டு இருந்தபோது, இவ்வுருவங்கள் வெளியில் தென்படாமல் மண்ணுள்ளேயே இருந்தன. இதனால் ஓரளவுக்கு இந்த யாளிப் பெண்களின் அங்கங்களும் அழகும் விஷமிகளால் பாதிக்கப்படாமல் இருந்தாலும் உருவத்தின் வழவழப்பான பூச்சு எப்படியோ கெட்டுப் போயிருக்கிறது.

பலிபீடத்துப் படிகளில் உள்ள சில போர் வீரர்களும் அவர்களின் முகங்களும் கிரீடமும் கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள சிற்ப வகையை நினைவூட்டுகின்றன. படிகளின் தலைப்பில் உள்ள மூன்று கலசங்கள் இக்கோயிலில் உள்ள மூன்று முக்கிய தெய்வங்களுக்குக் கொடுக்கப்படும் பலி உள்ளது என்பது சிற்ப இலக்கணப்படி தெரியவருகின்றது. படிகளின் நுணுக்கமான வேலைகளைப்பற்றி இங்கு விவரிக்க இயலாது. இரண்டாம் ராஜராஜன் கட்டிய போது இருந்ததைவிட மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆகம வழிபாடுகள், பலிகள் அதிகப்பட்டு வந்தன என்பதை இப் பலிபீடத்தின் சேர்க்கை தெளிவுறுத்துகிறது.

இதன் அருகிலுள்ள நந்தி சிறியது. ஆனால் மிக அழ



பலிபீடம்-படிகள் மூன்றாம் குலோத்துங்கனல் சேர்க்கப்பட்டவை

கானது. அரச இலச்சனைகள் அவற்றின் முன்னங்கால்களில் பொருத்தப்பட்டுள்ளன. பத்ம, குமுத வரிசைகள் கொண்ட பீடத்தில் அமைக்கப்பட்ட இந்த நந்திக்கு முன் இதற்கான ஒரு சிறிய பலிபீடம் பத்ம வடிவில் அமைந்துள்ளது. இக்கோயிலின் முகப்பு-அதாவது முன் தோற்றம் போல் தமிழ் நாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இது இந்து ஆகம சில்ப விதிகளுக்கும் புறம்பானது. இதை வரலாற்று ஆசிரியர்கள் எப்படிக் கூறியிருந்தாலும் சரியான காரணத்தை எவரும் கூறவில்லை. இது ஆராய்ச்சிக்குரிய மிக முக்கியமான விஷயம். துவார பாலகர்கள் இல்லை. தூண்களும் அவற்றின் போதிகைகளும் அவற்றில் உள்ள மிக நுண்ணிய சிற்பங்களும் சிற்பங்களின் பாவமும் பௌத்த சிற்பக்கலையை நினைவூட்டுகின்றது.

முன் மண்டபத்துத் தூண்கள் சிற்பங்களைக் கொண்ட பட்டைகளை நாலாபுறமும் பெற்றுள்ளன. இச் சிற்பங்கள் மிகச் சிறியவை. அவ்வளவு ஆழமான வடிவம் கொண்டவை அல்ல. கொடிக்கருக்கு என்று கூறப்படும் வேலைகளை அதிகமாக இம் மண்டபத் தூண்களில் காணலாம். அமராவதி, காஞ்சிச் சிற்பங்கள்போல் ஆழமின்றிச் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்து விதானத்திலும் சிறுசிறு சதுரங்களாகப் பகுக்கப்பட்ட அறைகளில் கண் கவரும் சிற்பங்கள் உள்ளன. இவைகளைப்பற்றி விளக்கப் புகுந்தால் அது தனிக்கட்டுரையாகிவிடும்.

பொதுவாக, இரண்டாம் ராஜராஜன் காலம் வரை சோழர் கோயில்களில் காணப்படாத பல வடிவங்களை நாம் இத் தூண்களில் காணலாம். மேலோட்டமாகப் பார்த்தாலும் இவை யாவற்றையும், கடக்கப் பல மணி நேரம் வேண்டும். இச்சிற்பக் கொடிக்கருக்கு வேலைகளின் வரலாற்றை ஆராய வேண்டும்.

இம் மண்டபத்திற்குச் செல்ல இடது பக்கத்திலுள்ள சிங்கத் தூண்கள் அமைந்த ஒரு சிறு மண்டபத்தின் வழியாகப் படியேறிச் செல்ல வேண்டும். இப்படிகள் தற்பொழுது அவற்றின் பழைய அகலத்துக்குத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தால் திருத்திக் கட்டப்பட்டுள்ளன. இம் மண்டபம் சோழர்கள் காலத்தியப் பிற்சேர்க்கையோ என்று ஐயப்பட இடம் கொடுக்கிறது. முக மண்டபத்துக்கு மேல் உளளவை பல்லவர் பாணியில் அமைந்துள்ள பஞ்சரங்கள். ஆனால் ஸ்வஸ்திஸ்ரீ ராஜ கம்பீரன் திருமண்டபம் என்னும் இம்மண்டபத்தின் மீது 'நந்திகள்' அமைக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். இம்மண்டபத்துப் பெயர் இதன் தூண்களுக்கு மேல் வெட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்துத் தூண்களும் மிக கம்பீரமும் அழகும் வாய்ந்தவை. சோழர்களால் பல்லவ பாணியில் வடிக்கப்பெற்ற தூண்கள்; தூண்களைத் தாங்குகின்றன கம்பீரமான யாளிகள்.




இராஜகம்பீரன் திருமண்டபத் தூண்கள் பல அடுக்குகளாக வெட்டப்பட்டு ஒவ்வொரு அடுக்கிலும் சுமார் இரண்டிலிருந்து ஆறு அங்குல உயரம் வரை உள்ள அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தின் இடத்தையும் அமைப்பையும் கவனிக்கும்போது உத்ஸவ மூர்த்திகளின் கொலுக் காட்சிக்கு மட்டுமின்றி அரசாங்க தர்பார்களுக்கும் ஏற்றதாக இருந்திருக்கிறது. இராஜகம்பீரன் என்பது அரசனுடைய பெயர்.

கோயிலினுள்ளும் திருச்சுற்று மாளிகை எனப்படும் சுற்றுப் பிரகாரத்திலும் உள்ள பல திரு உருவங்கள் காலப்போக்கில் மறைந்துவிட்டன. அதாவது காணாமல் போய்விட்டன. எஞ்சியவற்றில் சில, தஞ்சைக் கலைக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்கும் பின்தங்கிய கற்சிலைகளே அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கோயில் கோட்டங்களில் இடம் கொண்டுள்ளன. இவைகளில் மிக முக்கியமானது மூன்று முகம் கொண்ட அர்த்தநாரி! முக மண்டபத்தின் உள்ளே உள்ள அம்மன் சந்நிதி துவாரபாலகி அழகானவள். உள் மண்டபத்து நுழை வாயி

... புறமுள்ள அன்னபக்ஷியையும் அதே அழகு கொண்டுள்ளாள். மற்றச் சிற்பங்களுக்கு முகம், மார்பு, ஆகியவை கம்பீரமாக அமைந்திருந்தாலும் கால்களுக்குப் போதிய உயரம் கொடுக்கப் படவில்லை.

கர்ப்பக்கிருகத்தின் வாயிலுக்கு அருகில் உள்ள மூர்த்தம் முருகனுடையது. பார்ப்பதற்கு பிரம்ம மூர்த்தம் என்றாலும் அயிலும், கேடயமும், வாளும் நெற்றிக் கண்ணும் கொண்டுள்ளதால் உண்மையில் அது முருகனே. சண்டேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் அமைந்துள்ள துர்க்கை, சோழ மகிஷாசுர மர்த்தினிக்குரிய எல்லா அம்சங்களும் அழகும் பொருந்தியவள். அவளது கம்பீரமான பார்வை மனத்தில் நிலைக்கிறது. சாளுக்கியத் தலைநகரான கலியாணபுரத்தை எரித்துச் சோழ அரசனால் கொண்டு வரப்பட்டு இக்கோயிலினுள் வைக்கப்பட்டிருந்த சாளுக்கிய துவாரபாலகர் திருவுரு, தற்போது தஞ்சைக் கலைக் கூடத்தில் இருக்கிறது. இச் சாளுக்கிய சிலையின் கிரீடமும் தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கிறது. இச் சாளுக்கிய சிலையின் கிரீடமும் அணிகலன்களும் அழகான வேலைப்பாடுகள் அமைந்தவை. ஐராவதேஸ்வரத்திலிருந்து கலைக்கூடத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட மற்ற முக்கியச் சிற்பங்கள் நர்த்தன கணபதி, சிவன், சிவன்மீது காதல் கொண்ட ரிஷி பத்தினியர். இவைகளில் ரிஷி பத்தினியர் சிற்ப வகை சற்றுக் கூர்ந்து நோக்கற்குரியது. பத்தினிகள் ஒவ்வொருவரையும் கவனிக்கும் போது முகவேற்றுமையை நன்கு காண்கிறோம். சிற்பமோ எவ்வித நுணுக்க வேலைப்பாடுகளும் இன்றி, வெறும் முதல் வரையாக இருக்கிறது என்றாலும் முகத்தில் கொண்ட ஏக்கம் கண்கள் மூலமாக நன்றாகத் தெரிகிறது. உளியில் இரண்டொரு வெட்டாலேயே கண்கள் அமைக்கப் பட்டுள்ளன. மிகப் பழைய சோழர், அதாவது முத்தரையர் வகைச் சிற்பக் கலையை மீண்டும் ஐராவதேஸ்வரத்துச் சிற்பிகள் எண்ணிப் பார்த்திருக்கின்றனர். தூண்களில் பல்லவர் வாகை இச் சிற்பியர் வடித்திருக்கின்றனர். கையில் சிவனுக்கு உணவு இடுவதற்குச் சென்ற ஒருத்தியிடம் அவனைக் கண்டு ஆடை குலையும் மற்றொரு பத்தினி பிக்ஷாடனனைப் பற்றிப் பேசுவதைக் காணலாம். இச் சிற்பங்களுக்கு நேர் மாறாக, உள்ள பாவத்தைக் கொண்டது நெற்றிக் கண்களைத் திறந்துகொண்டு கோபத்தால் நெறிந்த புருவங்களுடன் கஜ சம்ஹார மூர்த்தியைக் காண்கிறோம். இடம் பெயர்ந்த இன்னொரு சிறந்த சிற்பம் நர்த்தன விநாயகர். ஐராவதேஸ்வரத்தில் தற்பொழுது இச் சிற்பங்கள் இல்லை. இத் திருமூர்த்திகளுடன் இக் கலைக்கோயில்களைக் கற்பனை செய்துதான் பார்க்க வேண்டும். தெய்வங்களாக இத்திருக்கோயிலில் இருந்த அநேக அழகிய சிற்பங்கள், கலைக்கூடத்தில் இருந்தாலும், பெருமை இழந்து கம்பீரம் குறைந்து ஓரளவு பொம்மைகளாகத்தான் தோன்றுகின்றன. தற்பொழுது எஞ்சியுள்ள சிற்பங்கள் பல. அவைகளையும் கோயிலெடுப்பித்த மன்னன் வைத்த இடத்திலேயே வைத்துக் காப்பதுதான் நமது கடமை. இந்தச் சிற்பங்களை எல்லாம் கூர்ந்து ஆராய்ந்த பின்பு இரண்டாம் ராஜராஜன் காலம் முதல் மூன்றாம் குலோத்துங்கன் அல்லது மூன்றாம் ராஜராஜன் வரை வெவ்வேறு காலத்தில் இவை செய்யப்பட்டனவாகக் கருத இடமேற்படுகிறது.

இராஜ கம்பீரன் திருமண்டபத்தில் தூண்களைத் தாங்கும் யாளிகள்




இதேபோல், இக் கோயிலும் இரண்டாம் ராஜராஜன் காலத்துக்கு முன்னமேயே திட்டமிடப்பட்டு இருக்க வேண்டும். மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு சிற்ப வேலைகளையும் நுண்ணிய வேலைப்பாடுகளையும் உள்ளிட்டு திருத்திக் கட்டப் பெற்றது ஐராவதேஸ்வரம். இக்கோயிலின் பின்புறமுள்ள திருச்சுற்று மாளிகை தற்பொழுது மிகச் சேதமடைந்து காணப்படுகிறது. இப் பகுதிதான் மிக மிக முக்கியம். இப் பகுதி ஒரு பௌத்த விகாரத்தைச் சார்ந்தது என்று தெளிவாகிறது. இப் பகுதியின் அதிஷ்டானவரிசை, மூலஸ்தானத்தை விடத் தேய்ந்து போன பகுதிகள், திருக்கோயிலை விடக் காலத்தால் சில நூற்றாண்டுகளுக்கு முந்தியது என்று தெரிவிக்கிறது. தூண், போதிகை, அஷ்ட தேவர்கள் கொண்ட பலி பீடம், வெவ்வேறு விதமான பல கணிகள், நாட்டிய வகைகள் இவையும் மற்றும் பலவும் இதற்குச் சான்று. இவை எல்லாவற்றையும் விட இப் பகுதியின் படியின் அருகில் உள்ள கல்வெட்டு இதனைப் 'பள்ளி' என்று குறிப்பிடுவதால் இக் கருத்து உறுதியாகிறது. இதே பந்த வரிசையைக் கொண்டு இக் கோயில் கட்டப்பெற்றதனால், பௌத்தப் பள்ளியாக இருந்த பகுதிக்கும் சிவன் கோயிலாக இருந்த மூலஸ்தானத்துக்கும் வேறுபாடின்றிப், பார்ப்போருக்கு எந்தவித ஐயப்

பாட்டையும் எழுப்பாமல் திறமையாக வேலை செய்திருக்கிறான்.

பௌத்தமதம் பதினொன்றாம் நூற்றாண்டுக்குள் தமிழ் நாட்டில் முழுமையும் மறைந்துவிட்டது. இவ்விடத்தைப் பயன்படுத்தி அரசன் நல்ல சிவன் கோயிலை அமைத்திருக்கிறான். இவற்றில் பழைய பகுதியாகத் தெரிவது வாயில் முக மண்டபம், பின் திருச்சுற்று மாளிகை, புதியன, மூலஸ்தானம், கோபுரம், இராஜகம்பீரன் திருமண்டபம் கோயிலின் ஏனைய பகுதிகள் தோரணவாயில் முதலியன.

ராஜராஜபுரத்து ராஜராஜேஸ்வரம் எனப்படும் ஐராவதீச்வரமும் திரிபுவனத்து கம்பகரேஸ்வரமும் நடனக் கலை ஆராய்ச்சிக்கு மிக உதவி செய்வன. இசையும் ஆடலும் கோயில்களின் உதவியால் எவ்வளவு தழைத்து வந்தன என்பதற்குச் சான்றாகச் சுற்றுப் பிரகாரங்களின் பீடத்தில் கோயிலைச் சுற்றி நூற்றுக் கணக்கான நாட்டியத் தோற்றங்கள், இசைக் கருவிகள் வாசிப்போர்களுடன் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளின் உயரம் ஆறு அங்குலத்திற்கும் குறைவாகவே அழகிய தெளிவுடன் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளைக் கவனிக்கும்பொழுது கோயிலினுள் சுமார் முன்னூறு ஆண்டுகளாக வளர்ந்து கிடந்த புதர்களும் கரையான் புற்றுகளும் இச் செல்வங்களின் புதுமையை அழித்து விட்டன. கோயிலின் பின் பகுதியில் இக் கோயிலைக் கண்காணித்து வரும் மத்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சி தென் வட்டத்து அதிகாரிகள், இப் புற்றுக்களை அப்புறப்படுத்தும்போது நூற்றைம்பது பாம்புகளுக்கும் மேலாகக் கொல்லப்பட்டதென்று தெரிவித்தார்கள். இவைகளில் தப்பிய பல இன்னும் இந்தச் சிவத் தலங்களுக்கிடையில் வாழ்கின்றன. இக் கோயிலுக்கு இயற்கையின் அழிவாலும் நாயக்கர் காலத்திலிருந்து உண்டான அக்கறைக் குறைவாலும் ஏற்பட்ட சேதத்தைச் சரிப்படுத்தப் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் வேண்டும்.



இராஜகம்பீரன் திருமண்டபம்

இக் கோயிலின் ஒரு பகுதி பௌத்தர்களுடையதாக இருந்து அழிந்தது என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது வெள்ளைக்கல்லில் பிரபையுடன் கூடிய யானைமேல் வீற்றிருக்கும் அரசன் (இந்திரன்) வடிவில் தற்போது சற்றுத் துண்டாக உடைந்து இருக்கும் இரண்டடி உயரமுள்ள சிலையே. இதை நான் ஆராய்ந்து பார்த்ததில் இவ் வடிவம் ஏழு அல்லது எட்டாவது நூற்றாண்டுச் சிற்ப வகையைச் சேர்ந்தது என்றும், பௌத்த விகாரமாக இருந்த பொழுது வணங்கப்பட்ட தெய்வமாக இருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. சோழர்கள் இத் தெய்வத்தையோ, அல்லது விகாரத்துப் பகுதியையோ வாழ வைக்கவில்லை. அதைக் கோயிலினுள் சேர்த்துப் படிப்படியாக அதன் பெருமையைக் குறைத்திருக்க வேண்டும். மேலும் சில பௌத்த தெய்வங்களின் உருவங்களையும், இக் கோயிலுக்கு வெளியில் பழைய காலத்திலேயே எறிந்திருக்கிறார்கள். நல்ல வரலாற்று அறிவு கொண்ட கும்பகோணத்தைச் சேர்ந்த என் நண்பரொருவர், அக் கோயில் பலிபீடத்துக்குச் சற்றுத் தொலைவில் பத்மாசனத்தில் அமர்ந்திருந்த புத்தர் சிலையொன்று கிடந்ததாகவும், அதைச் சுற்றுப்புறத்தில் உள்ள சிறுவர்கள் '' கடன்காரச் செட்டி '' என்று கல்லால் அடித்துக் கொண்டு விளையாடுவதையும் தெரிவித்தார். இது முப்பது ஆண்டுகளுக்கு முன். திருக் கோயிலின் மூலஸ்தானம், கோபுரம் ஆகியவற்றில் இவ் வகையான எத்தகைய சான்றுகளும் கிடைக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் அவை மாற்றப்பட்டு இருக்க வேண்டும். அதிஷ்டானம் தேவகோட்டங்கள், மூர்த்தங்கள், கோபுரத்திலுள்ள கூரையாலான தெய்வங்கள் முதலிய யாவும் சில்ப ஆகம விதிகளுக்குப் புறம்பில்லாமல் அமைந்துள்ளன. காலத்தால் சிதைந்துபோன கோபுரத்திலிருக்கும் சில சிலைகளை நாயக்கர் திருத்தியுள்ளார். இன்னும் சில, பழைய அழகு குலையாமல் இருக்கின்றன. விமானமும் அதன் அடியிலுள்ள பகுதிகளும் நாயக்கருடைய வண்ணப் பூச்சுகள் பெற்றிருந்தன.

இவை யாவற்றையும் விடத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு உதவி செய்வன கருவறையின் வெளிப் பக்கத்தில் சைவ நாயன்மார்கள் அனைவருடைய கதைகளையும் சிற்பங்கள் அதிஷ்டானத்தில் மேல் வரிசையில் கோயிலைச் சுற்றி அமைக்கப் பெற்றுள்ளன. கல்வெட்டுகள் யாருடைய கதை என்பதைக் குறிப்பிடுகின்றன. இதைப் பற்றி ஏற்கனவே ஆராய்ச்சி நடந்து வருகிறது.

சைவ இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் இந்த நாயன்மார்கள் கதை வரிசையைக் கவனிப்பது இலக்கியச் சான்றுகளுக்குக் கால வரையறை செய்ய உதவியாக இருக்கும்.

இராஜராஜபுரமான தாராசுரம் சோழர் தலைநகர்களில் ஒன்றான பழையாறைக்கு அருகிலிருக்கிறது. இக்கோயிலினின்று சில சுரங்கப்பாதைகள் பழையாறைக்கும் அருகிலுள்ள திருவலஞ்சுழிக்கும் அரண்மனைக்கும் சென்றன என்பதற்குரிய அடையாளங்கள் தென்படுகின்றன. சுந்தர பாண்டியனால் பழையாறைக்கும் மற்ற தலைநகரங்களுக்கும் பொதுவாகச் சோழ நாட்டுக்கும் ஏற்பட்ட அழிவின்போது இக்கோயிலின் வழிபாடும் செல்வமும் குறைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. பின்னால் ஏற்பட்ட நாயக்கர் ஆட்சியில் கோயிலின் கருப்பக்கிரகத்தைவிட வடகிழக்குமூலையில் உள்ள பகுதிக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை அப் பகுதியும் அதைச் சார்ந்த மண்டபமும் விதானமும் நாயக்க வண்ண வேலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதைக் கொண்டு கூறலாம். சுமார் அறுநூறு ஆண்டுகளாக வாழ்விழந்து கிடக்கும் தாராசுரம் கோயில் சோழர் சிற்பக் கலைக்கு மட்டுமின்றி, இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றுக்கும் எடுத்துக் காட்டாக உள்ளது. சிற்பத் திறனில் சோழர்கள் கட்டிய கோயில்களுள் தாராசுரம் ஐராவதேஸ்வரத்தை விடச் சிறந்த ஒன்றைக் காண்பது அரிது.

கட்டுரை ஆசிரியர், டாக்டர் சுரேஷ் பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ., பயின்றவர். பின்னர் சில ஆண்டுகள் பூனா மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் உருசிய மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்தார். அங்கே உள்ள பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தொல்பொருள் இயல் உயர் ஆராய்ச்சிக் கழகத்தில் தமிழ்க் கல்வெட்டுகளை ஆராய்ந்து, தொல் பொருள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றார்.

தமிழ்நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சியில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவரே.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்


Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப்புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்.

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.
போன் : 16 தந்தி : சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :
41, நைனியப்பன் தெரு, G. T., சென்னை-1.
போன் : 21448

இரசாயனங்களின் மும்முனைப் பயன—



# பஞ்சம் பறந்து விடும்!

சந்திரா

உலகில் பெருகிவரும் மக்கள் தொகையை வைத்து, உணவுப் பற்றுக் குறை குறித்துப் பயங்கர மான ஒரு சித்திரத்தையே பல ரும் உருவாக்கிக் காட்டுகிறார்கள். வடக்கு மித வெப்ப மண்டலத் தில் 90 கோடி மக்கள் வாழும் தொழில் வளம் மிக்க 30 நாடு களில் மட்டுமே இன்று போது மான அளவு உணவு கிடைத்து வருகிறது. ஆனால் முன்னேற்றம் குறைந்த 70 நாடுகளில் 190 கோடி மக்களுக்குச் சரிவர உணவு கிடைக்கவில்லை. ஒவ் வோர் ஆண்டும் ஆயிரக்கணக் கானவர்கள் பட்டினியால் மரித்து வரும் நிலை உள்ளது. 1960-லிருந்து 1970 முடிய உள்ள பத்தாண்டுக் காலத்தில் முன் னேறி வரும் நாடுகளில் எல்லாம் உணவு உற்பத்தி பெருகியதை விட வேகமாக மக்கள் தொகை பெருகி வந்தது. இதே வகையில் பெருகிக்கொண்டு போனால் 1975 வாக்கில் உலகப் பஞ்சமே வரும் என்றும் அவர்கள் கூறி னார்கள்.

ஆனால், பஞ்ச அபாயத்தை முந் திக் கொண்டு பசுமைப் புரட்சி வந்தது. அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் கோதுமை, அரிசி விளைச்சல் பெருகியது.

### சோற்று விஞ்ஞானம்

இன்றைய மக்கள் தொகைக் கும் இனிப் பெருகும் மக்கள் தொகைக்கும் உணவு அளிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் உணருகின்றனர். மக்களும் இதில் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளனர். இத் தலை முறையிலேயே எல்லாருக்கும் போதிய உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்துள் ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்கச் செயற்கை இரசாயனங் களைப் பயன்படுத்தும் முனைப்பு 1840ஆம் ஆண்டிலேயே தொடங் கியது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த வேளாண் துறை இரசா யன வல்லுநர் வான் லீபிக் என் பவர், தழை உயிர்களுக்கு வேண் டிய ஊட்டம் யாது என்பதை ஆராய்ந்தார். ''தாவரம் வளர்ச்சி பெறுவதற்குக் கரையக் கூடிய உருவத்தில் ஓரளவு நைட் ரஜன் (வெடியம்), பாஸ்வரம் (எரியம்), பொட்டாசியம் (சாம் பரம்) ஆகியவை வேண்டும். இவற்றுக்குப் பதிலாகப் பிறவற் றைக் கொள்ளமுடியாது. இம் மூன்றும் தேவைப்படும் அளவு களை மாற்றி அளித்தாலும் பயன் படாது'' என்று அவர் கூறினார். அவருடைய ஆராய்ச்சியின் விளை வாக பாஸ்பேட், பொட்டாசியம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் வளர்ந்தன.

### காற்றில் கலந்த சத்து

ஆனால், காற்றிலுள்ள நைட்ர ஜனைப் பொருத்தமான கூட்டுப் பொருளாக மாற்றுவதற்குச் செய்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கவில்லை. 1908-ஆம் ஆண்டில்தான் பிரிட்ஸ் ஹேபர் என்பவரும் கார்ல் பாஸ்ச் என்பவரும், காற்றி லுள்ள நைட்ரஜனுக்கு நைட்ர ஜன் ஏற்றி அம்மோனியா (நவச் சாரம்) உண்டாக்கும் முறையைக் கண்டு பிடித்தார்கள். அதன் பின்பு நைட்ரஜனைத் தாதுக்களு டன் கலந்து உரங்களாகப் பயன் படுத்தும் முறை வந்தது.

செயற்கை உரங்களைப் பெரு மளவில் பயன்படுத்தி, வேளாண் மைத் துறையில் புதிய நுட்ப முறைகளைக் கையாண்டு உலகில் 3,500 கோடி மக்களுக்கு, அதா வது இன்றுள்ள உலக மக்கள் தொகையைப் போல 10 மடங்கு மக்களுக்கு வயிறார உணவு விளை விக்க முடியும் என்று நம்பப்படு கிறது. இன்று சாகுபடியில் உள்ள நிலங்களே அவ்வாறு விளைச்சல் தர முடியும். பெல் ஜியம், ஹாலந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் கையாளும் முறைகள் போதும்.

> மண்வளத்தைப் பெருக்கும் இரசாயன உரங்கள் பூச்சி பொட்டுகளை ஒழிக்கும் புதிய மருந்து வகைகள், தானியங் களின் ஊட்டச் சத்தைப் பெருக்கும் இரசாயனச் சேர்ப் பங்கள்—இவற்றின் விளைவாக உலகில் உணவுப் பஞ்சம் நேராத படி பற்றுக்குறை அபா யத்தை விரட்டியடிக்க முடியும் என்பதை விவரிக்கிறது இக் கட்டுரை!

### கண்ணாடிக் கூண்டில் பண்ணை—

கண்ணாடியால் ஆன சுவர் களும் கூரையும் கொண்டு, முற் றிலும் மூடப்பட்டு, உள்ளே விரும்பிய வகையில் தட்ப வெப் பம் அமைத்துப் பயிர் விளைவிக் கும் கண்ணாடி அறைப் பண்ணை களைப் பல்கேரிய நாட்டில் சுமார் 140 ஏக்கர் பரப்பிடத்தில் அமைத்திருக்கிறார்கள். இவை களில் செயற்கை உரங்களை முறை யாகப் பயன்படுத்தி ஆண்டு முழு தும் காய்கறிகள் விளைவிக் கிறார்கள். மேற்கு ஐரோப்பா வில் ஆண்டு முழுதும் காய்கறிகள் கிடைத்து வருவதற்கு இப்பண்ணை களே பெரிதும் காரணம்.

இப்போது உலகில் ஆண்டு ஒன் றுக்கு 27 மில்லியன் மெட்ரிக் டன் அளவு செயற்கை உரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. செயற்கை உரங்களின் விளைவால் கிடைக்கும் உபரி விளைச்சலைக் கொண்டு உலகில் பாதிப்பேருக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது. கி.பி.2000-ஆம் ஆண்டில் வாழப் போகும் மக்கள் தொகையின ருக்கு உணவு அளிக்க வேண்டு மானால் உர உற்பத்தியை ஆண் டுக்கு 90—95 மில்லியன் மெட் ரிக் டன் அளவுக்கு உயர்த்த வேண்டும்.

### புதுப்புதுப் பூச்சுகள்—

விளையும் பயிரும் உணவுப் பொருள்களும் பாழாகாமல்

காப்பதற்கும் இரசாயனம் உதவ வேண்டியுள்ளது. ஆண்டுஒன்றுக்கு 6 கோடிப் பேர்வீதம் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குக் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளும் போது, விளை நிலங்களின் கூறுகள் பத்தாயிரம் வகைப் பூச்சிகள் பெருகி வளரக் கூடிய தன்மையில் இருக்கும். அப்படிப் பெருகும் பூச்சி இனம், உணவுக்காக மனிதனோடு போட்டியிடும்.

பெருகும் பூச்சிகளை அப்படியே விட்டு விடுவோமானால் அவை தின்று மிச்சமிருந்தால் மட்டுமே மனிதனுக்கு என்ற நிலைமை கூட ஏற்பட்டு விடும். உணவுப் பொருள்களில் ஏற்படும் மொத்த நட்டத்தில் பூச்சிகளால் ஏற்படும் நட்டம் 12 சத விகிதம் என்றும், தாவர நோய்களினால் விளைவது 12 சதவிகிதம் என்றும் களைகளினால் ஏற்படுவது 10 சதவிகிதம் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள பூச்சி கொல்லி மருந்துகளை விரிவான அளவில் பயன்படுத்தி வரும் போதே இத்தகைய நிலைமை உள்ளது.

**பூச்சி மந்திரம்—**

உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும் ஐக்கிய அமெரிக்காவில் கூட இரசாயனப் பூச்சிகொல்லி மருந்துகள் பயன்படுத்தப் படாமல் விடப்படுமானால் உணவுப் பங்கீடு முறை அமலுக்கு வர நேரிடும் என்றும் உணவுக்கு முன்னைக் காட்டிலும் கால் பங்கு விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

பூச்சிகொல்லி இரசாயன மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்ட பின்பு, பழங்கால மௌடீக முறைகள் பல மறைந்தன. மந்திரம் போட்டுப் பூச்சிகளை விரட்டுதல் பயிர் நோய் நீக்கத்துக்காக, சேவல் அல்லது ஆடு அறுத்தல், ஆட்களைக் கொண்டு பெரிய பெரிய விசிறிகளை வீசி விரட்டுதல், போன்றவை மறைந்தன. இரசாயன பூச்சி கொல்லிகளில் 200 வகை மருந்துகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன;

ஜப்பானில் ஒரு ஹெக்டேர் (2.47 ஏக்கர்) நிலத்தில் பயன்படுத்தப்படும் பூச்சி கொல்லி மருந்தின் அளவு, ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவைகளில் பயன்படுத்துவதைப் போல ஐந்து மடங்கு ஆகும். ஜப்பானின் விளைச்சல் அமெரிக்கா, ஐரோப்பா விளைச்சலை விட இரு மடங்கு ஆகும்.

**சேமிப்பில் சேதங்கள் —**

இந்தியாவில் இப்போது விளைச்சல் அளவு குறைவாக இருக்கின்ற போதிலும் பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தி, சேமிப்புக் கிடங்குச் சேதங்களைக் குறைப்பதால் பற்றாக் குறை நீங்கி அனைவருக்கும் போதுமான உணவு கிடைக்கும் என்று புள்ளி விவர ஆராய்ச்சியில் தெரிகிறது. 1962—64 ஆண்டுகளில் இந்தியாவில் உணவு தானியச் சேமிப்பில் 50 லட்சம் டன் சேதமாகி வீணாயிற்று. 1962-ல் இந்தியாவில் இறக்குமதியான உணவு தானியத்தின் மொத்த அளவை விட இது 10 லட்சம் டன் அதிகமாமாகும்.

எதைப் பற்றியும் விவகாரம் செய்வதில் திறமை வாய்ந்த சிலர் பூச்சிகொல்லி மருந்துகளால் தீமை விளையும் என்று பேசுகின்றனர். ஆனால் உண்மை நிலவரம் இதற்கு மாறாகத்தான் உள்ளது. பயிர்களில் மிச்சமாகத் தங்கியிருந்த பூச்சிகொல்லி மருந்துகளால் யாருக்கும் எத் தீமையும் இதுவரை விளையவில்லை. பூச்சி கொல்லி மருந்துகளை மனிதன் உட்கொண்டால் ஆபத்து விளையும் என்பது உண்மை. ஆனால் தற்செயல் விபத்தாகவோ, கொலை நோக்கத்துடனோ, தற்கொலை எண்ணத்துடனோ தவிர, இம் மருந்துகள் மனித உடலுக்குள் தாமாகப் போக வாய்ப்பு இல்லை. அப்படியே போனாலும் ஆபத்து மிகக் குறைந்த அளவில் தான் இருக்கும்.

**களை கொல்லிகள்—**

உயிரியல் முறையில் பூச்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன ; என்றாலும் இரசாயன முறைக்கு மாற்றாக, பூச்சி ஒழிப்புக்கு வேறு முறை கிடையாது என்பதே இன்றுள்ள நிலைமை. விளை நிலங்களில் நெடுங்காலமாக நிலவியுள்ள சூழ்நிலை அமைப்பில் மேற்கொள்ளப் படும் மாறுதல்களில், பயிர்—பூச்சி சமன நிலை பாதிக்கப்படக் கூடும். அதன் விளைவாக நீண்ட நாள் வாழக் கூடிய புதுவகைப் பூச்சிகள் தோன்றக் கூடும். புதுத் தொற்று நோய்கள் பரவக் கூடும். இதனை யொட்டி இனி வரும் ஆண்டுகளில் பயிர்ப் பாதுகாப்பு வேலைகள் கூடுதல் முக்கியத்துவம் பெறும். பூச்சி ஒழிப்பு மருந்துகளை, விவசாயிகள் இப்போது வரவேற்கிறார்கள். இந்த மனப்பாங்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

வருங்காலத்தில் பாஸ்வர அமிலக் கொதியிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிகொல்லிகள் முக்கியத்துவம் பெறும். இவை பல வர்த்தகப் பெயர்கள் பூண்டு ஏற்கனவே விற்பனைக்கு வந்துள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் களை கொல்லி மருந்துகள் இனி மிகுதியாகப் பயனாகும்.

'அகத்தாகும் இரசாயனப் பொருள்' என்பது ஒரு புதிய இரசாயனம். இதனைத் திரும்பத் திரும்பப் பயிர்களுக்குப் போட வேண்டியதில்லை. இது பயிர்களின் நாளங்களுக்குள் பாய்ந்தோடிக் காப்புச் சக்தியைப் பயிரின் எல்லாப் பாகங்களுக்கும் பரவச் செய்கிறது.

உரத்துக்கும், பயிர்ப்பாதுகாப்புக்கும் இரசாயனம் உதவுவது போலவே தானியங்களின் புரதச் சத்து மிகுவதற்கும் இரசாயனம் பயன்படுகின்றது. லைசின், டிரிப்டோபான், மெத்தியோனைன் முதலிய அமினோ அமிலச் சேர்ப்பங்கள் இவ் வகையில் பயன்படுகின்றன. கோதுமையுடன் 0.4 சத விகித லைசின் சேர்த்தால் அதன் புரதச் சத்து 50 சதவிகிதத்துக்கு மேல் அதிகரிக்கிறது. தக்க லிசினையும், டிரிப்டோபானையும் சோளத்துடன் சேர்த்தால், புரதச் சத்து கிட்டத் தட்ட இரு மடங்கு ஆகிறது. சோயா அவரையுடன் மெத்தியோனைன் சேர்த்துச் சிக்கன முறையில் புரதச் சத்தைப் பெருக்கலாம்.

கி.பி. 2000 ஆண்டில் இவ்வுலகில் வாழப்போகும் 700 கோடி மக்களுக்கும் போதிய உணவும், உடையும், உறையுளும், கல்வி, வேலை வாய்ப்பு முதலிய வசதிகளும் தந்து, மக்கள் சூழ்நிலைக்கு அடிமையாகாமல், அதனை வென்று ஆளக் கூடியவர்களாக விளங்க வேண்டுமானால் பயன்பாட்டு விஞ்ஞானம் தான் அதாவது செயல் வடிவம் பெற்ற தொழில் முறை தான் அதற்கு உதவ முடியும்.

# சிட்-டெண்டர் விளம்பரங்கள்

## தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

சிட்-டெண்டர் அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கடித உறையின்மேல் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணியின் பெயர் எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள், மக்கள் நல்வாழ்வு பொறியியல் துறை, பொதுப்பணித்துறை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது அவைபோன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளரால் (மக்கள் நல்வாழ்வு பொறியியல்) எண் 17. சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் 25—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்

மக்கள் நல்வாழ்வு பொறியியல் பிரிவு, திருச்சி—நன்கு சோதனை செய்யப்பட்டு ISS/226/1962-லும் அதன் பின்பு திருத்தப்பட்ட விதிகளில் குறிப்பிட்டபடியுள்ள எம். எஸ். ராட்ஸ் சப்ளையும் டெலிவரியும் செய்தல்.

ஒப்பந்த வகை

முழுத் தொகை.

முன்வைப்புத் தொகை

ரூ. 6,000 (ஆறுயிரம் ரூபாய் மட்டும்.)

இந்தத் தொகை, டெண்டருடன் கஜானு செலானுக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கில் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு பொறியியல் கோட்டம், திருச்சி—3-ன் கணக்கில் வழங்கக் கூடிய பாங்க் காரண்டியாக (Guarantee) செலுத்தப்படவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் செக் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வேலை முடிக்கப்படவேண்டிய காலம் 2 மாதம்.

டெண்டர் பத்திரங்களின் விலை:

ரூ. 15.45 (விற்பனை வரி உட்பட).

டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு-பொறியியல் கோட்டம், பி-15, தில்லைநகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (21—8—1971 மாலை 5 மணி வரை.)

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வை பொறியாளர்.
(P.H.E.).

மதுரை-2,
20—7—71.

---

## டெண்டர் அறிவிப்பு

1—9—1971 முதல் 31—12—1971 வரையுள்ள காலத்தில் மருந்துகள் (drugs and medicines) சப்ளை செய்ய, புகழ்பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து "Tender for the supply of medicines due on 21—8—1971" என்று

உறையின்மீது தலைப்பிடப்பட்ட டெண்டர்கள் 21—8—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர் பாரம், அடியில் தரப்பட்ட முகவரியில் 20—8—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். "XXIII. Medical—J. Miscellaneous—Other receipts" என்ற தலைப்பில் டெண்டர் பாரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து டெண்டர் பாரம் பெறலாம். 11 காசுக்கு தனியாக ஒரு செலான் "XII Sales tax—Receipts under States Sales tax Act M.G.S.T. for sale of Tender Forms" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் டெண்டர் தாரர்களுக்குத் திருப்பித்தரப்படமாட்டாது.

டாக்டர்
(திருமதி) எம். சாரதா மேனன்,
M.D., D.P.M.,

கண்காணிப்பாளர்,
அரசினர் மனநோய் மருத்துவமனை,
சென்னை-10.

---

## உதகை நகராட்சி

டெண்டர் அறிவிப்பு

1971-ஆம்வருடம் செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி புதன்கிழமை மாலை 3·30 மணிக்குள் டைகர் ஹில் அணைக்கட்டைப் பழுது பார்ப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் உதகை கமிஷனர் அவர்களால் டெண்டர்கள் வாங்கப்படும். டெண்டர் நிபந்தனைகளும், டெண்டர் பத்திரங்களும் 6—9—1971 மாலை 4·00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 10·30 செலுத்தி அன்று மாலைக்குள் டெண்டர் பத்திரங்களை முனிசிபல் இன் சினீயர் ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டெண்டர் பத்திரத்தின் விலை ரூ. 10·30, செப்டம்பர் 6-ஆம் தேதிக்குள் முனிசிபல் கஜானுவில் செலுத்தப்பட வேண்டும்.

கி. அப்பாநாராயணன்,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்.

நாள் : 29—7—1971.

## தமிழ்நாடு அரசு

## பொதுப் பணித் துறை

### சிட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

ஆர்வி. எண். 19091/71, டி5. நாள்: 28–7–1971.

வேலையின் பெயர்—நாமக்கல் அரசினர் மாதர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் தளம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம், தர்மபுரி சர்க்கிள், சேலம்–4 அவர்களால் 6–9–1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3–15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகைப்பணம் (செலான் வடிவிலோ தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெப்பாசிட்டு வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டாகவோ மாநில அரசின் கடன் பத்திரங்களாகவோ—அல்லது தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.) | ரூ. 10,000 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) "P. W. Remittance III other remittance)" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பில்டிங்க் டிவிஷன்ஸ், சேலம்–5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும். | ரூ. 20. |
| 4 விற்பனைவரி [விற்பனைவரி XII Sales tax (d)] பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும். | ரூ. 0·60 |

5. வேலை முடிப்பதற்குரிய காலம்: (ஒன்பது மாதங்கள்) 9 மாதங்கள்.

| | |
|---|---|
| மேற்பார்வைப் பொறியாளர், சேலம்—தர்மபுரி சர்க்கிள், சேலம் 4 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கக் கூடிய தேதி. | 16–8–1971 முதல் 3–9–1971 வரை. |

மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ் நாடு மின்வாரியப் பத்திரங்களும், மதிப்பில் 25 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

கால் ரசீது டெப்பாசிட்டுகளும், பிக்சட் டெப்பாசிட் ரசீதுகளும் தொகை வசூல் நிபந்தனைக்குட்பட்டுக் கட்டுத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
28—7—1971.

---

## தமிழ்நாடு வனத்துறை.

### மதுரை வடக்குக் கோட்டம்.

### ஸ்டேஷன் வேகன் ஏல விற்பனை.

1955 மாடல் MSY 2667 பதிவு எண் கொண்ட பழுதடைந்த ஸ்டாண்டர்டு வேன் கார்டு ஸ்டேஷன் வேகன் ஒன்று அது எங்கு எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் தமிழ் நாடு கவர்னர் சார்பில் மதுரை வடக்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் (திண்டுக்கல்) அவர்களால் மதுரை காந்தி நகரிலுள்ள மதுரை மண்டல வனப் பாது காவலர் அலுவலகத்தில் 17—8—1971 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் அந்த வேனை, மதுரை மேலூர் சாலையிலுள்ள மதுரை தெற்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் பங்களா காம்பவுண்டில் பார்த்துக் கொள்ளலாம். விற்பனை நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கி. திருமலைராஜ்.

திண்டுக்கல்,
21—7—1971

மாவட்ட வன அலுவலர்,
மதுரை வடக்குக் கோட்டம்,
திண்டுக்கல்.

# டெண்டர்கள்

## தமிழ் நாடு அரசு,

## அரிசன நலத் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் பின்கண்ட இனங்களை வழங்குவதற்காக வரவேற்கப்படுகின்றன. விலைப் புள்ளிகளை ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக எழுதி, இயக்குநர், அரிசன நலத்துறை, சென்னை -5, அவர்களுக்கு 26-8-1971க்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் உள்ள மாவட்ட நல அலுவலர் அவர்களின் அலுவலகத்தில் பொருள்களை எப். ஓ. ஆர். (F. O. R.)-ல் வழங்க வேண்டும். விலைப் புள்ளிகளுடன் ஒப்பந்தக்காரர்களால் அளிக்கப்படும் பணி வசதிகள் பற்றிய தகவல்களும் அடங்கியிருக்க வேண்டும். விலைப்புள்ளிகள் அடங்கிய உறையின் மேலே, எந்த இனத்திற்கு விலைப்புள்ளிகள் என்ற விவரம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். விலைப் புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது எந்த வித காரணமும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்வதற்கும் அரிசன நலத்துறை இயக்குநர் அவர்களே முடிவான அதிகாரம் பெற்றவராவார்.

ஒப்பந்த விதிகளின்படி திருப்தியடைந்தால், ஒப்புக் கொண்ட விகிதத்தில் மாவட்ட நல அலுவலகர்கள், தொகையை பட்டுவாடா செய்வார்கள். இந்தப் பொருள்களுக்கான வரையறை விவரங்களை (Specification) இயக்குநர், அரிசன நலத்துறை, எழிலகம், சென்னை -5 அவர்களிடமிருந்து 21-8-1971-க்குள் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே தெரிவிக்கப்படும் தேதியில், மாதிரிக் கருவிகளையும் இயந்திரங்களையும் ஒப்பந்தக்காரர்களே தங்கள் சொந்தச் செலவில் சென்னை -5-ல் உள்ள அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் பார்வையிடுவதற்காகக் கொண்டுவர வேண்டும். மாவட்ட அலுவலகங்களில் வழங்கப்படும் பொருள்கள், சென்னையில் பார்வையிட்டு தேர்ந்தெடுத்த மாதிரிப் பொருள்களின் தரத்தை ஒத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவைகள் முழுவதும் மாவட்ட தலைநகரில், அதிகாரம் பெற்ற தொழில் நுட்ப அதிகாரியால், தள்ளுபடி செய்யப்படும்.

ஒவ்வொரு இனங்களிலும் வழங்க வேண்டிய எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்படும். அவர் பொருள்களை வழங்குவதற்கு முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தில் கண்ட விதிப்படி பொருள்களைக் குறிப்பிட்ட காலத்திலும், முறையாகவும் வழங்குவதற்காக, ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பில் 10 சதத் தொகையைப் பிணைப்பணமாகக் கட்ட வேண்டும்.

வழங்கவேண்டிய பொருள் இனங்கள்.

1. கருமான் வேலைக் கருவிகள்.

2. தச்சுக் கருவிகள்.

3. தையல் இயந்திரம் (காலால் இயக்குதல்) (துணி தைத்தல்), ஸ்டான்டு கவர் மற்றும் துணைக் கருவிகள்.

4. தோல் தைக்கும் இயந்திரம் (காலால் இயக்குதல்), கருவிகளுடன்.

5. லாண்டிரிகளுக்கான இஸ்திரிப் பெட்டிகள்.

6. முடிதிருத்துவோர் கருவிப் பெட்டி.

7. மரம் வெட்டுவதற்குரிய கருவிகள்.

**இயக்குநர்,**
**அரிசன நலத்துறை,**
**சென்னை-5.**

## ஏல விற்பனை அறிவிப்பு

ஒரு லாரி, எம். எஸ். ஒய். 1438 (பெட்ரோலில் ஓடுவது), காலி கோணிப்பைகள், எண்ணெய் பட்ட கோணித் துண்டுகள், தகரங்கள், இரும்புக் கழிவுகள், துத்தநாகத் துண்டுகள் முதலியன சென்னை -1, மின்ட் பில்டிங்ஸ், அரசினர் அச்சகத்தில் 9-9-1971 முற்பகல் 11-30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேற்கொண்டு விவரங்களுக்கும், ஏல அறிவிப்பு நகல்களுக்கும் இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசினர் அச்சகம், சென்னை -1 அவர்களுடன் தொடர்பு கொள்க.

**ஜி. ரங்காராவ்,**
**இயக்குநர்.**

எழுதுபொருள் அச்சுத் துறை
இயக்குநர், அலுவலகம்.
சென்னை -1.
நாள் : 28—7—1971.

## கோர்ட் விசாரணை

**ஸ்மால் காஸ் கோர்ட் மதராஸ்**
M. P. No. 1308 of 1971
Suit No. 3190 of 1963.

கே. வி. ராமானுஜ ஆச்சாரி —வாதி

எதிராக

வி. கோபாலகிருஷ்ண ரெட்டி
பிரதிவாதி—இறந்தவர்

1. காந்தம்மாள்
2. குருமூர்த்தி
3. சுந்தரமூர்த்தி
4. மோகன்

} பிரதிவாதியின் வாரிசுகள்.

14. ஜி. எச். ஹைரோட் க்ரோம்பேட் மதராஸ்.

இறந்துபோன கோபாலகிருஷ்ண ரெட்டியின் வாரிசுகளாக உங்கள் 4 பேரையும் சேர்ப்பதற்கு போடப்பட்டிருக்கும் மேற்படி மனு, 21-8-1971 காலை 11 மணிக்கு 3-வது கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது. அறியவும்.

**கே. திருவேங்கடாசாரி,**
**வாதி அட்வகேட்.**



16-8—8-அ*

## தமிழ்நாடு அரசு

## போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், மவுண்ட்சாலை, சென்னை-2ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3·00 மணி வரை கீழே ஐந்தாவது பத்தியில் குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண். | வேலையின் பெயர். | முடிக்கும் காலம். | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தத் தேதி. | ஒப்பந்தப் பத்திர விதிகளின் விலை விற்பனைவரி உட்பட. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | காஞ்சீபுரம் பணிமனையில் நேரப்பதிவறை, கழிவறை மற்றும் மதில்சுவர் கட்டுதல். | 8 மாதங்கள். | ரூ. 2,250. | 2—9—71. | ரூ. 15.55. |

கட்டுதல்/ஒப்பந்தம் : மொத்தத் தொகை ஒப்பந்தம்

ஒப்பந்தங்கள் மேலே ஐந்தாவது பத்தியில் குறிக்கப்பட்ட தேதியில் மாலை 3·15-க்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றை நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேலே குறிப்பிட்டவேலைக்கு மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி கீழ்க்கண்ட தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் (16-8-1971 முதல் 1—9—71 முடிய) பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களுக்கு அரசாங்க கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின்கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

எஸ். சிவாநந்தா,
தலைமைப் பொறியாளர்,
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து,
போக்குவரத்து இல்லம்,
சென்னை-2.

---

## ஏலம்

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது

வேங்கை, வெந்தேக்கு

மற்றும் பல ஜாதிகள்

இடம் : அரசாங்க தடி மண்டி, பேட்டை.

தேதியும், நேரமும் : 6—9—1971 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 300 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்குப் பேட்டை மண்டிச்சிறகை அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

# டெண்டர்கள்

## தமிழ்நாடு அரசு

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பிரிவு), கிண்டி, சென்னை—25.

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

வேலையின் எண் 1 .. .. மதுரைப் பல்கலைக் கழகத்தில் 30,000 காலன் திறனுள்ள ஆர்.சி.சி. மேல் மட்ட தண்ணீர்த் தொட்டி கட்டுதல்.

வேலை எண் 2 .. .. மதுரை, மதுரை-தேனீ சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் கணிதத் துறைக்காக ஃபேகல்டி கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 3 .. .. மதுரை, மதுரை-தேனீ சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் அஞ்சல் அலுவலகம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேலே கண்ட வேலைகளைத் தொழில் நுட்பக் கல்விப் பகுதிகளில் மேற்கொள்ளுவதற்காக, உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மேலே கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 23—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், அதே நாளில் மாலை 3-30 மணிக்கு, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை |
| 2 கட்டுத் தொகை .. .. | 1,875 | 4,000 | 1,375 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை பிளானுடன் | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்). |
| 4 வேலையை முடிக்க வேண்டியகாலம். | 6 மாதம். | 8 மாதம். | 6 மாதம். |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள். | 12—8—1971 முதல் | 21—8—1971. | |
| 6 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்க தகுதி வாய்ந்த பதிவாளர் பிரிவு. | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும் |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் (எக்காரணம் கொண்டும் இது திருப்பித் தரப் படாது) அரசு கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில் மதுரை, பல்கலைக் கழக டிவிஷன் நிர்வாகப் பொறியாளர் கணக்கில் கட்ட வேண்டும். விற்பனை வரியை தனி சலானில், கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கிலோ "XII. Sales tax (b) Receipts under state sales tax–Act. General Sales Tax)" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். சலான்கள் வந்த பின்னரே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் கட்டுமானப் பிரிவில் ஏற்ற பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் படமாட்டா.

கட்டுத் தொகை, சலான் வடிவிலும், ஷெட்யூல் பாங்குகளின் 'கால் டிபாசிட்' தொகை வடிவிலும் பெற்றுக் கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரிய 'பாண்டுகள்' தேசீய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியனவும் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சத விகிதம் குறைவாக அல்லது நிர்ணய மதிப்பு, இதில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி தர உத்தேசித்திருப்பவர்கள், உரிய வேலைப்பிரிவில் பெரிய கட்டுமான வேலைகளை மேற் கொள்ளுவதில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க சென்னை-25, தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
**சென்னை.**

## டெண்டர்

### தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

### ஒப்பந்த விவர அறிக்கை

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னாரது ஆணைப் படியும், திருநெல்வேலி வட்டம், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் 3—9—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடிகாரப் படி) இலக்கம் 18. திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2-ல் உள்ள அன்னாருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| | வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி.மீ. 14.8-ல் பாலம் கட்டுதல். | 9,400 |
| 2. | தொண்டி சுந்தரபாண்டியன் பட்டிணம் சாலை கி.மீ. 3.2-ல் பாலம் கட்டுதல். | 9,095 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நமூனாக்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலை ஒன்றுக்கு ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும் விற்பனை வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 19—8—1971-ஆம் தேதியிலிருந்து 1—9—1971-ம் தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் அன்னாரது அதிகார எல்கைக்கு உட்பட்ட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான செல்லுச் சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

பூ. சு. சதாசிவசாமி.

18, திருச்செந்தூர் ரோடு,
பாளையங்கோட்டை,

மேற்பார்வைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்
பணி, திருநெல்வேலி வட்டம்.

## இடமாற்ற அறிவிப்பு.

தமிழ் நாடு அரசு சிறு சேமிப்புத் துறை, சென்னை-9 கோட்டையிலிருந்து கீழ்க்கண்ட இடத்திற்கு 26—7—1971 முதல் மாற்றப்பட்டிருக்கிறது.

34, அண்ணா சாலை (மவுண்ட் ரோடு)
(கலைக் கல்லூரி எதிர்புறம்),
சென்னை-2.

புதிய தொலை பேசி எண் : 812223

ரா. குழந்தைவேலு, ஐ.ஏ.எஸ்.
இயக்குநர்.

## ஏல விளம்பரம்.

ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்த கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தோட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட மரங்களிலிருந்து பலன்களைச் சேகரித்துக் கொள்ளும் உரிமையை ஒரத்தநாடு மாவட்டக்கால் நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலகத்தில் 26—8—1971 காலை 11 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | மா மரங்கள் | 847 |
| 2 | புளிய மரங்கள் | 233 |
| 3 | இலுப்பை மரங்கள் | 479 |
| 4 | விளா மரங்கள் | 22 |
| 5 | முந்திரி மரங்கள் | 43 |
| 6 | நெல்லி மரங்கள் | 32 |
| 7 | கொய்யா மரங்கள் | 17 |
| 8 | தென்னை மரங்கள் | 377 |
| 9 | பலா மரங்கள் | 41 |
| 10 | பனை மரங்கள் | 1,549 |
| 11 | இலவம் பஞ்சு | 29 |

ஏலம் பற்றிய நிபந்தனைகள் மற்றும் விதிகளை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். கே. காளிமுத்து,
கண்காணிப்பாளர்,
மாவட்ட கால்நடைப் பண்ணை
ஒரத்தநாடு.

# டெண்டர்கள்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

''விருத்தாசலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் 1971—72-ஆம் ஆண்டுக்குக் கழிவுத்தாள்கள் வாங்கவும் அப்புறப் படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தப் புள்ளிகள்'' என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இயக்குநர், எழுதுபொருள் அச்சகம், சென்னை-1, அவர்களால் 25-8—1971-ல் அல்லது அதற்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், பதிவு அஞ்சல் ஒப்பத்துடன், இயக்குநர் எழுதுபொருள் அச்சகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு இயக்குநர் பெயரில் அனுப்ப வேண்டுமே தவிர, வேறு முறையில் அனுப்பலாகாது. மேற்கொண்டு விவரங்களுக்கு 4—8—1971 தேதியிட்ட தமிழ் நாடு அரசினர் அரசிதழைப் பார்க்க.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.
எழுதுபொருள் அச்சக இயக்குநர் அலுவலகம்,

சென்னை-1.
24—7—1971.

---

## தமிழ் நாடு சிறு தொழில்கள் நிறுவனம், லிமிடெட்.

35/2, உட்ஸ் சாலை, சென்னை-2.

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

எண் 70358/பிபிஜ/71,
நாள் 28—7—1971.

இந்த நிறுவனத்தின் ஒரு யூனிட் ஆன டான்சி லெதர் வொர்க்ஸ், பல்லாவரம், சென்னை -43க்குத் தேவைப்படும் காக்கி கான்வாஸ் (ஆலிவ் பச்சை) சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

23—8—1971 பிற்பகல் 2—00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அதே அவை திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை இந்த நிறுவனத்தின் துணை மேலாளர் (கொள் முதல்) அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில், விற்பனை வரி உள்பட ரூ. 5.25 ரொக்கமாகச் செலுத்தி அல்லது இந்த நிறுவனத்தின் சீனியர் அக்கவுண்டன்ட் அலுவலருக்குப் பண அஞ்சல் மூலம் செலுத்தி (இத் தொகை திருப்பித் தரப்படக் கூடியதல்ல) பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாக இயக்குநர்.

---

## வேலை வாய்ப்பு

---

### தமிழ் நாடு அரசு.

### தமிழ் நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு.

1971-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கொதிகலன் பணியாளர் (பாய்லர் அட்டண்டன்ட்) தேர்வுக்கு மனுக்கள் நடக்கும் இடம், தேர்வு நாள் பற்றிய விவரம் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்பெறும்.

இதற்குரிய மனு வடிவங்களையும் இதர விவரக் குறிப்புகளையும் பெற 9"×4½" அளவுள்ள 35 காசு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 15-9-1971-க்குள் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காத மனுக்களும், குறிப்பிட்ட முறையில் இல்லாத மனுக்களும் நிராகரிக்கப்படும். கொதிகலன் தொழிலில் கோரப்படும் செயல் முறை அனுபவமுடையவர்கள் மட்டுமே மனுச் செய்க.

என். பி. ராமரெட்டி,

நீராவிக் கொதிகலன் தலைமை ஆய்வாளர், தமிழ் நாடு கொதிகலன் பணியாளர் தேர்வு நடத்தும் குழுத் தலைவர், ஜம்மி பில்டிங்ஸ், மயிலாப்பூர், சென்னை-4.

---

## ஏலம்

---

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு

மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும்: 27, 28—8—71 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 800 கன மீட்டர்.

மேற்கொண்டு விபரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு எழுதவும்.

**எஸ். கொண்டாஸ்**

மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு



16-8—9எ

## டெண்டர்கள்

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

### தமிழ் நாடு

### ஒப்பந்த அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்களை மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழன்) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ் நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட் | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம், |
|---|---|---|---|
| | | ரூ, | |
| 1 | கும்பகோணம் நகரசபை எல்லைக்குள் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையில் மைல் 0/7-ல் ஒரு மேம் பாலம் கட்டுதல். | 31,000 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப) தஞ்சாவூர். |
| 2 | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி.மீ. 58/2 (மைல் 36/3-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 7,350 | ஷை |
| 3 | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி.மீ. 65/8 (மைல் 41/1-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 5,500 | ஷை |
| 4 | பட்டுக்கோட்டை ஒன்றியம் பலத்தலை கிராமசாலையில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல். | 3,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை—கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 11—8—1971 முதல் 25—8—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகை டி சிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெ சாலை—கிராமப் பொறியியல் பணித்துறை) அதிக எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும், "ரெவின டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலா டெண்டருடன் இணைத்து அனுப்ப வேண்டும். இ தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளு 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அ ஈட்டுப் பத்திரங்களும், தமிழ் நாடு மாநில மின்சார வாரி பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்ப பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்டுகளும், டெ சிட் அழைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற் கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாடாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர் பேங்க் ஒப்புதலைப் பெற்று டெண்டருடன் இணைத் அனுப்பப்படவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒ பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லா டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**

**மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.**

---

## ஏலம்

---

## தமிழ் நாடு அரசு வேளாண்மைத் துறை

### ஏல அறிக்கை.

1945 மாடல் ஒரு போர்டு ஜீப் (எம்.டி.யு. 2512 மதுரை 10, எல்லீஸ் நகர், மாவட்ட வேளாண்மை அலுவல அலுவலகத்தில் 25—8—1971 முற்பகல் 11 மணிக் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேற்கண்ட இடத்தில் எந்த வேலை நாளிலும் அலுவ நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசு நலன் கருதி ஏலத்தை ஒத்தி வைக்கவோ ரத்து செய்யவோ வேளாண்மைத் துறைக்குப் பூரண உரிமை உண்டு.

ஏல நிபந்தனைகள் குறித்து மேல் விவரங்களை மாவட்ட வேளாண்மை அலுவலர், மதுரை-10, அவர்களிடமிருந்து பெறலாம்.

**வேளாண்மைத் துறை இயக்குநர்.**

# தமிழ்நாடு அரசு

## ஒப்பந்த விவர அறிக்கை

## நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை

### திருநெல்வேலி வட்டம்

தமிழ் நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அன்னாரது ஆணைப் படியும் திருநெல்வேலி வட்டம் நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலேகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 22—9—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடிகாரப்படி) இலக்கம் 18, திருச்செந்தூர் சாலே, பாளேயங்கோட்டை, திருநெல்வேலி-2-ல் உள்ள அன்னாருடைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலே 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலேயின் பெயர். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1 தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 60 (மைல் 3/6)ல் பாலம் கட்டுதல். | 12,250 |
| 2 தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 13·8 (மைல் 8/4·5)-ல் பாலம் கட்டுதல். | 14,850 |
| 3 தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 1·8 (மைல் 1/1)ல் பாலம் கட்டுதல். | 8,080 |
| 4 தொண்டி சுந்தரபாண்டியன் பட்டினம் சாலே கி.மீ. 6·6 (மைல் 4/1)-ல் பாலம் கட்டுதல். | 9,075 |

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனேகள், பத்திரங்கள், நமூனக்கள் முதலியன கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் பணித்துறை, சிவகங்கை அலுவலகத்தில் வேலே ஒன்றுக்கு ரூபாய், 20 (ரூபாய் இருபதுமட்டும் விற்பனே வரி நீங்கலாக) விண்ணப்பத்துடன் செலுத்தி 13—9—1971-ம் தேதியிலிருந்து 20—9—1971 தேதி முடிய (இரு தினங்கள் உட்பட) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தங்களுக்கான முன்வைப்புத் தொகை சிவகங்கை கோட்டப் பொறியாளரின் பெயரில் ''ரெவின்யூ டெபாஸிட்' என்ற தலேப்பின்கீழ் அன்னாரது அதிகார எல்லைக்கு உட்பட ஏதாவதொரு அரசினர் கருவூலத்தில் கட்டி அதற்கான சீட்டுடன் ஒப்பந்தத்தை அனுப்ப வேண்டும்.

**பூ. சு. சதாசிவசாமி,**

மேற்பார்வைப் பொறியாளர்,
நெடுஞ்சாலே கிராமப்
பொறியியல் பணித்துறை
திருநெல்வேலி வட்டம்

18, திருச்செந்தூர் சாலே,
பாளேயங்கோட்டை.

# தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

**ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 31**
**உரிய நாள் 30–8–1971**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழே கையொப்பமிட்டிருப்பவரால், அடியில் குறிப்பிடப்பட்டுள்ள வேலேகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—1971 பிற்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பாளேயங்கோட்டை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி காம்பவுண்டில் பல்வேறு திறனுள்ள நான்கு கேஸ் ஹோல்டர்கள் பழுது பார்த்தல்.

ஒப்பந்தப்புள்ளி வரையறைகள், நிபந்தனேகள் ஆகியவைகளேக் கீழ்க்கண்டவருக்கு மனுச் செய்து இலவசமாகப் பெறலாம்.

**எஸ். சச்சிதானந்தம்,**

பொது மேற்பார்வையாளர்,
பொதுப்பணி ஒர்க் ஷாப்ஸ் &
ஸ்டோர்ஸ், சென்னே-1.

---

# டெண்டர்

---

# தமிழ்நாடு அரசு

## ஒப்பந்தப் புள்ளி விவரம்

**ந. க. பி. 3. 7976/71**

சலவை மற்றும் முடி திருத்தும் கருவிகள் 'சப்ளே' செய்யக் கீழே கையொப்பமிட்டவரால் ஒப்பந்தப் புள்ளிகள் 25—8—71 தேதி மாலே 3 மணிக்குள் சீலிடப்பட்ட உறைகளில் வரவேற்கப்படுகின்றன. தேவைப்படும் கருவிகள் மாவட்டத் தலேநகரிலுள்ள அந்தந்த மாவட்ட நல அலுவலர்களுக்கு நேரடியாக ரயில் மூலம் கம்பெனியார் செலவில் அனுப்பப்படவேண்டும்.

கருவிகளேப்பற்றிய விவரங்களே சென்னே சேப்பாக்கம் பிற்பட்டோர் நல அலுவலகத்திலிருந்து ஏதாவது ஒரு வேலே நாளில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. பா. பாரதி,**

இயக்குநர்,
பிற்பட்டோர் நலத் துறை.

எழிலகம்,
சென்னே-5.

## தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்

### குறுகிய சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

பின்கண்ட பொருள்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் சர்க்கிள், மதுரை-2 அவர்களால், எண் 17, சர். பி.டி. ராஜன் சாலை, நரிமேடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 28—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| ஒப்பந்த வடிவம். (1) | வேலை விவரம். (2) | கட்டுத்தொகை (இ.எம்.டி.) (3) | வேலையை முடிக்க வேண்டிய காலம். (4) | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. (5) |
|---|---|---|---|---|
| மொத்தத் தொகை. | கோவில்பட்டி நீர் வழங்கும் திட்டம்—ஹியூம்-ஸ்டீல் ஸ்பெஷல் சப்ளை, டெலிவரி. | ரூ. 2,500 | 4 மாதங்கள். | ரூபாய் 10·40 |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை ' 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் ' என்ற முகவரியில் உள்ள ' நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் (நிர்மாணம்) கோட்டம் ' அவர்களது அலுவலகத்தில், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை ரொக்கமாகக் கட்டியோ அல்லது மணியார்டர் மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகையை நிர்வாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) நிர்மாணக் கோட்டம், கோவில்பட்டி அவர்களது கணக்கில் ஷெட்டியூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது கருவூல சலானாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். அல்லது முழுத் தொகைக்கும் ஏதாவது ஒரு தேசிய உடமையாக்கப்பட்ட வங்கியின் காரண்டி வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படும். எந்தக் காரணத்தைக் கொண்டும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.)

17, சர். பி.டி. ராஜன் சாலை,
மதுரை-2.
நாள்: 26—7—1971.

## குடிசைப்பகுதி மாற்று வாரியம்,

### கோட்டம்-6.

### டெண்டர் மறு அறிக்கை.

இடம் : லாக் நகர்—மாடிகள் உள்ள வீடுகள் கட்டு வேலைக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்க 26—8—1971 அன்று காலை 11-00-க்குள் வரவேற்க படுகின்றன.

| பிரிவு எண். (1) | வேலையின் பெயர். (2) | கட்டடம் எண். (3) | குடியிருப்புகளின் எண்ணிக்கை. (4) | வேலையின் குத்து மதிப்பீடு ரூ. (5) | டேவணித் தொகை. ரூ. (6) | டெண்டர் விவரங்களின் விலை. ரூ. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலை டி. டி. நெ. 7/71. | | | | | |
| | 24-ல் 1 | 1 | 24 | 1,25,000 | 1,875 | 15·00 |
| 2. | ,, ,, | 2 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |
| 3. | ,, ,, | 3 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |
| 4. | ,, ,, | 4 | ,, | 1,25,000 | 1,875 | 15·00 |

அதே நாளில் 26—8—1971 11-05 மணிக்கு டெண்டர்கள் பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களும் டெண்டர் நகல்களும் மேற்படி அலுவலகத்தில் 19—8—1971 தேதியிலிருந்து காலை 10 மணி முதல் 2 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் விலைக்குக் கிடைக்கும். நிர்வாகப் பொறியாளர் டெண்டர்களை ஒத்துக்கொள்ளவோ, நிராகரிக்கவோ உரிமை உள்ளவர்.

ஜே. பிரேமானந்தராவ்,
நிர்வாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
கோட்டம்-6, பட்டினப்பாக்கம்,
சென்னை-28.

## தமிழ்நாடு குடிநீர்வழங்கு வடிகால் வாரியம்.

## குறுகிய சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

கீழ்க்கண்டவைகளைச் சப்ளை செய்வதற்காக, சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரம் இஞ்சினீயரிங் சர்க்கிள், மதுரை-2 அவர்களால் எண் 17, சர்.பி.டி. ராஜன் சாலை, நரிமேடு, மதுரை-2ல் அவரது அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–9–1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| ஒப்பந்த வடிவம். 1 | வேலை விவரம். 2 | கட்டுத்தொகை. 3 | வேலையை முடிக்க வேண்டிய காலம். 4 | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. 5 |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| மொத்தத் தொகை. | கோயில் பட்டி, நீ.வ.தி. காரைக்குடி நீ.வ.தி. நீர் சப்ளை மெயின்களில் பயன்படுத்துவதற்காகப் பல்வேறு அளவுகளில் சி.ஐ.-ல் தூயில் வால்வுகள் சப்ளை டெலிவரி. | 3,700 | ஆறு மாதங்கள். | 10·35 |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை, நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 48, கஸ்தூரி சாலை, சுப்பிரமணியபுரம், காரைக்குடி அலுவலகத்தில் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டரிலோ செலுத்தி 10–9–1971 வரை பெறலாம்.

கட்டுத்தொகையை ஷெடியூல் பாங்கி ஒன்றின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது கருவூல சலான் வடிவிலோ, நிர்வாக இஞ்சினீயர், பொதுச்சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன் 48, கஸ்தூரி சாலை, சுப்பிரமணியபுரம், காரைக்குடி அவர்களின் கணக்கில் செலுத்தவேண்டும். தேச உடமையாக்கப்பட்ட வங்கி ஒன்றில் இத்தொகை முழுதுக்குமான பாங்க் காரண்டியும் கட்டுத்தொகைக்காக ஏற்கப்படும். கட்டுத்தொகைக்காக செக்குகள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.சு.இ.).
17, சர். பி. டி. ராஜன் சாலை,
மதுரை-2,
நாள் : 2–8–1971.

## தர்மபுரி மாவட்ட ஆட்சியரின் விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் தர்மபுரி மாவட்டத்திலுள்ள அரசினர் அலுவலகங்களில் 1—4—1971 முதல் 31—3—1972 வரை தேங்கும் கழிவுக் காகிதங்களை விலைக்கு எடுத்துக் கொள்வதற்கான டெண்டர் நோட்டீஸ், தர்மபுரி மாவட்ட 1971-ம்ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கான பிரத்யேக கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். மேற்படி டெண்டர் நோட்டீஸில் கண்ட நிபந்தனைக்குட்பட்டு முத்திரையிட்ட (sealed) டெண்டர் கொடுக்க விரும்புகிறவர்கள் 31—8—1971-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு டெண்டர்கள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். டெண்டர்கள் அன்றே மாலை 4 மணிக்குப் பிரித்துப் பரிசீலிக்கப்படும். மேற்கொண்டு தகவல்தேவைப்படுகிறவர்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். 31—8—1971-ஆம் தேதி மாலை 3 மணிக்குப் பிறகு வரும் டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சியர், தர்மபுரி.

## ஏல அறிக்கை.

செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரிபேட்டை உப தாலூக்கா உல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் குருவாயல் கிராம ஏரிக்கரையிலிருக்கும் சுமார் 1,000 டன் எடையுள்ள கருவேல மரக்கிளை மேற்படி கிராமத்தில் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களால் 27–8–1971 காலை 11 மணிக்கு குருவாயல் கிராமத்தில் ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்ற தகவல்களையும் திருவள்ளூர் உதவி ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்

ஏ. கே. ரஸ்தோகி,
உதவி ஆட்சித் தலைவர்
திருவள்ளூர்.

## தமிழ்நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம் நிர்மாணப் பகுதி,

**கிண்டி, சென்னை–25**

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர்—மதுரைப் பல்கலைக் கழகச் சுற்றுப்புறங்களில் தெரு விளக்கு அமைத்தல்—தேனி சாலை.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைகளுக்காக, தொழில் நுட்பக் கோட்டத்தில் வேலைகளைச் செய்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள 'ஏ' வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறிய அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 30-8-1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் இதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் | ... | 'சி' பாரம். |
| 2. கட்டுத் தொகை | ... | ரூபாய் 2,650 (ரூபாய் இரண்டு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்). |
| 3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | | ரூபாய் 15.00 (விற்பனை வரி 3 சதவீதம்). |
| 4. வேலை முடிக்க வேண்டிய காலம். | | மூன்று மாதங்கள். |
| 5. ஒப்பந்தப் பத்திரங்களை மேற்கூறிய அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளும் தேதி. | | 16-8-1971 முதல் 28-8-1971 வரை. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P. W. Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர், பல்கலைக்கழகக் கட்டிடக் கோட்டம், மதுரை" அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரவினம்—பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலான்களைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநராக நிர்மாணப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவத்திலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டெப்பாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரியம் பாண்டுகள், தேசீய சேமிப்புப் பத்திரங்கள், ஆகியவைகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

இந்த வேலை, வேறு எந்தக் கோட்டத்திற்கும் மாற்றப் பட்டால், அந்த வேலையை முடிக்கும் அதிகார வரம்பு பெற்று வரும் கோட்டத்தின் பொறுப்பேற்றுள்ளவருமான நிர்வாகப் பொறியாளரே, அரசாங்கத்தின் சார்பாக எல்லா அதிகாரங்களையும், சிறப்பு உரிமைகளையும் பயன்படுத்தும் தகுதி படைத்தவராவர்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எந்தவித காரணமும் கூறுமல் தள்ளுபடி செய்யத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள் உரிமை பெற்றுள்ளார்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
**சென்னை.**

---

## தமிழ்நாடு வனத்துறை

### டெண்டர்

தமிழ்நாடு ஆளுநருக்காக நீலகிரி மாவட்ட வன அலுவலரால் கீழ்க்கண்ட சாலைகளுக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 1-9-1971-ம் தேதி மாலை 3 மணி வரை நீலகிரி மாவட்ட வன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். டெண்டர்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும் | முன்வைப்புத் தொகை மதிப்பீட்டுத் தொகையில் 3 சத வீதம். | ஏலப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|
| 1. பார்சன்ஸ்வேலி சரகம், ஊட்டி, மைசூர் சாலையிலிருந்து கவர்னர் சோலைக்குச் செல்லும் சாலைக்கு சோலிங் கற்கள் பாவி சரளைக் கற்கள் போடுதல். | ரூ. 2,586 | ரூ. 3.11 |

1. ஏல விதிகள், பத்திரங்கள் பட்டியல்கள், வரைபடங்கள் முதலிய நீலகிரி மாவட்ட வன அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசாங்க விடுமுறை தினங்கள் நீங்கலாக மற்ற எல்லா நாட்களிலும் அலுவலக நேரம் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரை அவற்றிற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஏல விதிகள், பத்திரங்கள் மற்றும் பட்டியல்கள் விற்பனை 31-8-1971-ம் நாள் மாலை 3-00 மணிக்குப் பின்னர் நிறுத்தப்பட்டுவிடும்.

**எஸ். சுப்பராயலு நாயுடு,**
**மாவட்ட வன அலுவலர், உதகை.**

## தமிழ்நாடு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியம்

### ஒட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

**பொருள்.**—525 எம். எம். (21") 450 எம்.எம். (18") விட்டம். ஆர்.சி.சி. 'பி-2' கிளாஸ் பைப்புகள், வேண்டுமான ஆர்.சி.சி. காலர்களுடன் சப்ளை, டெலிவரி குறித்து.

தமிழ் நாடு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மேற்கண்ட ஆர்.சி.சி. பைப்புகள், காலர்கள் சப்ளைக்காக, ஆர்.சி.சி. பிரஷர் பம்பு உற்பத்தியாளர்களிடமிருந்தும் முக்கிய சப்ளையாளர்களிடமிருந்தும், சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொ. சு. இஞ்சினீயரிங் சர்க்கிள், 52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8 அவர்களால் துறைக்குரிய முறையான வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-8-1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.) அவர்களாலோ அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற வேறு அலுவலர்களாலோ அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை.—ரூ. 5,000.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 10·40 (பத்து ரூபாய் நாற்பது காசுகள் மட்டும்—விற்பனைவரி உள்பட).

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிர்வாக இஞ்சினீயர், பொ.சு. இஞ்சினீயரிங் டிவிஷன் வாணியம்பாடி அவர்களிடமிருந்து பெறலாம்.

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கேட்டுக் கடிதம் எழுதி அவற்றைப் பெறலாம். 2-8-1971-லிருந்து அலுவல நாட்களில் அவை கிடைக்கும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குத் தரப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

7. எத்தகைய காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க அல்லது ரத்து செய்ய சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.) சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

8. சப்ளை காண்ட்ராக்டுகளை ஒன்றுக்கு மேற்பட்ட டெண்டர்தாரர்களுக்கு வழங்க சூப்பிரண்டிங் இஞ்சினீயர் (பொ.சு.இ.), சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்

(பொ.சு.இ.) சர்க்கிள் அலுவலகம், எழும்பூர், சென்னை-8.

நாள்: 27-7-1971.

---

## தொழில் வணிகத் துறை, சென்னை.

### பயிற்சி விளம்பரம்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பொது நோக்கு பொறியியல் தொழிற்சாலையில் 18 மாத காலப் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் (Denotified Tribes) சேர்ந்தவர்களிடமிருந்தும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் (Scheduled Castes) சேர்ந்தவர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 24 மாணவர்களும் அட்டவணையில் கண்ட வகுப்பைச் சேர்ந்த 6 மாணவர்களும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வேண்டிய மாணவர்கள் ஷெ வகுப்பிலிருந்து முன்வரவில்லையென்றால் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆதலின் இப்பயிற்சியில் சேர விரும்பும் மேற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை 10-9-1971-ந் தேதிக்குள்ளாகக் கண்காணிப்பாளர் பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலை, முதுகுளத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் படித்திருப்பவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். நேரடித் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் விண்ணப்பதாரரின் பெயர், வயது, தகப்பனார் பெயர், வகுப்பு, கல்வித் தகுதி, சொந்த ஊர், தற்போதைய விலாசம் முதலியன தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பயிற்சி காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்பேன் என்று பிணைமொழி (உறுதி) எழுதித் தரவேண்டும்.

இயக்குநர்,

தொழில் வணிகத் துறை, சென்னை-5.

---

## ஏல விற்பனை

**எண் 44677/டி 2/71.**

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ம் வருடம், ஆகஸ்டு மாதம், 28-ம் தேதி, சனிக்கிழமை காலை 10-30 மணியளவில், என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 26-8-1971 வியாழக்கிழமை அன்றும், 27-8-1971 வெள்ளிக்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

காவல் ஆணையாளர்

காவல் ஆணையாளர் அலுவலகம், எழும்பூர், சென்னை-8.

நாள்: 6-8-1971.

## தமிழ்நாடு அரசு

## தொழில்—வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநராலும் அவரது சார்பிலும், தொழில் துறை அல்லது பிற துறைகளின் நிர்மாணப் பகுதியின் உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் தொழில்-வணிகத் துறையின் நிர்மாணப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளரால் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அடியில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| எண்: | வேலையின் பெயர்: | கட்டுத் தொகை: | டெண்டர் பத்திரத்தின் விலை: | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம்: | பத்திரம் கிடைக்கும் தேதி. | டெண்டர் பெற கடைசி தேதி: |
|---|---|---|---|---|---|---|
| 1: | அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தளமுள்ள கிட்டங்கி (terraced godown) 8 கட்டுதல்: | ரூ: [illegible],900 | ரூ: 10:40 | 8 மாதம் | 18-8-71 | 27-8-71 |
| 2: | அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ஏ: சி. சீட் கூரையுள்ள கிட்டங்கி 2 கட்டுதல்: | ரூ: [illegible],600 | ரூ: 10:40 | [illegible] மாதம் | 18-8-71 | [illegible]-8-71 |

(1) ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

(2) டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) அலுவலகம், அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 என்ற முகவரியில் மேற்குறிப்பிட்ட தேதிகளில் அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

(3) டெண்டர் பத்திரத்தின் விலையான ரூ. 10·40 இதற்கான விற்பனை வரி சேர்த்து (எந்தச் சூழ்நிலையிலும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது) ரிசர்வ் பாங்க் கஜானாவில் நிர்வாகப்பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) [Executive Engineer (Construction)] அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 கணக்கில் "XXIX Industries—Other Receipts" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

(4) கட்டுத் தொகை, செடியூல்ட் பாங்குகளின் செலான் வடிவிலும் கால் டெபாசிட், டிமாண்ட் டிராப்டாகவும் ஏற்றுக்கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணப் பிரிவு) அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 பெயரில் கட்டுத் தொகைக்காகப் பெறப்பட்ட டிமாண்ட் டிராப்ட்கள் மாத்திரம் ஒப்புக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டி பத்திரங்கள், தமிழ்நாடு மின் வாரியப்பத்திரங்கள் (பாண்ட்ஸ்) ஆகியவை மார்க்கெட் மதிப்பில் 5 சத விகிதம் குறைத்தே ஒப்புக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட தபாலாபீசின் பார்வையுடன் ஒப்புக்கொள்ளப்படும். எந்த தேசிய பாங்கின் காரண்டியும் ஒப்புக்கொள்ளப்படும். வேறு எந்த வகையில் பணம் செலுத்துவதும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

(5) டெண்டர்தாரர்கள் பெரிய அளவுள்ள கட்டட நிர்மாணப் பணிகளில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பி. கே. விஸ்வநாதன்,

சென்னை-2 மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு) நிர்மாணப் பிரிவு

---

## ஏல விற்பனை

'ஜீப்' முதலிய மோட்டார் வண்டிகளின் பழைய டயர்கள், டியூப்கள், பாட்ரிகள், மற்றும் உபயோகமிழந்த பொருள்கள் முதலியன தனித் தனியாகவும் மொத்தமாகவும் 26-8-1971 காலை 10 மணிக்கு, 50, மெயின் ரோடு, [illegible], சென்னை-[illegible] பொது ஏலத்தில் விற்கப்படும். ஏலம் பற்றிய நிபந்தனைகளும், விதிகளும், மண்டலப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் நேரிலேயோ, அல்லது தங்கள் முகவரி எழுதப்பட்டு, போதிய அஞ்சல் தலை உள்ள கவரை அஞ்சல் மூலமாக அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

கே. பி. சாரதி,

இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்டம், சென்னை-6.

## தமிழ்நாடு நீர்வழங்கு வடிகால் வாரியம்

### ஒப்பந்தப் புள்ளி

### அறிக்கை

எண் 11268—எஸ்டி 2/71.
நாள் 26—7—1971

தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதற்காகவும் ஒப்பந்தக்காரர் களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம், கோயம்புத்தூரில் 25–1, 3-வது தெரு தாதாபாத், கோயம் புத்தூர்-12-ல் உள்ள அவரது அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 4 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் முன்னிலையிலாவது அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரி முன்னிலையிலாவது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

1. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம்—மேல் நீர் மட்டம் 174—00 மீட்டர்கள் ; அடி நீர் மட்டம் 171–00 மீட்டர்கள் உள்ள 3–75 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 1-வது பிராந்தியத்திற்காக.

2. பள்ளிப்பாளையம் நீர் வழங்கு திட்டம் முதற் கட்டம் —மேல் நீர்மட்டம் 169–00 மீட்டர் அடி நீர் மட்டம் 165·50 மீட்டர் உள்ள 3 லட்சம் லிட்டர் தேக்கும் திறனுள்ள உயர்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர் 2 வது பிராந்தியத்திற்காக.

3. ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

3. கட்டுத் தொகை : 1-வது இனத்துக்கு ரூ. 2,825·00. (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்து மட்டும்.)

2-வது இனத்துக்கு ரூ.2,250·00 (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது மட்டும்.)

4. வேலை முடிக்க வேண்டிய காலம்: ஆறு மாதம் (ஒவ்வொரு வேலைக்கும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை. ஒவ்வொரு வேலைக்கும்—

ரூ. 10·35 (விற்பனை வரியுள்பட.)

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் விற்பனைக்குரிய காலம் : 16-8-1971 முதல் 23-9-1971 வரை:

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் குடியிருப்பு, ஈரோடு-3 அவர்களின் அலுவலகத்தில் உரிய தொகையை ரொக்கமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை

தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகளின், டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ, நிருவாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் பணி வட்டம், ஈரோடு அவர்கள் பெயரால் வாங்கியனுப்ப வேண்டும். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

பொது சுகாதாரப் பொறியியல் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். எம். சாகுல் ஹமீது,
மேற்பார்வைப் பொறியாளர்.
கோயமுத்தூர் 26—7—1971

---

## டெண்டர்

சேலம் மாவட்டத்து அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு 1-9-1971 முதல் 31-12-1971 வரைக்கும் வேண்டிய மருந்து வகைத் தேவைக்காக முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய இறுதி நாள் 6-9-1971 மாலை 5 மணியாகும். மருந்துகளை சப்ளை செய்ய விரும்புகிறவர்கள் (விற்பனை வரி உட்பட ரூ. 5·15 மெடிகல் 'XXIII மெடிகல் I இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்டங்கள் 'ஜே' மிசலேனியஸ்' என்ற தலைப்பில் தனிச் செலானில் செலுத்தி ஒரு வேண்டுகோளுடன் சூப்பிரண்டெண்டென்ட்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம் அவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும், நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். செலானில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 5.00 தனியாகவும், விற்பனை வரி 0.15 காசுகள் தனியாகவும் காட்டப்படல் வேண்டும். இது பற்றி ஏதேனும் மேலும் செய்திகளுக்கு சூப்பிரண்டெண்டென்டு, அரசினர் தலைமை மருத்துவ நிலையம் சேலம் அவர்களுடன் தொடர்பு கொள்க.

ஒப்பந்தப் புள்ளிகள் கொடுப்போர் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்த பின்பு அது பற்றி எந்தவிதத் தொடர்பும் கொள்ளல் ஆகாது.

வி. செல்வராஜு,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
சேலம், அன்று சூப்பிரண்டெண்டென்ட், அரசினர் தலைமை மருத்துவ நிலையம், சேலம்.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும், சார்பிலும்.

---

## தமிழ் நாடு அரசு தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம்

நிர்மாணப் பகுதி,
கிண்டி, சென்னை-25.

### ஒட்டு ஒப்பந்தப் புள்ளி ஒத்தி வைப்பு

வேலையின் பெயர்:—

துணைவேந்தர் இல்லம் பேராசிரியர் இல்லம் ரீடர்களுக்காக நான்கு தளமுள்ள கட்டிடம் 1, விரிவுரையாளர்களுக்காக நான்கு தளங்களுடைய கட்டிடம் 1—மதுரை பல்கலைக் கழகத்திற்காகக் கட்டுதல், —மதுரைப் பல்கலைக் கழகம், 8/2, மதுரை-தேனி ரோடு, மதுரை.

மேற்குறிப்பிட்ட வேலைக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு 9-8-1971 என இருந்த காலக்கெடு 23-8-1971 பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்படுக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 21-8-1971 மாலை 5 மணி வரையிலும் அலுவலகத்தில் விற்கப்படும்.

ஏனைய நிபந்தனைகள் எதிலும் மாற்றமில்லை.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்
சென்னை.

# இன்பத் திருநாள்
# இனிய
# சுதந்திரப் பெருநாள்

உறுதியும் கம்பீரமும் பொருந்திய கட்டட நிர்மாணத்திற்கு

# சங்கர்
# சிமெண்ட்

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோட், சென்னை-2

ED51C1680

## தமிழ்நாடு
## பொதுப்பணித் துறை
## சீட்டு ஒப்பந்தப் புள்ளி
## அறிக்கை

வேலையின் பெயர்: சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் ஜிம்னேசியம்கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மேற்குறித்த வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் சேப்பாக்கத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் 24—8—71 மாலை 3·00 மணிவரையில் முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை, அதே நாளில் மாலை 3·15 மணிக்கு, மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் அந்த நேரத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தவகை — மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 3,600.

3. முடிக்கவேண்டிய காலம்—3 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 20 (இருபது மட்டும்) இத்தொகையை ரிசர்வ் பாங்கியிலோ அல்லது கருவூலத்திலோ ''P. W. Remittances III O. R.'' என்று தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர் கட்டிடப் பகுதி வட்டம் II சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

5. விற்பனை வரி ரூ. 0·60 (அறுபது காசு மட்டும்) மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் என்று தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விற்பனை :

17-8-1971 லிருந்து 23-8-1971 வரை (அலுவலக நேரங்களில்).

7. ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய நாள் :

24—8—1971.

மேற்கொண்டு தகவல் வேண்டுவோர் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கல்பட்டு வட்டம் சேப்பாக்கம், சென்னை—5 அவர்களின் அலுவலகத்தில் அலுவலக வேலை நேரத்தின் போது பெற்றுக் கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம் அவர்களுக்குக் காரணம் எதுவும் கூறுமலேயே எந்த ஓர் ஒப்பந்தப் புள்ளியையோ எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ நிராகரிக்க உரிமையுண்டு

**மேற்பார்வைப் பொறியாளர்**

சென்னை—செங்கல்பட்டு வட்டம்


## தமிழக அரசு சின்கோனத் துறை, உதகமண்டலம்.

இத்துறையினரால் தயாரிக்கப்படும் மிக உயர்தரமான பொருட்கள் :

நீலகிரித் தைலம், சிட்ரியோடொராத் தைலம்,

விண்டர்கிரீன் தைலம், கற்பூரத் தைலமும் வில்லைகளும், ஜெரேனியம் தைலம்,

இஞ்சி எண்ணெய் சத்து முதலியன.

மேலும் விபரங்களுக்கும், விலைப்பட்டியலுக்கும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்க:

**விற்பனை மேலாளர், சின்கோனத் துறை, உதகமண்டலம்.**

**(நீலகிரி)**

## தமிழ்நாடு அரசு
## பொதுப் பணித்துறை
### சிட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

**வேலையின் பெயர்;** சென்னை-10, கீழ்ப்பாக்கம் அரசினர் மனநோய் மருத்துவ மனையில் 'சி' பிளாக் வார்டு கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காகப் பொதுப் பணித்துறையில் இதர அரசினர் துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சேப்பாக்கம் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26–8–1971 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை, செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 4,500.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 40, 3 சத விகித விற்பனை வரி.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள்—18–8–1971 லிருந்து 25–8–1971 வரை.
6. ஒப்பந்தப்புள்ளி தேதி—26–8–1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணத்தை (இத் தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது). கருவூலத்திலோ, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ "Public Works Department Remittances III Other remittances" என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர்/பில்டிங்ஸ் டிவிஷன், II சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தவேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கியிலோ XII Sales Tax b. Receipt under State Sales tax act-general sales tax" என்ற தனிக் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். சலான் கட்டிய பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை சென்னை— செங்கற்பட்டு சர்க்கிள், சூப்பிரண்டிங் இஞ்சினீயர் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை செங்கற்பட்டு வட்டம்.

---

## தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்
### சிட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—பட்டுக்கோட்டையில் நாள் அங்காடிக் கட்டிடம்—, மசாலைப் பொருள்கள்; மீன் இறைச்சிக் கடைகள் அங்காடி அலுவலகம்—கிட்டங்கி—தலைவாசலில் கடைகள் கட்டுதல்.

தமிழ்நாடு நீர்வழங்கு வடிகால் வாரியத்தின் சார்பாகவும், வாரியத்திற்காகவும், இவ் வாரியத்தின் முறையான வடிவத்தின் மூலம் இத் துறையில் உரிய பிரிவில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் இது போன்ற நிறுவனங்களில் இவ் வகையில் உள்ளவர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியாளர் வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் அவர்களால் 52, கெங்குரெட்டி ரோடு, எழும்பூர், சென்னை-8 முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் மேற்கண்ட வேலைகளுக்காக 3-9-1971 பிற்பகல் 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியாளர் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை, அவர்களால் அந்த நேரத்தில் வந்துள்ள ஒப்பந்தக் காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 6,040 (ரூபாய் ஆறாயிரத்து நாற்பது மட்டும்). (கருவூல சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்தப் புள்ளி விதிகளில் கூறப்பட்ட ஏற்கத்தக்க வேறு வகை டிபாசிட் மூலமோ இத் தொகை செலுத்தப்பட வேண்டும்).
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 20.70 (ரூபாய் இருபதும் காசு எழுபது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் பகுதி, த.நீ.வ.வ. வாரியம், தஞ்சாவூர், பி.டபிள்யூ III. ஒ, ஆர் கணக்கிலும் விற்பனை வரியை XII விற்பனை—பல வகை 1—பொது விற்பனை வரி என்ற கணக்கில் தனிச் செலானிலும் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பணி வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி விண்ணப்பித்து ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறலாம்.
5. வேலை முடிக்க வேண்டிய காலம் : ஓராண்டு.
6. ஒப்பந்தப் புள்ளிகள் தர உத்தேசிப்பவர்கள் கட்டட வேலையில் குறைந்தது மூன்றாண்டு அனுபவமுடையவர்களாக இருக்க வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்**
பொது சுகாதாரப் பொறியியல் **வட்டம்,**
தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம்,

சென்னை-8,

நாள் : 28—7—1971.

## தமிழ்நாடு அரசு
## வேலை வாய்ப்பு, பயிற்சித்துறை
சென்னை-5.

### அறிவிப்பு.

வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ்
வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சி

வேலை கற்பவர் சட்டம் 1961-ன் ஆதிக்க வரம்பின் கீழ் இன்சினியரிங் கெமிக்கல், டெக்ஸ்டைல்ஸ், பிரிண்டிங், கேட்டரிங் ஆகிய 195 வகைத் தொழிற்சாலைகளும், 56 தொழில்களும் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக இதுவரை நியமிக்கப்பட்டுள்ளன. வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியுள்ள நிறுவனங்கள், வேலை கற்பவர் சட்டம், பிரிவு 8 (3)-இன் படி வேலை கற்றுக் கொடுப்பது பற்றி மாநில ஆலோசகர் குறிப்பிடும் எண்ணிக்கையளவில் வேலை கற்பவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி பெற வேண்டிய கால அளவு பெரும்பாலான தொழில்களில் மூன்று ஆண்டுகளாக உள்ளது. வேலை கற்றுக் கொள்ளும் பயிற்சிக் காலத்தில், வேலை கற்பவர்களுக்கு வேலை கற்றுக் கொடுக்கும் விதிகளில் குறிப்பிட்டுள்ள குறைந்த அளவுத் தொகைக்குக் குறையாமல் உதவித் தொகை வழங்கப்படும். தொழிற் பயிற்சி நிறுவனங்களிலிருந்து, தேசியத் தொழில் சான்றிதழ்த் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், வேலை கற்றுக்கொள்ளும் பயிற்சிக்காலத்தில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கால அளவை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். பெரும்பாலான தொழில்களைக் கற்றுக் கொள்வதற்குக் குறைந்த பட்சம் கல்வித் தகுதி மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு 2 வகுப்புகள் குறைவாக அல்லது அதற்குச் சமமாகத் தேர்வு பெற்றிருக்க வேண்டும்; குறைந்த அளவு வயது 14 ஆக இருக்க வேண்டும்; ஆனல் வயதிற்கு உயர்ந்த பட்ச வரம்பு இல்லை; வேலை கற்றுக் கொடுக்கும் விதி முறைகளில் குறிப்பிட்டுள்ள உடல் தரமும் பெற்றிருக்க வேண்டும்.

அடுத்த பயிற்சிக்கு ஆகஸ்ட்/ செப்டம்பர் 1971-ல் சேர்த்துக் கொள்ளப்படும். தேசிய சான்றிதழ் தகுதி பெற்றுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முன்னாள் பயிற்சியாளர்களும் தேவையான தகுதி பெற்றுள்ள மற்றவர்களும், தங்கள் வகைக் கேற்ப, மாவட்ட வேலை வாய்ப்பு தேடித் தரும் அலுவலர் அவர்களையோ அல்லது தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முதல்வரையோ அணுக வேண்டுமென்று இதன் மூலம் அறிவுரை கூறப்படுகிறது. இவ்வாறு செய்தால் அவர்கள் வேலை காலியுள்ள அல்லது வேலை காலியாகும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு வேலை கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களை வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக அனுப்பி வைக்க ஆவன செய்வார்கள்.

**வேலை வாய்ப்பு, பயிற்சி இயக்குநர்**
மற்றும் வேலை கற்றுக் கொடுப்பது பற்றிய மாநில ஆலோசகர், சென்னை.

---

## டெண்டர்

## தமிழ்நாடு அரசு
## பொதுப் பணித் துறை
### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—

சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் கான்டீன் கட்டிடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொதுப் பணித்துறை சென்னை-செங்கல்பட்டு, சர்க்கிள் சென்னை-5 அவர்களால் சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 31—8—1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் சூப்பிரண்டிங் இன்சினீயர், சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில பிறபகல 3·15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2 கட்டுத் தொகை—ரூ. 3,000.

3 வேலை முடிக்க வேண்டிய காலம்—

3 மாதங்கள்.

4 ஒப்பந்தப் பத்திரங்கள் விலை--

ரூபாய் 20 (ரூபாய் இருபது மட்டும்) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கியிலோ ("Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாக இஞ்சினீயர், வடக்கு மாநில டிவிஷன் சேப்பாக்கம்-சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

5 விற்பனை வரி :

ரூ. 0·60 (அறுபது காசுகள் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ "XII விற்பனை வரி 'B' மாநில விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி

24—8—71 முதல்.

7 ஒப்பந்தப் புள்ளித் தேதி—
31—8—71.

மேற்கொண்ட விவரங்களை சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீயர் அலுவலகம், பொதுப் பணித் துறை, சென்னை-செங்கல்பட்டு சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்து விட, சூப்பிரண்டிங் இஞ்சினீயர் பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

**பி. கே. கந்தசாமி**
மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித் துறை
சென்னை செங்கற்பட்டு வட்டம்

## தமிழ்நாடு அரசு

## பொதுப்பணித் துறை

**சென்னை செங்கற்பட்டு வட்டம் சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.**

வேலையின் பெயர்.—சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அவுட்பேஷண்ட் பிரிவு இடவசதிக்காகக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை அல்லது அரசின் இதர துறைகளில் உரிய பிரிவுகளில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து, மேற்கண்ட வேலைக்காக சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10-9-1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அவர்களால் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2. கட்டுத்தொகை ரூ. 5,000.

3. பிளான்களுடன், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20+3 சதவிகித விற்பனை வரி.

4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—நான்கு மாதங்கள்.

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிள் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக்கூடிய தேதிகள். 6–9–1971 முதல் 9–9–1971 வரை.

6. ஒப்பந்தப் புள்ளி நாள்.—10–9–1971.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை (இது எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "Public Works Department Remittances III. Other Remittances. என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர், பொதுப்பணித்துறை, பில்டிங் டிவிஷன் II அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை அதே சலானில் கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "XII விற்பனை வரி 'பி' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம்" என்று தனித் தலைப்பிட்டுச் செலுத்த வேண்டும். சலானைக் கொடுத்த பிறகே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களை சூப்பிரண்டிங் இஞ்சினீயர் அலுவலகம், சென்னை—செங்கற்பட்டு சர்க்கிளில் இருந்து பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்**

சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

---

## வேலைவாய்ப்பு

## கல்லூரிக் கல்வித்துறை

அரசினர் கலைக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள்—டியூட்டர்கள் — டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—பட்டம் பெற்ற நூலகர்கள் தற்காலிக நியமனத்திற்கு.

தமிழ் நாடு கல்வி சப் ஆர்டினேட் சர்வீஸில் கீழ்க்கண்ட பாட வகைகளில் தற்காலிக உதவிப் பேராசிரியர்கள், டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகியோர் தமிழ்நாடு ஜெனரல் சபார்டினேட் சர்வீஸில் பட்டதாரி நூலகர்களுக்கும் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பௌதிகம். (மகளிர் கல்லூரிகளுக்கு)
2. வரலாறு.
3. வணிகம்.
4. அரசியல்.
5. நிலநூல்.
6. நூலகர்கள்.

பௌதிகத் துறையில் உதவிப் பேராசிரியர்கள், டியூட்டர்கள் வேலைக்குப் பெண்கள் மட்டுமே மனுச் செய்தல் வேண்டும். இந்த வேலைக்குரியவர்கள் ஒரு தனிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதற்குரிய மனுக்கள் 25–8–1971 வரை கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6 அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மனுதாரர்கள் தங்கள் பெயர், வயது, கல்வித்தகுதி, கிரேடு, அனுபவம் முகவரி, பாடம், விண்ணப்பிக்கும் வேலை ஆகியவை பற்றிச் சரியான தகவல்கள் கொடுக்க வேண்டும். நற்சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்பப்படல் வேண்டும்.

**இயக்குநர்,**

கல்லூரிக் கல்வித்துறை.

கல்லூரிக் கல்வித்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6.

---

## விளம்பரம்

உரிமம் பெற்ற இயந்திர மின்சாரப் பொருள்கள் விற்பனையாளர்கள், பழுது பார்ப்பவர்களிடமிருந்து பின்கண்ட இயந்திர, மின்சார வேலைகளை ஒப்படைப்பதற்காக இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை-1 அவர்களால் பதிவு செய்துகொள்ள மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. இயந்திர வேலை— ஆர்க், கேஸ் வெல்டிங் பல்வேறு கலப்பு உலோகங்களுக்காக, கியர் பினியான் வீல், அச்சுப் பகுதிகளுக்குரிய அடுக்குகள் (Rack) உற்பத்தி செய்தல், சிறிய பழுது பார்க்கும் வேலைகள்.

2. மின்சார வேலை:— ஏ. சி., டி. சி. மோட்டார்கள், இம்ப்ரஷன் மேக்னெட்டிக், பிரேக் மேக்னெட்டிக் காயில்கள், ஸ்டார்டர், காயில்கள் முதலியனவற்றை வைண்டிங் (ரீவைண்டிங்) செய்தல், பிரிண்டிங், பைண்டிங், கம்போசிங் இயந்திரங்கள், இதர சார்பான கருவிகளில் ஏற்படும் பழுது பார்க்கும் பொது வேலைகளைச் செயல்படுத்துவதற்காக கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படும்.

நிறுவனங்களிடமிருந்து மனுக்கள் 31—8—1971 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வந்து சேர வேண்டும்.

**இயக்குநர்,**

எழுதுபொருள் அச்சுத் துறை,
சென்னை-1.

# டெண்டர்கள்

## தமிழ் நாடு நீர் வழங்கல் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர்·

ஆலந்தூர் நீர் வழங்கும் திட்டம் — இரண்டாம் கட்டம்—முதல் கட்டம்—இரண்டாவது பாகம்—2ஏ, 2பி, 3ஏ, 3பி பிராந்தியங்களுக்கு விநியோக முறைகள். சி. ஐ., ஏ. சி. பைப்புகள் ஸ்பெஷல்கள் அமைத்தல், இணைத்தல்.

தமிழ் நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் மேலே கண்ட வேலைக்கான துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் 30—8—1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்குமேல் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரத் துறை சர்க்கிள் அவர்களால் எண் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை—8-ல் அவ்வமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2

கட்டுத்தொகை—ரூ. 4,540.

(ரூபாய் நாலாயிரத்து ஐந்நூற்றி நாற்பது மட்டும்).

(அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெற வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10·35.

(பத்து ரூபாய் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்).

**ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணங்கள், நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன் சென்னை—4—அவர்கள் கணக்கில் பி. டபிள்யூ III ஓ. ஆர். என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை—I —பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் தனித்தனி சலான்களில் சேர்க்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்.

—நிர்வாக இஞ்சினீயர் (பொ.சு.) பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 1/14, எட்வேர்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4 அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பண அஞ்சல் மூலமோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலை முடிக்கவேண்டிய காலம் : 8 மாதங்கள்.

சூப்ரண்டிங் இன்சினீயர்
பொது சுகாதார இன்சினீயரிங் சர்க்கிள், சென்னை-8

---

## தமிழ் நாடு அரசு காவல் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு காவல் துறைக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை 1—7—1971 முதல் 31—3—1972 வரையுள்ள காலத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) கோரப்படுகின்றன.

(2) ... முத்திரையிட்ட கவர்களில் அனுப்ப வேண்டும். அந்தக் கவரின் மேலே சென்னைக் காவலர்களுக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி, பெறுநர் முகவரியில் திரு கே. ஸ்ரீகுமார மேனன், ஐ.பி.எஸ். உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தக் கவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் அவருக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரமும், தேதியும் கடந்த பின் வந்து சேரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டா.

(3) ஒப்பந்தப் புள்ளி வடிவம், ஒப்பந்த நிபந்தனைகள், தேவைப்படும் பொருள்களின் அட்டவணை ஆகியவைகளை ரூபாய் 2.06 (ரூபாய் இரண்டு, பைசா ஆறு மட்டும்) செலுத்தி, சென்னை-4-ல் உள்ள இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(4) மாதிரிப் பொருள்கள் அனுப்பப்பட்டதற்கான ரயில்வே ரசீதை, உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II அவர்களுக்குப் பதிவுத் தபாலில் தனியே அனுப்ப வேண்டும்; பெறுநர் முகவரியில் அலுவலர் பெயர் மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அனுப்பப்படும் மாதிரிப் பொருள்கள் இந்த அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் பொருட்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.

(5) ஒப்பந்தப் புள்ளிகளை 30—8—1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

கே. ஸ்ரீ குமார மேனன்
ஐ. பி. எஸ்.
உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் II.

# டெண்டர்கள்

## தமிழ் நாடு அரசு
## நிலநீர் இயக்குநர் அலுவலகம்
## ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30—9—1971-அன்று மாலை 3-00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். (1) | உள் வேலை. (2) | கட்டுத் தொகை. ரூபாய். (3) | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. (4) |
|---|---|---|---|
| 1 | பெர்கூசன் ரிக்குகளுக்கு (Rigs) சிறப்புக் கருவி வழங்கல். | 9,000 | ரூபாய் 10 விற்பனை வரி 40 காசு. |
| 2 | (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (துண்டுகள் மற்றும் துளை திறப்பான்கள்) வழங்கல். | 12,000 | ஷ |
| | (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல். | 3,000 | ஷ |
| | (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன் திஹோல் ஹேமர்ஸ், பிட்டுகள்) வழங்கல். | 15,000 | ஷ |
| 3 | கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல். | 10,000 | ஷ |
| 4 | ஹைடிராலிக் ஜாக் பம்பு, ஜாக் வழங்கல். | 6,000 | ஷ |
| 5 | ஜியோ பிசிகல் தளவாடங்கள் வழங்கல். | 21,400 | ஷ |
| 6 | ஜியோ கெமிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 3,200 | ஷ |
| 7 | போட்டோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷ |
| 8 | ஹைடிராலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 6,000 | ஷ |
| 9 | ஹைட்டிரோ மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 2,000 | ஷ |
| 10 | ஹைடிரோ ஜியாலஜிக்கல் தளவாடங்கல் வழங்கல். | 15,200 | ஷ |
| 11 | வரை தளவாடங்களும் புகைப் படக்கருவியும் வழங்கல். | 400 | ஷ |

ஒப்பந்த வடிவம் : மெட்ரூஸ் பைனன்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 3 மாதங்கள்.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி. } 1—8—1971 முதல் 25—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி யளிக்க இயலாது) அரசாங்க கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''Public Works remittance III other Remittance'' என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் ''விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் பொது விற்பனை வரி'' எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.

# டெண்டர்கள்

**மேற்பார்வைப் பொறியாளர்**
**அலுவலகம், பொ. ப. து.**
**இராமநாதபுரம் வட்டம் மதுரை**

ந. க. எண். 20856/71. 2/வ2
நாள் 20—7—71

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ் நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நிலஉரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 3—9—71-ம் தேதி மாலை 4·00 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—அருப்புக்கோட்டை தாலுகா குண்டாற்றின் குறுக்கே அணைகட்டும் வேலையும் வெள்ளத் தடுப்புக் கரையும் அமைத்து நாருயணக் காவேரி கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம்.

ஒப்பந்தவகை—கே. 2

டேவணித் தொகை— ரூ. 13,100 (ரூபாய் பதிமூன்ருயிரத்து நூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளி விலை (வரி உட்பட) —ரூ. 20·70.

வேலை முடிக்க வேண்டிய காலம் —12 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 3—9—1971 அன்று மாலை 4·30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரிகள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் ஷியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20·70-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச் செய்தால் ஷி வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ "பி.டபிள்யூடி. III. ஒ.ஆர்." என்ற கணக்கு தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சிவகங்கை கோட்டம், சிவகங்கை அவர்கள் கணக்கிலும், விற்பனை வரிக்காக ரூ. 0·70 பைசாவை ''12.விற்பனை வரி'' என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக்கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும் பொழுது உறையின் மேல், வேலையின் பெயரும் கருவூல ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை, மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 25—8—1971 முதல் 1—9—1971 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு, 1—9—1971 மாலை 5 மணிக்குள் வந்து சேரவேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து டேவணித் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளின் மூலமாகவோ, ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள், அரசாங்க சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமானவரி, விற்பனை வரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதார்கள் பங்கு எடுத்துக் கொண்டால் டிபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும் அத்திட்டத்தில் பயன்பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி டெண்டருடன் இணைக்க வேண்டும். டேவணித் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

**ரெ. ராமசாமி,**
**மேற்பார்வைப் பொறியாளர்**
பொ. ப. து.
13—7—71.

**'தமிழரசு'**

**இதழில்**

**விளம்பரம் செய்து**

**பயன்பெறுங்கள்**

# டெண்டர்கள்

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை
## தமிழ்நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட் | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| 3 | மதுரூஸ்-திருச்சி திண்டுக்கல் சாலை மைல் 225/3-ல் (தேசிய நெடுஞ்சாலை 45) தற்பொழுது இருக்கும் தாம்போகி பாலத்திற்குப் பதிலாக ஒரு புதிய பாலம் கட்டுதல். | ரூ. 10,900 | கோட்டப் பொறியாளர், (நெகிப) புதுக்கோட்டை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), புதுக்கோட்டை விலாசத்திலிருந்து 12—8—1971 முதல் 25—8—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித்தொகை டிபாசிட்டை மேற்கண்ட (புதுக்கோட்டை கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்பவேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெகிப) திருச்சிராப்பள்ளி-1.

---

## தமிழ் நாடு அரசு தொழில் வணிகத் துறை
## டெண்டர் நோட்டீஸ் எண்.2468/பிசி3/69.

சென்னை-56, திருமழிசையிலுள்ள அரசினர் இயந்திர செங்கல் தொழிற்சாலையில் இருப்பிலுள்ள உடைந்த செங்கற்களை ஜல்லியாக மாற்றுவதற்கு ஒப்பந்தமேற்று வேலையை முடித்துக் கொடுக்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து டெண்டர்கள் சென்னை-5, சேப்பாக்கம், தொழில் வணிக இயக்குநரால் 31—8—1971 மாலை 3-00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. டெண்டர் நமூனுக்கள் மற்றும் ஷரத்துக்களைக் கீழ்க்கண்ட விவரப்படி ரூ. 2·06 ரிசர்வ் வங்கி அல்லது அரசினர் கருவூலத்தில் செலுத்தி தொகை செலுத்தியதற்கான அசல் செல்லுச் சீட்டுக்களைக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தொகை செலுத்த வேண்டிய விவரம்.

| தொகை. | தொகை செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு. |
|---|---|
| டெண்டர் நமூனு விலை ரூ. 2·00 | "XXIX Industries (a) Industries 11, Mechanised Brick plant" |
| விற்பனை வரி ரூ. 0·06 | "XII Sales tax—Madras General Sales Tax" |

தொழில் வணிக இ[illegible]நர்

# டெண்டர்கள்

தமிழ் நாடு அரசு,

பொதுப் பணித் துறை.

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண். டி 3/71-72.

நாள் 24—7—1971.

வேலையின் பெயர்.—கடலூர் வட கரை மீனவ கடற்கழி, படகு தளம் இவற்றில் கான்கிரீட், கற்கள் கொண்டு அடித்தள தாங்கு கட்டுமான வேலைகள்.

1. தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொதுப் பணித் துறை, டிசைன், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

3. (அ) கட்டுத் தொகை—ரூ. 2,800.

(ஆ) கூடுதல் செக்யூரிட்டி தொகை ரூ. 2,800. அல்லது சூப்பிரண்டிங் இஞ்சினீயர் நிர்ணயிக்கிறபடி.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை, விற்பனை வரி—60 காசுகள் (அறுபது காசுகள் மட்டும்).

6. வேலை முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

7. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், சூப்பிரண்டிங் இஞ்சினீயர், டிசைன், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள், சென்னை-5 அலுவலகத்திலிருந்து வழங்கப்பெறும் காலம் 9—8—1971-லிருந்து 21—8—1971 வரை.

8. மேலே 4-ல் குறிப்பிடப்பட்டபடி உள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில், நிர்வாக இஞ்சினீயர், மரைன் வொர்க்ஸ் டிவிஷன், கடலூர் அவர்கள் கணக்கில் செலுத்தப் பெறவேண்டும். மேலே 5-ல் குறிப்பிடப்பட்ட விற்பனை வரி, அதே சலானில் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், "III Sales Tax—B Receipt" என்ற தலைப்பில் செலுத்தப் பெற வேண்டும். மேற்கண்ட சலானைக் காட்டி ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைப் பெறலாம். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

9. விளக்கமான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் மட்டுமே கட்டுத் தொகை ஏற்கப்படும்.

10. துறையினல் வழங்கப்படுகின்ற குறிப்பிடப்பட்ட வடிவங்களில் மட்டுமே, மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேலே வேலையின் பெயருடன் 'டெண்டர்' என்று குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளைத் தர வேண்டும்.

11. எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க சூப்பிரண்டிங் இஞ்சினீயர் டிசைன்ஸ், மரைன் வொர்க்ஸ் சர்க்கிள் அவர்களுக்கு உரிமை உண்டு.

12. மேலே 9, 10 பிரிவுகளில் குறிப்பிட்டபடி இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**டி. ஐ. பால்,**
சூப்பிரண்டிங் இஞ்சினீயர்.

---

## பயிற்சி

பொறியியல் கல்லூரி.

கிண்டி, சென்னை-25

அளிக்கும்

**கம்பியூட்டர் மற்றும் மானேஜ்மெண்ட் பயிற்சி. 1971 செப்டம்பர் 2 முதல் அக்டோபர் 22 வரை.**

தொழில் புரியும் பொறியாளர்கள், மானேஜர்கள், அரசுத் துறைகள், பொதுத் துறைகள், தனியார் துறைகளிலுள்ள தொழிற் கூடங்களில் பணியாற்றும் நிருவாகிகள் கலந்து கொள்ளலாம்.

**தகுதிகள் :**

பொறியியல் பட்டம் (Degree in Engineering) விஞ்ஞானத்தில் பட்ட மேல் படிப்பு (Post graduate Degree in Science) அல்லது அதற்குச் சமமானது.

**மனுக்கள் பெறக் கடைசித் தேதி :**

23—8—1971.

**சம்பளக் கட்டணம் :**

ரூ. 600.

மேல் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

டீன் (P. G. Studies),
பொறியியல் கல்லூரி,
கிண்டி, சென்னை-25.

**இயக்குநர்**
தொழிற் கல்வி
சென்னை-25

# நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு

## ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெடியூல் டெண்டர்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 8—9—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண், | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாசிட். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| 1 | கோடை மலைச்சாலையில் கி. மீ. 1/0 (மைல் 0/5) உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | ரூ. 6,300 | கோட்டப் பொறியாளர் (நெகிப), திண்டுக்கல். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திண்டுக்கல் விலாசத்திலிருந்து 25-8-1971—7-9-1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்று வடிவங்கள் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள, அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்க் காரண்டி சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். இவையில்லாமல் வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**அ. தேவப்பிரியம்,**

மேற்பார்வைப் பொறியாளர் (நெகிப),
திருச்சிராப்பள்ளி-I.

## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 3-வது நிலைப் பணியில் ரூ. 300—25—650 சம்பளத்தில் 400 ஜூனியர் இஞ்சினீயர் (மின்சாரம்) பதவிகளுக்கு நேரடி நியமன முறையில் நியமனத்துக்காகக் குறிப்பிட்ட வடிவங்களில் மனுக்கள் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவரால் 31—8—1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

திட்டப்பகுதிகளில் நியமிக்கப்படும் மனுதாரர்கள் அகவிலைப்படி தவிர்த்து, மலைவாசப்படி, திட்டவேலைப்படி, வாடகையில்லாமல் குடியிருப்பிடம், இலவச மின்சாரம், முதல் நிலைக்குரிய தனிச் சம்பளம், முதலியவைகளை, விதிகளின்படி எவை உரியவையோ அவை வழங்கப் பெறுவார்கள்.

தகுதி :

இந்திய யூனியனில் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மின்சார இஞ்சினீயரிங் பட்டம் அல்லது அதற்குச் சமமான பட்டம்.

துறையில் ஸ்டைபென்டரி அப்ரண்டிஸ்களாக அல்லது ஒர்க் சார்ஜ்டு நிறுவனம், அல்லது தற்காலிக முறையில் அன்றாட நிலைத் தொழிலாளர்களாக வேலை செய்வோர் உரிய முறையில் கவனிக்கப்படுவார்கள்.

வயது :

ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர் தவிர்த்து மற்ற மனுதாரர்கள் வயது 1971 ஜூலை 1-ல் 28 வயதுக்கு மேல் இருக்கலாகாது.

தகுதி, வயது சம்பந்தப்பட்ட முழு விவரங்களையும், குறிப்பிடப்பட்ட மனு வடிவங்களையும், மின்சாரத் துறை பிரதம இஞ்சினியர், 157, மவுண்ட் ரோடு, சென்னை-2 அவர்களிடமிருந்து பெறலாம். சுய விலாசமிட்ட 23 செ.மீ.×10 செ.மீ. அளவுள்ள 20 காசுகள் அஞ்சல் தலையொட்டிய உறையை உள்ளே வைத்துக் கடிதம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
தமிழ்நாடு மின்சார வாரியம்.

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

(தெற்கு டிவிஷன்)

எண் S. 5/1349/71. நாள் 31—7—71.

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தென் சென்னை புறநகர்த் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் உறையின் மீது உரிய முறையில் குறிப்பிட்டு ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்டுள்ள அதே நாட்களில் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்கள் ஏஜெண்டுகள் முன்னிலையில் மாலை 3·05 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் விபரம். | வேலையின் சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திர விலை. | கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | |
| 1 | மூன்று படுக்கை அறைகள் கொண்ட அடுக்கு வீடுகள் 1-ல் 2 என்ற வகையில் 3 பிளாக்குகள் கட்டுதல் பெசண்ட் நகர்— தொகுதி எண் 1 .. .. .. .. | 1,92,000 | 2,880 | 10·30 | 19—8—1971 |
| 2 | ,, தொகுதி எண் 2 .. .. .. .. | 1,92,000 | 2,880 | 10·30 | 19—8—1971 |
| 3 | ,, தொகுதி எண் 3 .. .. .. .. | 1,92,000 | 2,880 | 10·30 | 20—8—1971 |
| 4 | மூன்று படுக்கை அறைகள் கொண்ட 1-ல் 2 என்ற வகையில் அடுக்கு வீடுகள் கொண்ட 4 பிளாக்குகள் கட்டுதல் பெசண்ட் நகர்— தொகுதி எண் 4 .. .. .. .. | 2,56,000 | 3,840 | 15·45 | 20—8—1971 |
| 5 | T. D. No. 2-B/70-ன்படி சிறிய இரண்டு அறைகளையுடைய L. I. G. அடுக்கு வீடுகள் 1-ல் 4 என்ற வகையில் 6 பிளாக்குகள் கட்டுதல்— பெசண்ட் நகர்— தொகுதி எண் 1 .. .. .. .. | 2,16,000 | 3,240 | 15·45 | 25—8—1971 |
| 6 | ,, தொகுதி எண் 2 .. .. .. .. | 2,16,000 | 3,240 | 15·45 | 25—8—1971 |
| 7 | ,, தொகுதி எண் 3 .. .. .. .. | 2,16,000 | 3,240 | 15·45 | 26—8—1971 |
| 8 | ,, தொகுதி எண் 4 .. .. .. .. | 2,16,000 | 3,240 | 15·45 | 26—8—1971 |
| 9 | S. D. No. 124/70 படி இந்திரா நகர் தொகுதி எண் 1-ல் எம்.ஐ.ஜி. அடுக்கு வீடுகள் 1-ல் 4 என்ற வகையில் இரு படுக்கை அறைகள் கொண்ட அடுக்கு வீடுகள் 3 பிளாக்குகள் கட்டுதல் .. .. .. .. | 2,40,000 | 3,600 | 15·45 | 27—8—1971 |
| 10 | எஸ். டி. நம்பர் 124/70 படி இந்திரா நகரில் தொகுதி 2-ல், 1-ல், 4 என்ற வகையில் இரு படுக்கை அறைகளைக் கொண்ட எம். ஐ. ஜி. அடுக்கு வீடுகள் 2 பிளாக்குகள். | 1,60,000 | 2,400 | 10·30 | 27—8—1971 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் ஏனைய விபரங்களும் அவற்றின் விலையைச் செலுத்தி நிர்வாகப் பொறியாளர், தெற்கு டிவிஷன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35 அவர்களிடமிருந்து அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். குமரேசன்,**
நிர்வாகப் பொறியாளர்.

# குடிசைப் பகுதி மாற்று வாரியம்

## கோட்டம்-6

### டெண்டர் அறிக்கை.

இடம்—ஸ்ரீநிவாசபுரம்—பட்டினப்பாக்கம், டீ. டி. 7/71

மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலைக்கு முத்திரை யிடப்பட்ட டெண்டர்கள் 26-8-1971 அன்று 11·00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| பிரிவு எண். | வேலையின் பெயர், | கட்டிடம் எண். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. | வேலையின் குத்து மதிப்பீடு. | டேவணித் தொகை. | டெண்டர் விபரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | மாடிகள் உள்ள வீடுகள் கட்டும் வேலை டீ.டி.எண் 7/71, 24ல்1 | 12 | 48 | 2,50,000 | 3,750 | 15.00 விற்பனை வரி |
| 2. | | 324 | 48 | 2,50,000 | 3,750 | ஷை |

அதே நாளில் 26–8–1971, 11–05 மணிக்கு டெண்டர்கள் பிரிக்கப்படும். மேற்கொண்டு விபரங்களும் டெண்டர் நகல்களும் மேற்படி அலுவலகத்தில் 16–8–1971 தேதியி லிருந்து காலை 10 மணி முதல் 2 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் விலைக்குக் கிடைக்கும். நிர்வாகப் பொறியாளர் டெண்டர்கள் ஒத்துக்கொள்ளவோ, நிரா கரிக்கவோ உரிமை உள்ளவர்.

ஜே. பிரேமானந்தராவ்,

நிர்வாகப் பொறியாளர்.

குடிசை மாற்றும் வாரியம், கோட்டம்–6,
பட்டினப்பாக்கம்,
சென்னை–28.

# டெண்டர்

## தமிழ்நாடு அரசு சிறு தொழில்கள் நிறுவனம் லிமிடெட்

(தமிழ் நாடு அரசுக்கு உரியது)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை
எண் 35366/ஜி.1/69,
நாள் 22—7—1971

விண்ணமங்கலம் டான்ஸி தோல் பதனிடும் தொழிற்சாலை யில் கிடைக்கக்கூடிய 'எக் கோனல் பைண்டர் இம்'(Eukonal Binder Im) உள்ளது உள்ள படியான நிலையில் டிஸ்போஸ் செய்வதற்கு ஆன மூடி முத்தி ரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—8—1971 காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்க ளும் இதர விவரங்களும் வேண்டு வோர் '' டான்ஸி தோல் பத னிடும் நிலையம், விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆற் காடு மாவட்டம் '' என்னும் முகவரியில் உள்ள மேற்குறித்த நிலையத்தின் ஜெனரல் சூப்பரிண் டெண்டண்டிடம் ரூ. 5·25 ரொக் கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

உறைகளின் மீது 31-8-1971-க் குரிய எக்கோனல் பைண்டர் இம் வாங்குவதற்கு என்று குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத் திரையிட்டு, 31-8-1971 காலை 11 மணிக்குள் 'ஜெனரல் சூப்ப ரிண்டெண்டண்ட், டான்ஸி தோல் பதனிடும் நிலையம், விண்ணமங் கலம், மின்னூர் அஞ்சல், வட ஆற்காடு மாவட்டம் அவர் களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அதே நாளில் பகல் 12 மணிக்கு அவை பிரிக்கப் படும்.

நிருவாக இயக்குநர்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் மரங்கள், கவிஞர்களின் புலமைச் சமையலில் சுவையேற்றுக் கருத்து விருந்தாய்க் களிப்பையூட்டுகின்றன. மறத்தற்காகா மாண்புறு பாடங்களை மன்பதைக் களித்திட மரங்கள் கவிஞர்கட்குப் பெருமளவில் உதவியுள்ளன. அரசனுடைய படையே தங்குமளவுக்கு அகன்று பரந்த நிழலைத்தரும் ஆல், தேனையும் தோற்கடிக்கும் தித்திப்புப் பழம் தரும் மா, மஞ்சைத் தொட்டு விளையாடும் விண்ணளாவியதென்னை, சுவைக்குடம் தொங்கும் பலா எனப் பல திறப்பட்ட மரங்கள் பாரோர்க்கு நீதி சொல்லப் பாவலர் வாய்ப் பைந்தமிழில் படிந்துள்ளன. காட்டு மரங்கள், நமது வாழ்க்




கைக்கு எடுத்துக்காட்டு மரங்களாய் விளங்கிச் சிறக்கின்றன. மீன் முட்டையினும் நுண்ணிய விதையையும், அதிலிருந்து வெளிப்பட்டுப் பரந்து படரும் ஆலமரத்தின் பெருமையையும் காணும் புலவர், '' உருவு கண்டு எள்ளாமை வேண்டும் '' என்ற ஒப்பற்ற அறிவுரையை உலகுக்கு ஈந்து மகிழ்கிறார். தென்னை தாளால் உண்ட நீரை, தலையில் இளநீராய்—இனிய நீராய்த் தரும் தன்மையைச் சுட்டி, '' நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் ? என்றெண்ண வேண்டாம் ; ஒருவகையிற் செய்த உதவி, அதைப் பெற்றவரிடமிருந்து வேறொரு வகையில் வெளிப்பட்டே தீரும்'' என்ற கருத்தை உரைக்கிறார் அருந்தமிழ் ஒளவை. பொய்கை ஒன்றைச் சுற்றிலும் வளமுடன் செழித்து நிற்கும் மரங்களில் பூக்கள் கொத்துக் கொத்தாய்ச் செறிந்துள்ளன. பொய்கையிலும் நீர் தெரியாவண்ணம் மலர்கள் நிறைந்து மிதக்கின்றன. கோட்டுப் பூக்களைக் காணும் புலவர் கயப்பூக்களையும் காண்கிறார். இரண்டின் தன்மைகளையும் ஒப்பிட்டுச் சிந்திக்கிறார். கொம்பிலே மலரும் பூ, மலர்ந்த பிறகு குவிவதே இல்லை ; முதிர்ந்து அழியுமே தவிர மூடிக் குவிவதில்லை. நீர்ப் பூக்களோ அவ்வாறில்லை. பகலில் மலர்வன இரவில் குவிகின்றன ; இரவில் மலர்வன பகலில் முகம் மூடி உறங்குகின்றன. இவை கொண்டு நாலடி ஓர் அறவுரையை நயமாக விளக்குகிறது. நட்பு, கோட்டுப் பூப்போல, மலர்ந்தால் மலர்ந்ததாகவே திகழவேண்டுமேயன்றி, செல்வக்காலை நட்போடிருப்பதும் அல்லற்காலை அகன்று விடுவதுமாக, விரிவதும் குவிவதுமாய்—நீர்ப்பூக்களைப்போல் இருக்கக்கூடாது. மரப்பூ, இக்கருத்து மணத்தைக் கவிதை வெளியில் உலவச் செய்கிறது. வெயிலால் அவதியுறுவோர்க்கு நிழல் தரப் பாதையோரங்களில் மரங்களை நடுவதைப்போல் வாழ்க்கைப் பாதையில் தத்தளித்து நடந்து செல்வோர் தங்கி மகிழப் பாவாணர்கள், மரங்கள் தரும் கருத்து நிழலைப் படரவிடுகின்றனர். கைவல்ல தச்சரிடம் அகப்படும் மரங்கள் கவின்மிகு பொருள்களாக வடிவெடுக்கும். பாட்டுத் தச்சராம் வள்ளுவர்பால் கிடைத்த மரங்களோ கருத்துத் தேர்களாய்க் குறளாலயத்தில் பொலிவு பெற்றுக் காண்போரை மகிழச் செய்கின்றன.

அன்பை வள்ளுவர் உயிர்க்கு நிகரானதாகக்கொள்ளுகிறார். அகத்தில் அன்பு இல்லாதவனுடைய உடம்பை, உயிரோடு கூடியதாக ஒப்புக்கொள்ள அவர் மறுக்கிறார். அன்பு இல்லையாயின் உடம்பு வெறும் என்பு தோல் போர்த்த கூடே ! அகத்துறுப்பாகிய அன்பு இல்லாவழிப் புறத்துறுப்புக்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவியென்ற ஐம்பொறிகளாலும் எவ்விதப் பயனுமில்லை என்பது அவருடைய துணிவு. அன்பில்லாதவர் வாழ்க்கை வாழ்க்கையாகாது என்பதை ஓர் எடுத்துக் காட்டுக் கொண்டு அவர் விளக்குகிறார்.

'' கொடிது கொடிது வறுமை கொடிது ; அதனினும் கொடிது இளமையில் வறுமை '' ஒருவன் வறியவனானால்-வயிறார உண்ண உணவு பெறாதவனானால்—அவனுடைய உடல் சிறுத்துப்போகும். அதுவும் இளமையிலேயே வறுமைப்பட்டுவிட்டானானால் அவன் உறுப்புக்களில் உயிர்த் தன்மையையே காண முடியாது. '' வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய் '' என்று கலித்தொகை, உலர்ந்த மரத்திற்கு, ஒன்றுமற்றவன் இளமைக் காலத்தை உவமையாக்குகிறது. வறியவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறு போல, வற்றி உலர்ந்து, வேர் இற்றுவிட்ட, வற்றல் மரம் ஒன்று, பாலை நிலத்துப் பாறை மீது நின்றால் வேர்விட்டுத் தளிர்க்குமா ?

நிச்சயம் தளிர்க்காது. அதே போன்றுதான் அகத்தில் அன்பு இல்லாதவன் வாழ்க்கையும் செழிப்பாக இருக்க முடியாது.

" அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்த் தற்று "

வற்றல் மரம் எப்படித் தளிர்க்காதோ அதுபோல அன்பில்லாதவன் வாழ்க்கையும் சிறக்காது. அன்பு செலுத்தி வாழ்வதே சீரிய வாழ்க்கை என்ற கருத்தை இக்குறள் மூலம் குறளாசிரியர் வலியுறுத்துகிறார்.


பண்புடையாரிடத்தில் பொருந்தியிருப்பதால்தான் உலகம் உள்ளதாய் இயங்குகிறது. அஃதின்றேல் மண்ணோடு மண்ணாகி அழிந்திருக்கும் என்கிறார் அறநூலாசிரியர் வள்ளுவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராலேயே ' உண்டு இவ்வுலகம் ' என்பார் ' கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ' என்ற சங்ககால அரசப்புலவர். அரம்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும், மக்கட்பண்பு இல்லாதவர்கள் ஓரறிவுடைய மரத்தைப் போன்றவரேயாவர்.

ஆறறிவு படைத்த மக்களாக அவர்களைக் கொள்ள முடியாது. பண்பில்லாதவர்கள் பெற்றுள்ள அறிவுக் கூர்மை அரத்தைப் போலப் பிறரைத் தேய்க்கவே பயன்படும். அதுமட்டுமல்ல; அரம் பிறவற்றைத் தேய்க்கும்போது, அதுவும் கூர்மை குறைந்து மழுங்குதல் போலப் பண்பிலார் தம்மையடுப்பாரைக் கெடுப்பதோடு தம்முடைய அறிவையும் பயனற்றதாக ஆக்கிக் கொள்வர்.

அரம்போலும் கூர்மைய ரேனு
மரம்போல்வர்

மக்கட்பண் பில்லா தவர்.

அரம் (வாள்) மரத்தையறுக்கிறது. தன்னை யறுக்கும் வாளுக்கு மரம் தானே கைப்பிடி





யாக இருக்கிறது. அதே போன்று பண்பில்லாதவர்களும் தம்மை அழிப்போர்க்கும் தாமே துணைநின்று அழிந்து போவர் என்பதை இக்குறளின் உட்பொருளாக்கி, நாயனார் நம்மைச் சிந்திக்க வைத்துள்ளார்.

பண்பில்லாதவனைப் போலவே ஊக்கமில்லாதவனும் மகன் என்று சொல்லத்தகுதியற்றவனாய் மரத்தோடு ஒப்பப் பேசப்படுகிறான். ஊக்கம் ஒருவற்கு உள்ள செல்வம். அவ்வூக்கம் இல்லாதார் மக்கள் ஆகார்; மரங்களே யாவர். ஊக்கமில்லாதவர்க்கும் மரத்துக்கும் உள்ள வேற்றுமை, வடிவம் மட்டுமேயாம்.

"உரம்ஒருவர்க் குள்ள வெறுக்கைஅஃ
தில்லார்

மரம்மக்கள் ஆதலே வேறு".

வினை முயற்சி இல்லாமையால் ஊக்கமில்லாதவன் மரம் எனப்படுகின்றான். மரம் ஓரிடத்தில் நிற்கிறது; அவன் அசைகின்றானே எனின், உள்ளத்தால் இயக்கமின்றிக் காலால் மட்டும் இயங்கும் அவனுடைய இயக்கம் இயக்கமாகக் கருதப்படமாட்டாது; அவன் நின்ற இடத்திலேயே நிற்கும் மரத்துக்கு ஒப்பானவனே. மரமாவது பழங்களைத் தந்தும், மருந்தாகப் பயன்பட்டும், விறகாக எரிந்தும் பிறர்க்கு உதவியாயிருக்கும். ஆனால் ஊக்கமில்லாதவனோ பிறர்க்கு எவ்வகையிலும் பயன்படமாட்டான். ஆக, அவன் மரத்தினும் இழிந்தவன் ஆகின்றான்.

பண்பில்லாதவன், ஊக்கமில்லாதவன் போன்றே, அருட்டன்மையாம் கண்ணோட்டமில்லாத மரமே என்கிறார் வள்ளுவர். கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் என்றவர், அடுத்த குறளில் அக்கண்ணோட்டம் இல்லாதவர் மண்ணோடு பொருந்திய



மரமே தவிர மனிதராகமாட்டார் எனக் குறிப்பிடுகிறார்.

''மண்ணோ டியைந்த மரத்தனையர்
கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்''.

மக்களுக்குக் கண்கள் உண்டு; மரங்களுக்கும் கண்கள் உண்டு; அவை கணுக்கள் எனப்படும். மக்களுடைய கண்களுக்கும் மரக்கண்களுக்கும் வேறுபாடு இருக்கவேண்டாமா? மரக்கண்களுக்கு எவ்வித உணர்ச்சியுமிருக்க முடியாது. உள்ளன உள்ளவாறே இருக்கும். மனிதக் கண்கள் எவ்வித உணர்ச்சியுமற்று இருக்கலாமா? அவை கனிவைத் தோற்றுவித்து, கருணையைப் பொழிந்து, அருளைச் செய்ய வேண்டுமல்லவா? அத்தகைய கண்ணோட்டமின்றேல் அவற்றை மரக்கண் என்று சொல்வதைத் தவிர வேறெப்படிச் சொல்லமுடியும்?

முதிர்ந்து வைரம் பற்றிய முள்மரம் ஒன்றை ஒருவர் வெட்டுவதை வள்ளுவர் காணுகிறார். கோடரியால் மரத்தை வெட்டும்போது வைரம் தாக்குண்டதால் கோடரி சிதறுகிறது. அவர் கையில் வலி தோன்றுகின்றதேயன்றி மரம் வீழ்ந்த பாடில்லை. கையை வருத்தி வருத்திச் சிறிது சிறிதாகச் சிதைக்க வேண்டியிருக்கிறது. களையவேண்டிய முள்மரத்தை இளையதாக இருந்தபோதே வெட்டியிருந்தால் இப்போது இவ்வளவு துன்பம் இல்லையல்லவா? வள்ளுவரின் சிந்தனை இவ்வாறு ஓடுகிறது. உடனே குறிப்பிடுகிறார்:

''இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து''

பகைவர்கள் வலிமையுறுதற்கு முன்னமேயே அவர்களை அழிக்கவேண்டும். அவர்கள் வலிமையடைந்து விட்டாலோ பின்னர் அழிப்பது எளிதன்று! ...
படவேண்டியிருக்கும்.

மரத்தின்மீது ஏறும் ஒருவரைக் கூர்ந்து நோக்குகிறார் வள்ளுவர். ஏறுபவர், மரக்கிளையில் எவ்வளவு தூரம் சென்றால் அது தாங்குமோ அதுவரை வள்ளுவர் வாளாவிருக்கிறார். அதற்கு மேலும் அவர் ஏறத் தொடங்கியதைக் கண்டதும் பதறுகிறார். மேலே ஏறினால் பளு தாங்காது கொம்பு முறிந்து கீழே வீழ்ந்து உயிருக்கே ஊறாய் விடுமே! அதனால் அளவுக்கு மேலே ஏறக் கூடாதென அறிவுரை கூறுகிறார்.

''நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்
தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்''

ஒரு தொழிலை மேற்கொள்பவர் அத் தொழிலில் தம்மால் எவ்வளவு செல்லக்கூடுமோ அதுவரைதான் செல்ல வேண்டும். உற்சாக மிகுதியால் வரம்பு கடந்து செல்வராயின் அத்தொழிலையும் முடிக்காமல் தமக்கும் இறுதியைத் தேடிக்கொள்வர்.

மரங்களின் பயன்படு தன்மையை எடுத்துக் காட்ட விழையும் வள்ளுவர், ஊரினுள்ளேயுள்ள ஒரு பழ மரத்தைக் காட்டுகிறார். அதில் பழங்கள் பழுத்துக் குலுங்குகின்றன. புள்ளினமெல்லாம் அம்மரத்தைத் தம் சொந்த வீடெனக் கருதிக் குழுமிக் குதூகலிக்கின்றன. வழிச்செல்வோர் அனைவரும் அதன் இனிய கனிகளை உண்டு மகிழ்கின்றனர். அன்புடையவனாய், விருந்தோம்பி, இனியவை கூறி செய்ந்நன்றி அறிந்து, நடுவு நிலைமை தவறாது, அடக்கமுடையனாய், ஒழுக்கத்தைப் பேணி, சான்றோர் கடியும் குற்றம் களைந்து, அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்து, அழுக்காறகற்றி, பிறன்பொருள் வெஃகாது,



யஞ்சி வாழும் ஒப்புரவாளன் ஒருவனிடத்தே செல்வம் சேருமாயின் அஃது ஊருக்குள்ளேயே உள்ள பழமரம் பழுத்துக் குலுங்குவதற்கு ஒப்பாகும்.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்''

''ஊருணியில் நீர் நிறைவதையும், ஊரின் நடுவேயுள்ள பயன்மரம் பழுப்பதையும், மழை பொழிந்து ஆற்றில் நீர் பெருகுவதையும் வேண்டாமென்று தடுப்பவர்கள் உண்டோ?'' எனக் கேட்கிறார் கவிமன்னர் கம்பர். இவற்றை யாரும் ஒருபோதும் தடுக்கமாட்டார்கள்; மாறாக வரவேற்கவே செய்வர். மரங்களில் நிறைந்துள்ள பழங்களை வேண்டியோர் வேண்டியாங்குப் பறித்து உண்பர். ஏறிப் பறித்து உண்ண முடியாதவர்களுக்கும் கனிந்த கனிகளைக் கனிவுடன் உதிர்த்துச் சுவையூட்டுகிறது பயன்மரம். அதேபோன்று, நேரிற் சென்று வேண்டியவர்க்கு மட்டுமின்றி, வந்து கேளாத பிறர் தேவையையுமறிந்து அவர்க்கும் உதவும் பண்பைப் பெற்றுள்ள நயனுடைய பேராளர்களிடம் சேரும் செல்வம் உலகுக்குப் பெரும்பயன் நல்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு மாறாகப் பிறர்க்கு இம்மியளவும் கொடுக்க மனமில்லாதவனிடம் செல்வம் சேர்வது, ஊர் நடுவே ஒரு நச்சுமரம் பழுத்ததற் கொப்பாகும்.



''நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று''

நச்சு மரம் கிளைத்து, தழைத்து, பழுத்து நிற்பதால் யாருக்கு யாது பயன்? ஒருவர்க்கும் ஈயாத வன்னெஞ்சக் கயவரிடம் மக்கள் செல்வதேது? செல்வம் ஒருவரிடம் சேரும்போது அது மற்றவர்க்குப் பயன்தரத்தக்கதாய் இருக்கவேண்டும். ''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' அல்லவா? நச்சு மரமனையாரிடம் அப்பண்பு தோன்றப் போவதில்லை. நச்சு மரத்தில் அமுதம் பழுக்க முடியுமா? நஞ்சுதானே தோன்ற முடியும்! பழுத்து நின்றாலும் யாரும் நச்சுமரத்தை அணுகப் போவதில்லை. அம்மரத்தினால் நன்மை எள்ளளவும் ஏற்படாது. நன்மையில்லாவிட்டாலும் தீமை நேராது என்றாவது கூற முடியுமா? நச்சுப் பழங்கள் உதிர்ந்து கிடந்தால் அறியாதார் அவற்றை உண்டு மடிய நேரிடலாம். ஈத்துவக்கும் இன்பம் அறியாது வைத்திழக்கும் வன்கணாளர்களாய நச்சு மனிதர்களால் நன்மை இல்லாததோடு தீமையும் அல்லவா விளைந்து விடுகிறது! உள்ளூர்ப் பயன்மரமனைய உத்தமர்களிடையே, நச்சுமரமொத்த நாசகாலர்கள் காணப்படுவது ஏனோ! இதுதான் உலகமோ!

யாருக்கும் பயன்படாத, நினைத்தாலே அச்சமூட்டும் நச்சுமரங்களிடையே, வேர், பூ, இலை, காய், கனி, என உறுப்புக்கள் அனைத்தாலும் பிணிபோக்கி நலம் விளைக்கும் மருந்து மரங்களும் இருக்கத்தான் செய்கின்றன. நச்சு மரம் ஊட்டும் நஞ்சினை மாற்றும் ஆற்றலும் அம்மருந்து மரத்துக்கு உண்டு. மருந்து மரமொப்பத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறர் நலனுக்கெனவே ஈந்து வாழும் பெருந்தகையாளர்களிடம் உள்ள செல்வம் எல்லார்க்கும் நன்மை செய்யும்; ஏற்றம் தரும்.

''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்''

ஒப்புரவறிந்தொழுகும் தகைமையுடையானிடத்துச் சேரும் செல்வம், பிணிகள் தீர்க்கும் மருந்து மரம் போலப் பிறர்க்கு உதவவே பயன்படும். மருந்துக்காக ஒருவர் தழையைப் பறிக்க, மற்றொருவர் காய்கனிகளைக் கொய்ய, இன்னொருவர் வேரை வெட்ட, இவ்விதம் அனைத்தையும் இழந்து அழிந்தாலும், அவற்றை எடுத்துச் செல்வோரின் பிணிபோக்கும் இயல்புடையது மருந்துமரம். அதுபோன்றே தாம் அழிய நேர்ந்தாலும், பிறர் துயர் துடைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள பெருந்தகையாளர்கள் இருப்பதால்தான் உலகு இயங்குகிறது.

ஒரு மரத்தில் காய்களும் கனிகளும் கலந்து தொங்குகின்றன. கனியைப் பறித்து உண்போன் இனிப்பால் முகம் களிக்கின்றான்; காயைக் கடிப்போனோ புளிப்பால் முகம் சுளிக்கிறான். பழம் இருக்கும்போது அதை விடுத்துப் புளிப்புள்ள காயை உண்ணுதல் பைத்தியக்காரத்தனம் அல்லவா? இனிய சொற்கள் இருக்க, இன்னாத சொற்களைக் கூறுவது கனியிருக்கக் காய்கவர்தற் கொப்பாகும் என்று கூறி இனியவை கூற வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்துகிறார் இன்றமிழ்ப் புலவராகிய வள்ளுவனார்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''.
என்கிறார்.

உலக மரங்களைக் கொண்டே திருவள்ளுவர் அருங்கருத்தைச் சொல்லியிருக்கிறார்.




ஆடி மாதத்தில் விதைக்கப்படும் விதைகள் பொதுவாக நல்ல பலனைத் தரும் என்பது காலம் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள பாடமாகும். எனவேதான் '' ஆடிப்பட்டம் தேடி விதை '' என்ற பழமொழியும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நம் நல்வாழ்வுக்குத் தேவையான தாதுப் பொருள்களும் (minerals) வைட்டமின்களும் (Vitamins) மிகுதியாக அடங்கியுள்ள காய்கறிகளைப் பயிரிட ஆடி மாதம் மிகவும் ஏற்றது. அதிக மகசூல் அளிக்கக்கூடிய ரகங்களை ஆடி மாதத்தில் விதைத்தால் மிகுந்த மகசூல் பெற முடியும். ஆகவே, அதிக மகசூல் அளிக்கும் கீழ்க்கண்ட ரகங்களை ஆடி மாதத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

(1) கோ.1. தக்காளி.

(2) எஸ்.எம். 62 கொத்து வெள்ளைக்கத்தரி.

(3) கே.1. மிளகாய்.

(4) பூசாசவாணி வெண்டை.

(5) வெள்ளை முள்ளங்கி.

(6) ஆடுதுறை நீண்ட புடலங்காய்.

(7) கோ-6 அவரை.

(8) கோ—7 அவரை.

(9) நியூ இரா(இ.சி. 455) தட்டைப்பயறு

(10) கோ-1 பரங்கிக்காய்

(11) கோ-1 சாம்பல் பூசணி

(12) அதிநீள உயர்ரகப் பீர்க்கு.

(13) பூசா மௌஸ்மி கொத்தவரை.

14) ஆடுதுறை நீண்ட பச்சைப் பாகற்காய்.

15) கோ.1. தண்டுக்கீரை.

(16) கோ.1. அரைக்கீரை

(17) ஜாப்னு முருங்கை.

(18) கோ.1. வெங்காயம்.

மேற்கூறிய விதைகளை சென்னை நகர மக்கள் '' 5/13 எல்டாம்ஸ் ரோடு, தேனும்பேட்டை, சென்னை-18.'' என்ற முகவரியில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (காய்கறி) அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிற இடங்களில் உள்ளவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் (Deputy Agricultural Officer) அவர்களை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புடலங்காய் சாகுபடி.**

ஆடிப்பட்டத்திற்கு வெள்ளைக் கோடுகளுடன் கூடிய ஆடுதுறை நீண்ட பச்சை ரகமே மிகவும் சிறந்தது. இந்த ரகம் அதிக மகசூல் அளிப்பதுடன் தரத்தில் உயர்ந்தது. நீண்ட வெள்ளை ரகமும் தரத்தில் உயர்ந்திருந்தாலும், நடுத்தர மகசூலே கொடுக்கும் திறனுடையது. குழிக்குக் குழி 6 அடி இடைவெளி விட்டு $1\frac{1}{2}\times1\frac{1}{2}\times1\frac{1}{2}$ அடி அளவுள்ள குழிகள் தோண்டி, ஒவ்வொரு குழிக்கும் 25 கிலோ தொழு உரமும், 100 கிராம் 6-ஆம் எண் கலப்பு உரமும் இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 750 கிராம் விதை வேண்டும். ஒவ்வொரு குழியிலும், 5 அல்லது 6 விதைகளை ஊன்ற வேண்டும். 15 நாட்கள் கழித்து நன்கு வளர்ந்த 3 அல்லது 4 செடிகளை விட்டுவிட்டு, மற்றவைகளை நீக்கிவிட வேண்டும். விதை ஊன்றிய 30 நாட்கள் கழித்து குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் இட வேண்டும். 2 மீட்டர் உயரத்தில் பந்தல் அமைத்துக் கொடிகளைப் படர விட வேண்டும். புடலங்காய் நீண்டு வளரவும், சுருண்டு விடுவதைத் தடுக்கவும், சிறிய காய்களின் நுனியில் சிறு கற்களைக் கட்டித் தொங்கவிட வேண்டும். ஒரு ஏக்கரிலிருந்து 16,000 முதல் 18,000 காய்கள் (8,000 முதல் 9,000 கிலோ) மகசூல் கிடைக்கும்.

புடலங்காய்




### கோ. 1. பரங்கிக்காய்.

கோ. 1 பரங்கிக்காய் தமிழ் நாடு வேளாண்மைத் துறையால் வெளியிடப்பட்ட ரகமாகும். இது சாதாரண ரகத்தை விட வீரியமுள்ளதாகவும், முன்பாகவே பூ பூக்கக் கூடியதாகவும் உள்ளது. இந்த ரகத்தின் காய் கவர்ச்சிகரமாகவும், நல்ல சதைப் பிடிப்புடனும், சுவையாகவும், குறைந்த விதையுடனும் இருக்கும். இந்த ரகம் பெரிய பெரிய காய்களாகக் காய்க்கக் கூடியது. ஒவ்வொரு கொடியும் 7 முதல் 8 கிலோ எடையுள்ள, 7 முதல் 9 காய்களைக் கொடுக்கும். இது உள்ளூர் ரகங்களைக் காட்டிலும் பூச்சி, பூஞ்சாள நோய் தாக்குதலைத் தாங்கும் சக்தியுடையது. இது ஆடிப்பட்டத்தில் விதைப்பதற்கு ஏற்றது. காய் தோன்றிய 50 முதல் 55 நாட்களில், நன்கு முதிர்ந்து பழமாக ஆகிறது. விதை ஊன்றிய 115-வது நாளில் முதல் அறுவடை செய்யலாம். அதன் பின் தொடர்ந்து 120 நாட்கள் வரை அறுவடை செய்யக் கூடும். 8 மாத காலத்தில், 6 முதல் 8 தடவை அறுவடை செய்யக்கூடும். ஒரு ஏக்கரிலிருந்து 12,000 கிலோ மகசூல் அல்லது சுமார் 2,000 காய்கள் கிடைக்கக்கூடும்.

இந்த ரகத்தைப் பயிரிடக் குழிக்குக் குழி 3.5 மீட்டர் இடைவெளி விட்டு, 1½ அடி நீளம், 1½ அடி அகலம், 1½ அடி ஆழம் உள்ள குழிகளைத் தோண்டவும். குழிக்கு 25 கிலோகிராம் தொழு உரமும், 100 கிராம் 6-ஆம் எண் (6:12:12) கலப்பு உரமும் அடியுரமாக இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 500 கிராம் விதைகள் தேவைப்படும். ஒவ்வொரு குழியிலும் 5 அல்லது 6 விதைகளை ஊன்ற வேண்டும். 15 நாட்கள் கழித்துக் குழிக்கு 2 வீரியமுள்ள செடிகளை மட்டும் விட்டுவிட்டு, மற்ற செடிகளை அகற்றிவிடவும். விதை ஊன்றிய 45 நாள் கழித்து, குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் உரத்தை மேல் உரமாக இடவும். தவறாமல் வாரம் ஒரு முறை தண்ணீர் விட வேண்டும்.

கோ. 1. பரங்கிக்காயை அறிஞர் அண்ணாவும், மறைந்த வேளாண்மை அமைச்சரும் பார்வையிடும் காட்சி



### கோ. 1. சாம்பல் பூசணிக்காய்

கோ.1. சாம்பல் பூசணிக்காய் பெரியதாகவும், குறைந்த விதையுடனும் (0·8 சதம்), நல்ல சதைப்பிடிப்பாகவும் சுவையாகவும் இருக்கும். ஒவ்வொரு கொடியிலும் 5 முதல் 6 கிலோ எடையுள்ள 6 முதல் 8 காய்கள் காய்க்கக்கூடும். இந்த ரகத்தை நோய்களும், பூச்சிகளும் ஓரளவுக்குத் தாக்காது. இது, விதை ஊன்றிய 90 முதல் 100 நாட்களில் முதல் அறுவடை கொடுக்க ஆரம்பிக்கும். அதன் பின் தொடர்ந்து 140 முதல் 150 நாட்கள் வரை மகசூல் கிடைக்கும். காய் உருவாகியதிலிருந்து 45 முதல் 50 நாட்களில் இந்த ரகத்தின் காய்கள் நன்கு முதிர்ச்சியடையும். இந்த ரகத்தை ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 10,000 (சுமார் 2,000 காய்கள்) மகசூல் பெறலாம்.

கோ.1. சாம்பல் பூசணிக்காய் சாகுபடி செய்யக் குழிக்குக் குழி 3 மீட்டர் இடைவெளி விட்டால் போதுமானது. விதை அளவு, அடி உரம், மேல் உரம், தண்ணீர் விடுதல் ஆகியவைகளுக்கு கோ.1. பரங்கிக்காய் சாகுபடிக்குக் கூறப்பட்ட முறைகளையே மேற்கொள்ள வேண்டும்.



கோ. 1. சாம்பல் பூசணிக்காய்

### அதி நீள உயர்ரகப் பீர்க்கு

ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு 'அதிநீள உயர் ரகப் பீர்க்கு' (Extra long Ribbed Gourd) மிகவும் ஏற்றது. இந்த ரகத்தை கோயமுத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் உள்ள காய்கறி ஆராய்ச்சிப் பிரிவினர் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ரகப் பீர்க்கு சுமார் 60 சென்டிமீட்டர் (2 அடி) முதல் 75 சென்டிமீட்டர் (2½ அடி) நீளமுள்ள காய்களைக் கொடுக்க வல்லது. இதன் காய்கள் பசுமை நிறத்துடனும், மிருதுவான தன்மையுடனும் இருப்பதுடன் நல்ல சுவையையும், மணத்தையும் கொண்டுள்ளது. இந்த ரகம் அதிக மகசூல் அளிக்கக் கூடியது. ஒவ்வொரு செடியும் விதை ஊன்றியதிலிருந்து 55 நாட்களில் காய்க்க ஆரம்பித்து, 10 காய்கள் வரை கொடுக்கிறது. பூப்பிடித்து 10 முதல் 14 நாட்களில் காய்களை அறுவடை செய்யலாம். அவ்வாறு அறுவடை செய்தால், செடிக்கு நல்ல வளர்ச்சியும், அதிக மகசூலும் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் 6,000 முதல் 7,200 கிலோ காய்கள் கிடைக்கும்.

ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 1 கிலோ விதை தேவை. புடலைக்குக் கூறப்பட்ட இடைவெளி, உர அளவு, பந்தல் முறை ஆகியவைகளையே பீர்க்கு சாகுபடிக்கும் மேற்கொள்ள வேண்டும்.


பீர்க்கன் காயில் 0.9 சத புரதச்சத்தும் 0.5சதகொழுப்புச் சத்தும், 3.4 சத மாவுச்சத்தும், 2.78 சத தாதுப் பொருள்களும், 49 அளவு வைட்டமின் 'சி'

சத்தும், 18 அளவு வைட்டமின் 'டி' சத்தும் உள்ளன. எனவே அதி நீள உயர் ரகப் பீர்க்கு பயிரிட்டுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### வெள்ளை முள்ளங்கி

வெள்ளை முள்ளங்கி விலை மலிவானதுதான்! ஆனால் ஒரு அவுன்சு முள்ளங்கிக் கிழங்கில் 17 அனைத்துலக அளவு (I.U.) வைட்டமின் 'பி', 4 மில்லி கிராம் வைட்டமின் 'சி' உள்ளது என்பதை உணர்ந்தால் முள்ளங்கியை வெறுப்பவரும் விரும்பி உண்ண முயல்வார்கள். இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். விதை விதைத்த 45 நாட்களுக்குப் பிறகும், 60 நாட்களுக்கு முன்பும் அறுவடை செய்துவிட வேண்டும்.

100 சதுர அடியில் முள்ளங்கி சாகுபடி செய்ய 8 கூடை தொழு எரு, 600 கிராம் சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அதில் 4 கிராம் விதையை, வரிசைக்கு வரிசை 1½ அடி இடைவெளி விட்டும், வரிசையில் குழிக்குக் குழி ½ அடி இடைவெளி விட்டும் விதைகளை ஊன்ற வேண்டும். 100 சதுர அடி பரப்பில் 10 முதல் 12 கிலோ மகசூல் பெற முடியும்.


அதி நீள உயர் ரக பீர்க்கு

### பூசாசவாணி வெண்டை


வெண்டைக்காயும், விளக்கெண்ணெயும் வழவழப்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்றன. வழவழப்பாக இருக்கிறது என்பதனால் வெண்டைக்காயை விரும்பாதோர் பலர் உண்டு. மூளையின் வளர்ச்சிக்கும், இயக்கத்திற்கும், வெண்டைக்காய் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஒரு அவுன்சு (28·35 கிராம்) வெண்டைக்காயில் 0·6 கிராம் புரதச்சத்து, 0·1 கிராம் கொழுப்பு, 2·2 கிராம் மாவுப் பொருள், 25 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்து (கால்சியம்), 23 மில்லி கிராம் பாஸ்பரஸ் சத்து, 0·4 மில்லி கிராம் இரும்புச் சத்து, 16 அளவு (I.U.) கரோட்டின் எனப்படும் வைட்டமின் 'ஏ' சத்து, 6 அளவு வைட்டமின் 'பி' சத்து, 4 மில்லி கிராம் வைட்டமின் 'சி' சத்து ஆகியவைகள் உள்ளன.

'பூசாசவாணி' என்ற வெண்டையை ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம். ஆனால் ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம். நிலத்தை நன்கு உழுது, கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு, 40 கிலோ அமோனியம் சல்பேட், 120 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு 2 அடிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். ஏக்கருக்கு 2 கிலோ விதையை ஊன்ற வேண்டும். பாரின் ஒரு பக்கத்தில் 8 அங்குல இடைவெளியில் விதைகளை இரண்டு இரண்டாக ஊன்றவும். விதை ஊன்றிய 14 நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு குழியிலும் நன்கு வளர்ந்த ஒரு செடியை மட்டும் விட்டுவிட்டு, மற்றதை அகற்றி விடவும். விதை ஊன்றிய 4 வாரம் கழித்து 40 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இடவும். விதை ஊன்றிய 40 முதல் 45 நாட்களில் முதல் அறுவடை செய்யலாம். அதன்பின் தொடர்ந்து 45 முதல் 50 நாட்களுக்கு, ஒரு நாள் விட்டு, மறுநாள் வீதம் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரிலிருந்து 5,000 கிலோ மகசூல் பெறலாம்.


வெள்ளை முள்ளங்கி

### பந்தல் தேவையில்லா அவரை

அவரைக் கொடியைப் பொதுவாகப் பந்தலிலே படரவிடுவதுதான் பழக்கம். ஆனால் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையால் வெளியிடப்பட்டுள்ள கோ-7 ஆகிய அவரை ரகங்களுக்குப் பந்தல் தேவையில்லை! இந்த ரகங்களுக்கு மேலும் சில



விந்தையான குணங்களும் உண்டு; அவைகளின் விவரம் இதோ!

(1) அவரையின் இளங்காய்களைத்தான் பயன்படுத்துகிறோம். அவரையின் விதைகளைப் பச்சையாகவோ காய்ந்த பின்போ பயன்படுத்துவதில்லை. மொச்சைக்காய்களில் அதிக நார்த்தன்மையும், எண்ணெய் வாடையும் இருப்பதால், அவைகளை அவரைக்காயைப் போல் பயன் படுத்துவதில்லை. மொச்சையின் விதைகளை மட்டுமே பச்சையாகவோ, அல்லது காய்ந்த பின்போ பயன்படுத்துகிறோம். ஆனால் மேற்கூறிய ரகங்களின் இளங்காய்களை அவரைக்காயைப் போல் காய்கறியாகவும், முற்றிய விதைகளைக் காயவைத்து மொச்சையைப் போல் பயறு ஆகவும் பயன்படுத்தலாம். மொச்சை, அவரை ஆகியவற்றின் இரு வகைப் பயன்களையும் ஒருங்கே கொண்டுள்ளவை. மேற்படி ரகங்களென்றால் மிகையல்ல! எனவேதான் மொச்சை—அவரை என்றும் அழைக்கப்படுகிறது!

(2) அவரையும், மொச்சையும் பருவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவைகள்; அதாவது குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே வளரக் கூடியவைகள்; பெரும்பாலும் ஆடி மாதத்தில் மட்டுமே விதைக்கப்படுகின்றன. ஆனால் மேற்கூறிய ரகங்களை ஆண்டு முழுவதும் எந்தப் பட்டத்தில் வேண்டுமானாலும் பயிரிடலாம்.

(3) மேற்கூறிய ரகங்களை இறைவையாகவும், மானாவாரியாகவும் பயிரிடலாம்.

(4) இப் புதிய ரகங்களின் செடி சிறியனவாகவும், படருந் தன்மையில்லாமலும் இருக்கும். இதனாலேயே பந்தல் தேவைப்படவில்லை.

(5) அவரையைப் போன்றோ அல்லது மொச்சையைப்போன்றோ இல்லாமல், மேற்கூறிய காலப் பயிர்களாகும். இவைகளின் வயது 120 நாட்களே.

(6) மேற்கூறிய ரகங்கள் விதைத்ததிலிருந்து 40 முதல் 45 நாட்களுக்குள் பூத்துக் காய்க்கத் துவங்கிவிடும். பூத்ததிலிருந்து 14 முதல் 16 நாட்களுக்குள் காய்கறியாகப் பயன் படுத்துவதற்கேற்ற காய்களைக் கொடுக்கும்.

(7) மொச்சைக் காய்களில் உள்ள நார்த்தன்மையும், எண்ணெய் வாடையும் இந்த ரகக் காய்களில் இல்லை.



அவரை

(8) இந்த ரகங்கள் பூத்ததிலிருந்து 16 முதல் 18 நாட்களுக்குப் பின் காய்கள் முற்ற ஆரம்பித்து விடுகின்றன.

(9) இப்புதிய ரகங்களின் காய்கள் அளவு, உருவம், சுவை ஆகியவற்றில் அவரைக்காய்களைப் போலவே உள்ளன.

(10) மேற்கூறிய ரகங்களின் காய்களிலும், விதைகளிலும் சாதாரண அவரைக்காய் அல்லது மொச்சை விதைகளில் உள்ளதை விட அதிகப் புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால், மொச்சையின் இளங்காய்களில் 18·52 சதமும், அவரையில் 22·10 சதமும் புரதச்சத்து உள்ளது. ஆனால், கோ-1 மொச்சை—அவரையில 29·70 சத புரதச்சத்து உள்ளது. அதுபோலவே மொச்சைக் கொட்டையில் 22·90 சதமும், அவரையின் காய்ந்த விதைகளில் 24·40 சதமும், கோ-1 மொச்சை-அவரையின் காய்ந்த விதைகளில் 25·40 சதமும் புரதச்சத்து உள்ளது.

கோ-1, கோ-7 என்ற மொச்சை—அவரை ரகங்களைப் பயிரிட ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவும், 10 கிலோ தழைச்சத்தும் (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா), 20 கிலோ மணிச்சத்தும் (125 கிலோ சூப்பர் பாஸ்பேட்) அடியுரமாக இடவேண்டும். ஏக்கருக்கு 10 கிலோ விதைகளை, வரிசைக்கு வரிசை 2 அடி இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 6 அங்குல இடைவெளியும் விட்டு ஊன்ற வேண்டும். அசுவணிப்பூச்சி தாக்கினால் மெட்டாசிஸ்டாக்ஸ் 0·05 சதம் தெளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 2,000 கிலோகிராம் அவரைக் காய் அல்லது 520 கிலோ மொச்சை விதை கிடைக்கும். எனவே பந்தல் தேவையில்லா அவரையைப் பயிரிட்டுப் பயன் மிகப் பெறுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

பந்தல் இல்லா அவரை



ஓடும் ரயிலில்........
ஓயாத சிந்தனை..........
மனப் போராட்டம்....
உறக்கம் வருமா பொன்மொழியாருக்கு? .. ..

காலை நீட்டித் தூங்குமளவுக்கு ரயிலில் கூட்டமில்லை அன்று. எதிர் வரிசையிலே ஒருவர் தூங்கி வழிந்தார். அவருக்குப் பக்கத்திலே காவி உடுத்திய சாமியார் ஒருவர், உலகிலே நான் எதைத் துறந்தாலும் துறப்பேன், தூக்கத்தை மட்டும் துறக்க மறுப்பேன் என்ற உறுதி கொண்ட நெஞ்சினராய், ரயிலின் தாளத்துக்கு ஏற்பத் தலையசைத்துத் தூங்கினார்.

அவரைப் பார்த்தவுடன் பொன்மொழியாருக்கு 'ஞானோதயம்' பிறந்தது. அந்த ரயில் பெட்டி 'போதிமரமாக' மாறிவிட்டது அவருக்கு.

'உன் உள்ளம் எப்படியோ, அப்படியே உலகம்'—என்ற யூகோஸ்லாவியாப் பழமொழி வழக்கம்போல் நினைவுக்கு வந்தது.

ஆகவே, எண்ணித் துணிந்தார் பொன்மொழியார்.

புத்தகங்களைப் பறிகொடுத்ததனால் இவ்வுலகில் தான் அனுபவித்து வந்த அனைத்தையும் துறக்க முடிவு செய்தார். ஆமாம், அவர் துறவியாக முடிவு செய்து விட்டார். எதிரே தூங்கிய காவி உடைச் சாமியார் பொன்மொழியாருக்குக் காட்டிய வழி.

அதே நேரத்தில் அவர் உள்ளத்தில் ஓர் ஐயம் எழுந்தது. நாம் இப்படி ஓடும் ரயிலில் துறவியானால், இது ஊருக்கு எப்படித் தெரியும்? உலகுக்கு எப்படித் தெரியும்? என்பதுதான் அந்த ஐயம்..................

எண்ணித் துணிந்தபின் இப்படி எண்ணுவது இழுக்கு என்று அவரது தமிழறிவு சொல்லிற்று........ஆனால்.........

ஒரு சிறு துளி நீர், கொதிக்கும் பானையை அமைதிப்படுத்துவது போல்—அந்த ஐயம் அவரது திட்டத்தையே மாற்றி விட்டது.

தான் துறவு பூண்டது கூட விளம்பரம் ஆகாவிட்டால் அந்தத் துறவுக்கு ஏது மவுசு, என்ற அவரது கடைசி ஆசையே வென்று விட்டது.

4

'ஆசையில்லாத மனிதன் ஆதம் மகனல்ல' என்ற பாரசீக மொழியை நினைத்துக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக அயர்லாந்து நாட்டுப் பழமொழி ஒன்றும் நினைவுக்கு வந்தது. "ஒரு விஷயத்தை நீ விளம்பரம் செய்ய வேண்டுமா? அதை இரகசியமாக ஒரு பெண்ணிடம் சொல்" என்ற அந்த மொழியை உடனே செயல் படுத்தினால் துறவு பூண்டு விடலாம் என்று முடிவு கட்டினார். ரயிலில் பெண்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறிய எழுந்து நின்றுபார்த்தார். அந்தப் பெட்டியில் எந்தப் பெண்ணும் இல்லை..........

பொன்மொழியார் மீண்டும் ஒரு திடமான முடிவுக்கு வந்தார், இப்பொழுது உடனடியாகத் 'துறவு' பூணுவதில்லை என்று.

# திருவாளர் பொன்மொழியார்

இளவல்

ஒன்றுமாக இருப்பதுதானே இந்த உலகம்!

பொன்மொழியாரின் நல்ல காலமோ, கெட்ட காலமோ எதிரே தூங்கி வழிந்தவர் விழித்துக் கொண்டார். பொன்மொழியாரைப் பார்த்தவுடன் பேசவும் தொடங்கினார்.

"ஐயா, ரொம்பத் தூரமோ?"

"சிவகாசிக்குப் போகிறேன்."

"நான் மதுரைக்குப் போகிறேன்........உங்களுக்குச் சிவகாசிதான் சொந்த ஊரோ?"

பேச ஆரம்பித்தவர் உடனே நிறுத்த மாட்டார் போல் தோன்றிற்று.

பொன்மொழியார் பொறுமையாகப் பதில் சொல்லத் தொடங்கினார். இருவருடைய பேச்சும் தூங்கிக் கொண்டிருந்த சாமியாரையும் எழுப்பிற்று. அதன் விளைவு மூவரும் உரையாடத் தொடங்கினார்கள்.

சாமியார் பேசினார், "இன்று ரயிலில் கூட்டமில்லை! நிம்மதியாகப் பயணம் செய்ய முடிகிறது."

"சாமி, அடிக்கடி ரயிலில் பயணம் செய்வது பழக்கமோ"—அருகில் அமர்ந்திருந்தவர் கேட்டார்.

"யாதும் ஊரே! யாவருங் கேளிரே என்று எண்ணுபவன் எங்கே ஓர் இடத்தில் இருக்க முடியும்?"—பதிலுரைத்தார் சாமியார்.

"அது எப்படி முடியும்? எல்லாச் சொந்தக் காரர்களையும் சந்திக்க வேணுமே? இல்லாவிட்டால் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? போக வேண்டியதுதானே?"—மதுரைக்காரர் குறும்பாகப் பேசுகிறாரா, அப்பாவித்தனமாகச் சொல்லுகிறாரா என்று புரிந்து கொள்ள முடியாமல் பொன்மொழியார் குழம்பினார்.

சாமியார் சாதாரணமாகப் பேசினார். ஆனால் மதுரைக்காரர் பேச்சுக்கு அதில் மறுமொழி அடங்கியிருந்தது. 'யார் யாருக்கு உறவில்லை? அனைவரும் ஆண்டவன் குழந்தைகள்' என்றார்.


தயாரிக்கப்பட்டவை
உலகப் புகழ் வாய்ந்த
ஹெர்குலிஸ்
பிலிப்ஸ்
பிஎஸ்ஏ
நீங்கள் விரும்பிய ஒன்றை
தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்
உற்பத்தியாளர்கள்:
டிஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்
சென்னை-1. பதிவுபெற்று உபயோகிப்போர்
TIC-6493




"யாரும் இதுவரை கண்டு பிடிக்காத அருமையான கண்டு பிடிப்புங்க இது" —என்ற மதுரைக்காரரின் பேச்சு பொன்மொழியாருக்கு நாகரிகமாகத் தென் படவில்லை. இப்படி நேரடியாகவா முகத்தை முறிப்பது? ஆகவே அவரும் பேச்சைத் தொடங்கினர்.

"டென்மார்க் நாட்டிலே ஒரு பழமொழிங்க .......... 'ஒருவன் கடவுளை நோக்கிச் செல்கிறுன் ...... ஒருவன் சைத்தானை நோக்கிக் குதித்தோடுகிறுன்—' என்பது. அது மாதிரி மக்கள் பலவிதம்; பலர் பலமாதிரி இருக்கிறுங்க.... சிலர் கண்டுபிடிப்புகள் சிலருக்குக் கண்டு பிடிப்புகளாகத் தோன்ருமல் இருக்கலாம்."

மதுரைக்காரர் மௌனமாக இருந்தார்! அவரை வம்புக்கு இழுக்க வேண்டும் என்ற எண்ணம் பொன்மொழியாருக்குத் தோன்றிற்று.

அதற்குத் தூபம்போடும் வகையில் சாமியார், "ஆமாங்க, உண்மைக்கு அழிவேது? நீங்க சொல்வது ஆயிரத்தில் ஒரு வார்த்தை" என்ருர்.

பிறகு பொன்மொழியார் சும்மா இருப்பாரா? மதுரைக்காரரைப் பார்த்துக் கேட்டார்: "நீங்க என்ன நினைக்கிறீங்க?"

'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்பது போல்

பதில் சொன்னார் அவர் : "நரி உபதேசம் பண்ணத் தொடங்கினால் உன் கோழிகளைக் கவனி—என்ற அல்பேனிய நாட்டுப் பழமொழியை நினைச்சுக்கிட்டிருக்கிறேன்"............

"என்ன அல்பேனியாப் பழமொழியா?"

"அமெரிக்கப் பழமொழியைக் கூட நினைச்சுக்கிட்டு இருக்கேன்."

"அது என்ன பழமொழி?"

"தலைக்கு மேல் பறவை பறப்பதை உன்னால் தடுக்க முடியாது! ஆனால், அது உன் தலையில் கூடு கட்டுவதைத் தடுக்க முடியும் என்ற பழமொழி."

தனக்குச் சரியான ஜோடி கிடைத்து விட்டதால் சுவாரஸ்யமாகப் பேச நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார் பொன்மொழியார். இது வரை தான் ஆதரித்த சாமியார் பக்கம் அவர் திரும்பவில்லை.

சாமியார் தான் மட்டும் விலகியிருக்க விரும்பவில்லை. அவராக அவர்களுடைய பேச்சில் கலந்து கொண்டார். அவர்களுடைய பேச்சுக்களை ஆதரித்தார்; அனுபவ மொழிகளைப் பாராட்டினார். பொன்மொழியார் போன்று ஓர் அறிவாளி இந்த உலகத்தில் இருக்க முடியாது என்று சொன்னார்.

அவ்வளவு போதுமே பொன்மொழியார் மயங்க! "ஞானம் ஞானத்தைத் தேடும். இனம் இனத்தைச் சேரும்! எம்மை நீரே புரிந்து கொண்டீர்" என்றார்.

பொன்மொழியார் தம் பெருமைகளை எடுத்துரைத்தார். சாதனைகளை விவரித்தார். இன்று அடைந்துள்ள வேதனைகளை விளக்கினார். ........

இவை அனைத்தையும் கேட்க தான் எதுவும் பாவம் செய்யவில்லை என்பது போல மதுரைக்காரர் தூங்கி விட்டார்.

சாமியார் மட்டும் பொன்மொழியாரின் புகழ் மிக்க சரித்திரத்தைக் கேட்டுக் கேட்டு உருகினார்.

அந்த உருக்கமே, அவரைத் தன் குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பொன்மொழியாரிடம் சொல்லிற்று.

பொன்மொழியார் மனம் திறந்து சொன்னார்: "நான் தங்களின் சீடனாக வேண்டும். 'செருப்பில்லை என்று நான் முணங்கிக் கொண்டிருந்தேன். காலில்லாதவனைக் காணும் வரை' என்பது அரேபியப் பழமொழி—உங்களைக் காணும்வரை வேறு எதையோ தேடினேன்."

தன்னைத் திடீரென்று இப்படி உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய்ப் பேசிய பொன்மொழியாரைச் சாமியார் சித்த சுவாதீனமுள்ளவரா என்று சந்தேகித்தார்.

"ஒரு பெண்ணை அழகானவள் என்று சொல்; சைத்தான் அவளுக்குப் பத்துத்தடவை திருப்பிச் சொல்வான்" என்றுதான் சாமியார் அனுபவ பூர்வமான மொழியை அறிந்திருக்கிறார். ஆனால், ஓர் ஆண் மகனைப் புத்திசாலி என்று சொல்லி விட்டால் இப்படி மயங்குவான் என்று கேள்விப்பட்டதே இல்லை.

முதலில் பொன் மொழியாரைச் சீடனாக ஏற்க மறுத்தவர் பிறகு ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார். ரயிலும் ஒரு ஸ்டேஷனில் நின்றது.

"இரண்டு நிமிடத்தில் வருகிறேன்" என்று பொன்மொழியாரின் திடீர் 'குரு' கீழே இறங்கினார்.

ரயில் உடனே ஊதிக்கொண்டு கிளம்பத் தொடங்கியது. குருவைக் காணவில்லையே என்று ரயிலின் கதவைத் திறந்து கொண்டு பொன்மொழியார் எட்டிப் பார்த்தார்.

இரண்டு போலீஸ்காரர்கள் ஓடி வந்து அவரை இடிக்காத குறையாக ஏறினார்கள்.

(தொடரும்)


CHETTINAD BRAND

உறுதிக்கும்

உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை–1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256.

பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்
தந்தி: 'CEMENT' போன்: 144.




# வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| துணை ஆணையர், விவசாய வருமான வரி அலுவலகம், திருநெல்வேலி (காசோலை). | 500 | 00 |
| பாலசுப்பிரமணியா டூரிங் டாக்கீஸ், புத்தியம்புதூர் (காசோலை). | 28 | 23 |
| நிர்வாக அலுவலர், நேலூர் நகர் ஊராட்சி. | 250 | 00 |
| நிர்வாக அலுவலர், ஜக்கனேரி ஊராட்சி. | 100 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூவிருந்த வல்லி. | 83 | 50 |
| வட்டார இணை ஆட்சியாளர், வீரகேரளம் புதூர், திருநெல்வேலி. | 620 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், வாலாஜா பாத். | 152 | 50 |
| துணைப் பதிவாளர், கடம்பூர் | 45 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் போர்டு உயர் நிலைப்பள்ளி, உப்பிடாமங்கலம், திருச்சி. | 25 | 00 |
| இந்தியா சிமெண்ட்ஸ், சென்னை | 2,500 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலகம், தூத்துக்குடி. | 1,585 | 00 |
| துணைப்பதிவாளர், ஓட்டப்பிடாரம் | 74 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குசேரி. | 600 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உடன்குடி, நெல்லை மாவட்டம். | 556 | 50 |
| துணைப்பதிவாளர், நெல்லை | 150 | 00 |
| மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், பசவன் சத்திரம். | 40 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபெரும் புதூர். | 830 | 00 |

| | | |
|---|---|---|
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருத்தணி. | 100 | 00 |
| சென்னை ரிப்போர்ட்டர்ஸ் கில்டு | 101 | 00 |
| திரு டி. ஆர். சுப்ரமணியம், 92, ராசப்பச் செட்டித் தெரு, சென்னை | 301 | 00 |
| திரு ஏ. ஆர். கோபால், தலைவர், ஊராட்சி ஒன்றியம், லால்குடி, அன்பில். | 125 | 00 |
| திருமதி ஆல்டா எம். ப்ளவர், எம்.எல்.ஏ. அகில இந்திய ஆங்கிலோ இந்தியச் சங்கம், கோவை. | 500 | 00 |
| திரு எம். சின்னசாமி, மடுவட்டம், நீலகிரி | 101 | 00 |
| திரு காஞ்சி கல்யாணசுந்தரம், எம்.பி. | 100 | 00 |
| கொம்பர் நகர் தி.மு. கழகம் | 101 | 00 |
| திருமதி தமிழ்ச் செல்வி | 2 | 00 |
| திரு மதுரை எஸ். பி. ராமலிங்கம் | 51 | 00 |
| ஆவணிப்பேட்டை வள்ளியம்மாள் | 2 | 00 |
| திரு எஸ். ஏ. எம். உசேன், ஆயிரம் விளக்கு | 101 | 00 |
| திரு ஏ. ஆர். சுப்பையா, தி.மு.க. கடையநல்லூர் | 33 | 00 |
| திரு எம். எஸ். மணி, காமராஜ் மார்க்கட், விழுப்புரம். | 1 | 00 |
| செயலர், எம். ஜி. ஆர் மன்றம், வேலூர் (சேலம்). | 16 | 00 |
| தொழில் ஆய்வாளர், திருநெல்வேலி | 500 | 00 |
| திரு ஏ. சிவகுமார், கடைநிலை ஊழியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, கன்னியாகுமரி. | 5 | 30 |
| ஸ்ரீநிவாசா குடிசைத் தொழில், கோவை-6. | 25 | 00 |

| | | |
|---|---|---|
| சிக்கராயபுரம், கருங்கல் ஜல்லி தயாரிப்பாளர் (திரு. ராஜரத்தினம், எம்.எல்.ஏ. மூலம்) | 151 | 00 |
| திருமகன் ராஜதுரை | 101 | 00 |
| திரு இப்ராஹிம், வாயிற்காவலன், கென்வின் உயர் நிலை ஆரம்பப்பள்ளி, கோவை. | 10 | 00 |
| திரு ஆர்.எஸ். சுந்தரம், ஆனந்தா இன்டஸ்ட்ரீஸ், திருவொற்றியூர், சென்னை-19. | 12 | 00 |
| வாசன் அறக்கட்டளை | 10,000 | 00 |
| உதயம் புரொடக்ஷன்ஸ் | 1,001 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தென்காசி. | 1,100 | 00 |
| வட்டார ஆட்சியாளர், தாராபுரம், கோவை. | 1000 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர். | 85 | 00 |
| துணைப்பதிவாளர், நிலவள வங்கி, காஞ்சிபுரம். | 404 | 64 |
| ஆணையர், குன்னத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை. | 830 | 00 |
| துணைப்பதிவாளர், தூத்துக்குடி | 137 | 50 |
| டிவிஷனல் என். இ. எம். பி. அலுவலர், தூத்துக்குடி. | 75 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டு, செங்கற்பட்டு. | 625 | 00 |
| மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், சேந்தமரம். | 20 | 00 |
| உதவியாளர், திருநெல்வேலி | 119 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கோடைக்கானல். | 300 | 00 |
| திரு எம். பி. நாராயணன், உரிமையாளர், ஸ்ரீலேகா ஹோட்டல், சென்னை-2. | 5,000 | 00 |
| அஞ்செட்டி விவசாய சங்கம் | 5 | 00 |
| திரு வி. பெருமாள் | 5 | 00 |
| திரு சாந்தகுமார், சீரணிப்படை | 5 | 00 |
| திரு பி. வெங்கடாசலம், சாமல்பட்டி | 10 | 00 |
| திரு எ. டி. லட்சுமணன் | 5 | 00 |
| வனத்துப்பட்டி விவசாயச் சங்கம் | 5 | 00 |
| 16-வது வட்டம் தி. மு. க. .. .. | 15 | 00 |
| 2-வது வட்டம் தி. மு. க. .. .. | 10 | 00 |
| எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் .. .. | 5 | 00 |
| மேல்மனூர் தி.மு.க. கிளை அலுவலகம் | 5 | 00 |
| வேலூர் நகர் பொருளாளர் .. | 5 | 01 |
| சர்கரி ஆலை முன்னேற்ற தொழிலாளர் சங்கம். | 10 | 00 |
| வலையத்தூர் கிளை .. .. .. | 10 | 00 |
| நர்த்தம் பட்டு கிளை தி.மு.க. .. .. | 5 | 00 |
| தெரியாத நபர் .. .. .. | 5 | 00 |
| ஷை .. .. .. .. | 1 | 00 |
| ஷை .. .. .. .. | 5 | 00 |
| அண்ணா மன்றம் .. .. .. | 1 | 00 |
| வேலைபாடி தி.மு.க. .. .. .. | 1 | 00 |
| தெரியாத நபர் .. .. .. | 10 | 00 |
| பொதுச் செயலாளர், தமிழ் நாடு தாழ்த்தப்பட்ட சலவையாளர் சங்கம் சாமாநல்லூர், தென் ஆர்க்காடு மாவட்டம். | 10 | 00 |
| காவேரி மணியம், செயலாளர், (மதுரை (தெற்கு) மாவட்ட தி.மு.க. | 20 | 00 |
| ஆசிரியர்கள், கன்னிகா பரமேஸ்வரி தொடக்கப்பள்ளி, கோயம்புத்தூர். | 11 | 00 |
| கலைஞர் கருணாநிதி மன்றம் .. .. | 10 | 00 |
| முதல்வர் மூலமாக பொதுமக்களிடமிருந்து நிதி. | 68 | 00 |
| கூட்டுறவு ஆலைத் தொழிலாளர் சங்கம் தாராபுரம். | 48 | 00 |
| அண்ணா மன்றம், காரமடை .. .. | 25 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சேலம் (காசோலை). .. | 9,777 | 00 |
| உணவு அமைச்சரிடமிருந்து .. .. | 7,310 | 25 |
| முதலமைச்சர் அலுவலகம் (காசோலை). | 10 | 00 |
| ஷை | 25 | 00 |
| உணவு அமைச்சர் அலுவலகம் .. | 50 | 00 |
| ஷை | 1,039 | 62 |
| சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் .. | 4,168 | 00 |
| தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர், (காசோலை). | 53,133 | 85 |
| பரங்கிமலை ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் | 21 | 00 |
| 12-வது பிளாக், பகுத்தறிவு மன்றம், நெய்வேலி. | 7 | 00 |
| முதலமைச்சர் அலுவலகம் .. .. | 9 | 00 |

| | ரூ. | பை. |
|---|---|---|
| மாவட்ட ஆட்சித்தலைவர், (காசோலை) சேலம். | 3,696 | 50 |
| ஷை | 6,939 | 75 |
| ஷை | 3,934 | 50 |
| ஷை | 8,039 | 00 |
| ஊராட்சித் தலைவர், திருச்செந்தூர் ஊராட்சி மன்றம். | 501 | 00 |
| தலைவர், காயல்பட்டினம் பேரூராட்சி, திருநெல்வேலி மாவட்டம். | 340 | 00 |
| ஏ. கலுங்கு மொய்தீன், நிர்வாக அதிகாரி, ஆறுமுகநேரி, திருநெல்வேலி. | 288 | 00 |
| மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் (காசோலை). | 10,000 | 00 |
| ஷை | 6,932 | 00 |
| கிருஷ்ணகிரி டிவிஷன் மல்லிபட்டி கிராமம் | 5 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் (காசோலை). | 36,960 | 13 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு (காசோலை). | 16,000 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி (காசோலை). | 482 | 00 |
| சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஊழியர்களும். | 501 | 00 |
| தி.மு.க. கட்டாலூர். .. .. | 50 | 00 |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர், கோட்டங்கால். | 15 | 00 |
| செல்வராஜ், ஊராட்சித் தலைவர், வெங்கிகல். .. .. .. | 10 | 00 |
| மாணிக்கக் கவுண்டர், தலைவர், நல்லம். | 11 | 00 |
| கணேசன், ஊராட்சித் தலைவர், ஆண்டில் | 11 | 00 |
| திரு சாமாராஜ், ஊராட்சித் தலைவர், எடபாளையம். | 11 | 00 |
| திரு துரைசாமி, ஊராட்சித் தலைவர், மேலப்பம்பாடி. | 11 | 00 |
| முத்து கவுண்டர், ஊராட்சித் தலைவர், கீழ் நாச்சிப்பட்டி. | 10 | 00 |
| கரூர் வியாச பாங்கு (காசோலை) .. | 500 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், (காசோலை) | 660 | 50 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு | 1,500 | 00 |

| | | |
|---|---|---|
| மாட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு (காசோலை). | 4,000 | 0 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி. | 3,166 | 0 |
| ஷை | 12,72 | 0 |
| ஷை | 2,166 | 0 |
| ஷை | 10 | 0 |
| ஷை | 4,756 | 0 |
| ஷை | 1,275 | 0 |
| மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி (அட்டை விற்பனை மூலம்). | 3,661 | 5 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் .. | 33,691 | 5 |
| ஷை | 30,909 | 6 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி .. | 814 | 3 |
| ஷை | 782 | 5 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் .. | 64,848 | 3 |
| ஷை | 24,777 | [illegible] |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு, வேலூர் (காசோலை). | 2,000 | [illegible] |
| மாவட்ட ஆட்சித் தலைவர், (காசோலை) தர்மபுரி. | 440 | [illegible] |
| ஷை | 381 | [illegible] |
| ஷை | 900 | [illegible] |
| ஷை | 500 | [illegible] |
| ஷை | 665 | [illegible] |
| ஷை | 313 | [illegible] |
| ஷை | 500 | [illegible] |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி. | 7,395 | |
| ஷை | 4,625 | |
| ஷை | 2,169 | |
| ஷை | 3,928 | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு. | 13,995 | |
| மாவட்ட ஆட்சித் தலைவர் நீலகிரி .. | 50 | |
| ஷை | 98 | |
| ஷை | 247 | |
| வேளாண்மை அமைச்சர் அலுவலகம். | 816 | |
| முதலமைச்சர் அலுவலம் .. .. | 1,393 | |

(தொடரும்



கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
புதிய சலுகை!
கதர்ப் பட்டுத் துணிகளுக்கு 10 சதவீதம் கழிவு தரப்படுகிறது.
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்



# ஏன் இந்தக் காதல்?

## 3. வெண்ணிற ஆடை வேண்டாம்!

தேன்மொழியின் எடுப்பான மூக்கு இருக்கிறதே, அது உள் நாக்கு வெளியில் தெரியாத, சின்னஞ்சிறு வெண்கலப் பூசை மணியையே அப்போது பேரின்ப முத்துவுக்கு நினைவூட்டிற்று. அதன் அருகே தமது புறங்கையை வைத்து அவளுக்கு மூச்சு வந்து போகிறதா என்று முடிவு செய்வதற்குள், அவருடைய மூச்சே நின்றுவிடும்போல் நெஞ்சு கனத்துக் கொண்டு வந்தது.

ஆனால், அவர் அஞ்சியவாறு 'சொர்க்கம்' எனச் சொல்லப்படும் அந்த அற்புதமான கற்பனைக் களிப்பு மண்டலத்திற்கு அதற்குள்ளே பயணம் புறப்பட்டு விடவில்லை தேன்மொழி!

எப்படித்தான் புறப்படுவாள்? காதல் கரும்பின் எல்லாக் கணுக்களையுமே கடித்துச் சுவைத்து—இனிப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு முதலான எல்லா நிலைகளிலுமே இடறி விழுந்து—அவள் அலுக்கவோ களிக்கவோ, திளைக்கவோ தேம்பியழவோ வேண்டாமா?

எனவே அவளது உயிர்மூச்சு சீராகவேதான் ஓடிக்கொண்டிருந்தது; பேரின்பமுத்துவின் புறங்கையிலும் அது வெப்பத்தை விசிறி விட்டேதான் ஓடிக்கொண்டிருந்தது.

என்றாலும்கூட, மரத்துள் ஒட்டிக் கொண்டிருக்கும் பனித்துண்டம் போல வேர்வை முத்துக்கள் அரும்பிச் சில்லிட்டுக் குளிர்ந்திருந்தது தேன்மொழியின் நெற்றி; அதனால் அவரது அச்சம் முழுவதுமாக அவரை விட்டு அகலுவதாக இல்லை.

காரைவிட்டுத் தலையை வெளியே இழுத்துத் திரும்பிப் பார்த்த அவர்,

''மாதவா, உனக்கு டாக்டர் பூங்கொடியின் வீடு தெரியுமா?''—என்று கேட்டார்.

''ஓ, தெரியுமே!''—என்றான் அவன்.

''என் 'பிளைமவுத்' வண்டியை எடுத்துக்கொண்டு போய் உடனே அந்த டாக்டரை அழைத்துக் கொண்டு வா.''

''இந்நேரம் அவர் மருத்துவ மனைக்குப் போயிருப்பாரோ என்று நினைக்கிறேன்.''

''போனால் என்ன? முதலில் வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டு இல்லையென்றால் அங்கேயே போய் அழைத்து வந்து விடு.''

ஆ. மறைமலையான்

''ஆனால் ... ...''

''என்ன ஆனால் ?''

''தனக்காகக் காத்திருக்கும் நோயாளிகளையெல்லாம் பாதியிலேயே தவிக்க விட்டுவிட்டு அவரால் எப்படி உடனே இங்கே ஓடி வர முடியும் என்றுதான் யோசிக்கிறேன். அவருக்குத் தொல்லை இல்லாமல் இருப்பதற்கு இந்த மாதிரிச் செய்தால் என்ன? இப்படியே இந்த வண்டியிலேயே தேன்மொழியைக்கொண்டுபோய் அவரிடம் நான் காட்டிவிட்டு வந்து விடுகிறேனே! அவருக்கும் நேரம் மிச்சமாகும்; நமக்கும் ..''—மாதவன் தன் வார்த்தைகளை முடிப்பதற்குள் பேரின்பமுத்து சிறிது சூடாகவே குறுக்கிட்டார்.

''என் மகள் டாக்டரைத் தேடிப்போக வேண்டுமா, டாக்டர் என் மகளைத் தேடி வர வேண்டுமா என்பது எனக்குத் தெரியும். முதலில் நான் என்ன சொன்னேனோ அதை நீ செய்''—என்றவாறே தம் சட்டைப் பையிலிருந்து 'கோல்ட் பிளேக்' சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார் அவர்.

அவருடைய குரலில் வெடித்த அழுத்தம் மாதவனைத் திகைக்க வைத்தது.

''செல்ல மகளைப் பறி கொடுக்கவே நேரும்போதுகூடச் செல்வச் செருக்கைப் பறி கொடுக்க மாட்டேன்'—என்று அடம் பிடிக்கும் அந்த விந்தை யான மனிதரின் வேடிக்கையான இயல்புகள் தன்னுடைய கணிப்பு களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குவதைக் கண்டான் அவன்.

மாதவன் ஓர் அப்பாவி! பேரின்பமுத்துவின் 'கௌரவம்' எவ்வளவு நீளமானது என்பது அவனுக்குத் தெரிய வேண் டாமோ? அந்தக்கால 'அனு மார் வாலே'யும் மிஞ்சக் கூடிய 'அது' தன் பண-நுனியைக் கொண்டே எத்துணை உயர்ந்த பீடத்தில் இருப்பவர்களையும் தன் பக்கம் இழுத்துவந்து விடாதோ?

''சரிங்க; நீங்க சொல்கிற படியே நான் அழைத்து வந்து விடுகிறேன். ஆனால்...... தேன் மொழியை வீட்டுக் குள்ளே கொண்டுபோய்ப் படுக்க வைக்காமல் இப்படிக் காரிலேயே போட்டு வைப்பது நல்லது இல்லையே!''—என்றான் அவன்.

''ஓ! ஆமா; நானும் எவக்கு உண்டான பதற்றத்திலே அதை மறந்தே போய்விட்டேன். சரி, வா! நாம இரண்டு பேருமே தூக்கிப்போய்ப் படுக்க வைப் போம்.''

—என்ற பேரின்பமுத்து தமது கனமான உடலை வளைத்துக் காரினுள் குனிந்து சென்று மகளின் தலையை நிமிர்த்தினார்.

வெள்ளை விழிகள் மட்டும் சங்கு மோதிரத்தின் விளிம்பு போலச் சற்றே தெரியும் வண்ணம் முக்கால் அளவுக்கு மூடியிருந்த அவளது இமைக் கதவுகள் இப்போது நன்றாகத் திறந்து கொண்டுவிட்டன. மலங்க மலங்க மல்லாந்து விழித்த அவள்,

''நீங்கள் தானா, அப்பா?'' —என்று மிக மெலிவாக முனகி னாள்.

அவளது பார்வை, பின்னர் கீழே தணிந்து, காரை ஒட்டியே வெளியே நிற்கும் மாதவன் பால் சென்றது.

அவன் தன் தலையைத் தாழ்த்தி அவளைத் தூக்கிச் செல்ல ஆயத்தமாக அவளது பஞ்சுப் பாதங்களைக் கைகளால் பற்றி னான்.

திடுக்கிட்டுப்போன தேன் மொழி, ''என்னப்பா இது?'' —என்றவாறே தனது கால் களை இழுத்து மடக்கிக் கொண் டாள்.

''உன்னை வீட்டுக்குள்ளே தூக்கிக் கொண்டு போக வேணுமா? அதற்குத்தான்'' —என்றார் பேரின்பமுத்து.

''எனக்கு இப்போ என்ன வந்து விட்டது? சாதாரணக் கிறுகிறுப்பு; அதற்குப் போய் ஏன் இப்படியெல்லாம் ஆர்ப் பாட்டம் பண்ணுகிறீர்கள்? என்னை யாரும் தூக்கிக் கொண்டு போகத் தேவையில்லை; நானே நடந்து போய் விடுவேன்'' —என்றவள் காரிலிருந்து விசையாகவே எழுந்து நின்றாள்.

நான்கு அடிகள் கூட நடந் திருக்க மாட்டாள். மறு படியும் பழைய தள்ளாடல்; தடு மாற்றம்; கீழே விழப்போன அவளை மாதவன் ஓடிப் போய்ப் பிடித்துக்கொண்டு விட்டான்.

அவனது உதடுகளிலே குறும்புச் சிரிப்பொன்று மெள்ள நெளிந்தது.

''என்ன இருந்தாலும் இந்தப் பெண்களுக்கு விருப்பு மட்டும் போகவே போகாது!''—என்று உள்ளூற அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

சில மணித் துளிகளில், பேரின்பமுத்துவின் 'பிளைமவுத்' வண்டி டாக்டர் பூங்கொடியை அழைத்து வரும் பொருட்டு மருத்துவ மனையை நோக்கிப் பறக்கலாயிற்று.

• * •

தேன்மொழியை மயக்கம் வந்து மடக்கி அன்று மூன்றாவது நாள்.

டாக்டர் பூங்கொடியின் கட்டளைப்படி, அறையி னுள்ளேயே சிறையிருந்த அவ ளுக்குப் பொழுதே போக மறுத்தது. புத்தகங்களையும் அவள் நீண்டநேரம் படிக்கக் கூடாதாம். என்னதான் நோயோ? அதற்கு ஏன்தான் இவ்வளவு கட்டுப்பாடோ?

சன்னல் வழியாகப் பார்வை யைப் பறக்கவிட்டுப் பசுமை விருந்தைப் பரிமாறிக்கொண் டிருக்கும் தோட்டத்தை வேடிக்கை பார்ப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியே இல்லை.

அவளுடைய அறைக்கு நேராகச் சற்றுத் தொலைவில் தரையோடு தரையாகப் பம்மிப் படர்ந்திருந்தது ஓர் ஒட்டு மாமரம். அதன் இலைகளுக் கிடையே சலசலப்பை எழுப்பி இரண்டு அணில் பிள்ளைகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன.

கட்டில் மெத்தையில் குப்புறப் படுத்துக் கிடந்த தேன்மொழி, அவைகளின் காதல் விளையாட் டையே கண்கொட்டாமல் பார்த்துக் களித்தாள்.

திடீரென்று வீசியது பலமான குளிர்காற்று. அதனுடைய அவசரத் தழுவலில்—ஆங்கார மான அணைப்பில்—மரங்களில் உள்ள இலைகள் மட்டுமல்ல, அறையினுள்ளே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நாள் காட்டித் தாள்களும் படபடப் புடன் துடித்தன.

தேன்மொழியின் பார்வை இப்போது அறையினுள்ளேயே திரும்பிற்று.

நாள்காட்டியின் அன்றையத் தேதியை அந்தச் சமயம்தான் அவள் உன்னிப்பாகக் கவனித் தாள்.

பழைய நிகழ்ச்சிகள் அவளது நினைவுத் திரையிலே படமாக விரிந்தன.

சந்தேகமே இல்லை; சரியாக ஓராண்டுக்கு முன்னே இதே மாதத்தில் இதே தேதியில்தான் அவள் மாதவனைச் சந்தித்ததும்.

அதற்கு ஓராண்டுக்கு முன் பிருந்தே தங்களுடைய பெரிய நிறுவனத்திலேயே அவன் பணி யாற்றிக்கொண்டிருந்த போதி லும், தங்கள் இல்லத்திலோ தங்களுக்குச் சொந்த மான வேறு இடங்களிலோ அவனைப் பார்த்ததாக அவ ளுக்கு நினைவே இல்லை.

அன்றும் இப்படி யொரு மப்பும் மந்தாரமுமான பிற் பகல்தான். பி.ஏ., தேர்வில் கோட்டை விட்டுவிட்டோமே என்கிற குமுறலுடன் தனியாக

மனம் நொந்து போயிருந்த வேளை; அவளைக் கண்டு ஆறுதல் சொல்ல வந்தாள் அவளுடைய ஆருயிர்த் தோழி துளசி.

அவள் மூலமாகத்தான் முதன் முதலில் மாதவனைப் பற்றிக் கேள்வியுற்றாள் தேன்மொழி.

''உங்களுடைய நிறுவனத்தில் மாதவன் என்கிற ஒருவர் வேலை பார்க்கிறாராமே, அவரைப் பற்றி உனக்குத் தெரியுமா?''—என்று கேட்டாள் துளசி.

''எத்தனையோ நூற்றுக்கணக் கானபேர் எங்கள் நிறுவனத்திலே வேலை பார்க்கிறார்கள். அவர் கள் எல்லாரையும் நான் தெரிந்து வைத்துக்கொள்ள முடியுமா? அதற்கு அவசியந் தான் ஏது?''—என்று அலட்சிய மாகவே விடையிறுத்தாள் தேன் மொழி.

''என்னடி இப்படிச் சொல்லி விட்டாய்? உங்கள் நிறுவனத் தின் பெயரைக் காசு வாங்கா மலே பத்திரிகைகள் எல்லாம் விளம்பரம் பண்ணும்படியாகச் செய்து கொண்டிருக்கிறார் ஒரு மனிதர். அவரைப் போய்த் தெரியாது என்கிறாயே?''

''நீ! சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே! அவர் யாரடி, எங்கள் நிறுவனத்திற்காக அவ்வளவு பாடுபடுகிறவர்?



எனக்குத் தெரியாமல்....?

''ஆமா, நீ ஒவ்வொருநாளும் பத்திரிகைகளைப் பார்க்கிறாயா, இல்லையா?''

''ஊம்; எனக்கு அதிலே அவ்வளவாக உற்சாகம் இருப்பதில்லை. எப்போதாவது புரட்டிப் பார்ப்பேன்''

''அதனால்தான் இப்படி உலகந் தெரியாமல் பேசுகிறாய். இனிமேல், ஆங்கிலப் பத்திரிகைகளை விடாமல் பார்; அதுவும் விளையாட்டுப் பகுதியைத் தவறாமல் பார்; அதிலேதான் உங்கள் நிறுவனத்தின் பெயரும் அந்த மாதவனின் பெயரும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.''

''அப்படியா? வியப்பாக இருக்கிறதே! ஆமா, அந்த மாதவன் எந்த விளையாட்டிலே வீரராக விளங்குகிறார்?''

''டேபிள் டென்னிஸ் இல்லே, அதிலேதான்! மிக அற்புதமான ஆட்டக்காரராம்; பத்திரிகைகள் எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு அவரைப் புகழ்ந்து எழுதுகின்றன. இன்றைக்குக் கூடப் பக்கத்திலே அவர் ஓர் அகில இந்திய வீரரோடு மோதுகிறாராம்; வருகிறாயா போய்ப் பார்ப்போம்?''

துளசி இவ்வளவு விரிவாக எடுத்துரைத்து வற்புறுத்தி அழைக்கவே தேன்மொழிக்கும் அந்த ஆள் எப்படித்தான் ஆடுகிறார் என்று பார்ப்போமே என்கிற ஆர்வம் உண்டாகி விட்டது.

மேலும் தேர்வில் ஏற்பட்டு விட்ட தோல்விச் சுமையைத் தாங்க முடியாமல் வெதும்பிக் கொண்டிருக்கும் தன் உள்ளத்திற்கு அந்த விளையாட்டைப் பார்த்தாவது ஆறுதல் கிட்டட்டுமே என்றும் அவள் எண்ணினாள்.

* * *

தோழிகள் இருவரும் பந்தயம் நிகழ்கின்ற அந்த மாடிக் கட்டடத்தை அடைந்தபோது, அங்கே, நிற்கக்கூட இடம் இல்லாமல் நிரம்பிவழிந்தது கூட்டம்.

''இந்த ஆட்டத்தைப் பார்க்கவா இவ்வளவு பேர் வருகிறார்கள்?'' என்று வியப்பில் ஆழ்ந்து போனாள் தேன்மொழி.

சாதாரணப் பார்வையாளர்கள் மட்டுமின்றிச் செய்தியாளர்களும், நிழற்படக்காரர்களும்கூட அங்கே நிறைந்த எண்ணிக்கையில் முற்றுகையிட்டிருந்தனர்.

அன்று மாதவன் ஆடிய ஆட்டம் இருக்கிறதே அதைப் போல அபாரமான ஒன்றை அதற்குமுன் அவள் கண்டு களித்ததே இல்லை. அந்த முட்டை போன்ற வெண்ணிறப் பந்து அவனது இச்சைப்படியெல்லாம் அப்படியும் இப்படியுமாக எம்பிக் குதித்து, வில்லாக வளைந்தோடி, வெடியில்லாத வாணவேடிக்கை மாதிரியே ஒயிலாட்டம் காட்டியது! அவன் 'சர்வீஸ்' போடுகின்ற நளினத்திலேயே ஒரு தனியான நயம்—கவர்ச்சி—சூட்டிகை—சூரத்தனம்—எல்லாமே மிளிர்ந்தன. பந்தை நிதானமாக எடுப்பதிலும் சரி, சமயம் பார்த்து ஒரே வெட்டாக அடிப்பதிலும் சரி தனக்கு நிகர் தானே என்பதை அவன் நன்றாக மெய்ப்பித்துக்காட்டினான். என்னதான் அகில இந்திய வீரராக இருந்த போதிலும் கூட எதிர் ஆட்டக்காரரால், மாதவனின் பந்து வீச்சை—இல்லை—குண்டு வீச்சைத் தாங்கவே முடியவில்லை; மிகவும் திணறிப்போனார். தம்மைத் தழுவப்போவது தோல்விதான் என்று தம் மனத்துக்குப் பட்டு விட்டதாலோ என்னவோ அவர் கடைசி நேரத்திலே முறை கேடாக வெல்லாம் பந்தை அடிக்க முற்பட்டு விட்டார். ஆனால் அந்த அடிகளையெல்லாம் மிகுந்த விழிப்போடு சமாளித்துப் பந்தைக் கீழே விடாமல் அவன் தன் உடம்பை ஒடித்துக் கொண்டு எடுத்த 'எடுப்பு' இருக்கிறதே—சுறுசுறுப்பு இருக்கிறதே—அது பலமுறை பார்வையாளர்களிடமிருந்து கரமுழக்கங்களை அவனுக்கு வாங்கிக் கொடுத்தது.



அப்பொழுதெல்லாம் தேன்மொழியும் தன்னை மறந்து அவர்களோடு சேர்ந்து தானும் கைதட்டவே தட்டினாள். உவகைப்பெருக்கில் அவளது தளிருடல் அடிக்கடி புல்லரித்துச் சிலிர்த்தது.

''இத்தனை நாள் இவருடைய ஆட்டத்தை எப்படி நான் பார்க்காமல் இருந்தேன்? அதுவும் எங்கள் நிறுவனத்திலேயே அலுவல் பார்ப்பவராக இருந்தும் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேனே!....அப்பாவும் இவரைப் பற்றி என்னிடம் சொல்லவே இல்லையே! ஒருவேளை அவருக்கே இவருடைய திறமையைப் பற்றி—புகழைப் பற்றி—தெரியவே தெரியாதோ?'' என்று வருந்தவும் வருந்தினாள் தன் மனத்திற்குள்ளே.

மறுநாள் காலை.

வழக்கம் போல் குளித்து முழுகிக் கூந்தலை உலர விட்டவாறே தோட்டத்தில் பூத்துச் சிரிக்கும் ரோஜாச் செடிகளின் அருகே சென்றாள் தேன்மொழி.

குடகுநாட்டுப் பேரழகிகளின் மாதுளங் கன்னம் போல அப்பொழுதுதான் மலர்ந்து அவிழ்ந்த சிவப்பு ரோஜாப்பூ ஒன்றைத் தன் தலையில் சூடிக்கொள்வதற்காக அவள் கிள்ளும் பொழுது அவளுடைய காலடியில் வழுவழுவென்று ஏதோ தட்டுப்பட்டது.

கீழே குனிந்து பார்த்தால், அது ஒரு கூழாங்கல்; முந்தின நாள் பிற்பகலில் பார்த்தாளே 'முட்டைப் பந்து'—அதையே உரித்துக் கொண்டு வந்தது போன்ற கூழாங்கல்.

உடனே அவளுக்கு மாதவனின் ஆட்டமும்—அவனுடைய தோற்றமும்—அவனது ஆட்டத்தைக் கண்டு களிக்கக் கூடியிருந்த கூட்டமும்—அவள் நினைவைக் களவாடின.

அவசரம் அவசரமாக ரோஜாப் பூவைப் பறித்துத் தலையிலே சூடிக்கொண்ட அவள், பரபரப்போடு தன் அப்பாவின் அறையை நோக்கி ஓடினாள்.

பேரின்பமுத்து வெளியில் புறப்படுவதற்கு ஆயத்தமாக, கட்டுவிரியன் பாம்பின் தோலை நினைவுபடுத்தும் 'டை'யைத் தமது கழுத்தைச் சுற்றிலும் நிதானமாகக் கட்டிக்கொண்டிருந்தார்.

''என்னம்மா தேன்மொழி! ஏன் இப்படிப் படபடப்போடு ஓடி வருகிறாய்?'' —என்று கேட்டார்.

''ம்.. ஒண்ணும் இல்லே; ஒரு முக்கியமான சேதி'' —என்றவாறே அவள், தன் தந்தையின் மேசையை விழிகளால் துருவினாள்.

''என்னம்மா, இது! 'ஒண்ணும் இல்லே'ன்னும் சொல்றே! 'ஒரு முக்கியமான சேதி'ன்னும் சொல்றியே! என்ன வேடிக்கை? என்ன குழப்பம்?'' —என்று சிரித்தார் பேரின்பமுத்து.

இதற்குள் அந்த ஆங்கில நாளிதழைக் கையில் எடுத்துவிட்ட அவள் கடைசிப் பக்கத்தைத்திருப்பிப் பார்த்தாள். அவளுடைய தோழி துளசி சொல்லியிருந்தது சரிதான். மாதவனின் படமும், அவனுடைய விளையாட்டுத் திறனைப் பற்றிய அழகான விளக்கக் கட்டுரையும் அதிலே வெளியாகி இருந்தன.

உற்சாகந் தாங்க முடியவில்லை, தேன்மொழிக்கு. அந்த ஆங்கில நாளேட்டின் கடைசிப் பக்கத்தைத் தன் தந்தையின் கண்ணெதிரே நீட்டியவாறே, ''இந்தப் படத்தைப் பார்த்தீர்களா, அப்பா?'' —என்று கேட்டாள்.

''ஓ! பார்த்து விட்டேனே!'' —குரலிலே எந்தவிதச் சலனமும் இல்லாமல் கூறினார் அவர்.

''அப்படியானால் அந்த மாதவனைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?''

''ஏன் தெரியாது? நம்முடைய நிறுவனத்தில் அவனை நான் சேர்த்துக் கொண்டதே அவனுடைய விளையாட்டுத் திறமைக்காகத்தானே?''

—உடனே முந்தின நாள் துளசி சொன்ன ஒரு சொற்றொடர் அவளுடைய நெஞ்சிலே மின்னலிட்டது.

''....அவருடைய விளையாட்டுத்திறமைக்காகவா? அல்லது அந்தத் திறமை மூலமாக நம் நிறுவனத்திற்குக் காசு இல்லாமலே விளம்பரம் ஆகட்டும் என்றா?..''

—என்று கேட்டே விட்டாள் தேன்மொழி.

''நீ சொல்கிறபடியேதான் வைத்துக் கொள்ளேன்!''—என்று பெரிதாகச் சிரித்தார் பேரின்பமுத்து.

''போகட்டும், அப்பா, எனக்கோர் ஆசை''

''என்ன அது?''

''எனக்கும் 'டேபிள் டென்னிஸ்' கற்றுக் கொள்ள வேண்டும்போல் இருக்கிறது.''

''உனக்கு எதற்கம்மா அந்த முட்டைப்பந்து—மட்டை அடி—எல்லாம்?''

''ஏம்பா, நானும் அவரைப் போல டேபிள் டென்னிசிலே 'சேம்பியன்' ஆகிவிட்டால், நம்முடைய நிறுவனத்துக்கு இன்னும் விளம்பரம் கிடைக்குமே!''

''பலே பலே! நம்முடைய நிறுவனத்தை விளம்பரப்படுத்துவதிலே நீ என்னைவிடப் புத்திசாலியா இருக்கிறியே!..ம்.. இருந்தாலும் அதைப்பற்றிக் கொஞ்சம் யோசனை பண்ணியே முடிவெடுப்போம். நான் இப்போது அவசரமாக வெளியே போக வேண்டியிருக்கு; வரட்டுமா?''

—பேரின்பமுத்து யோசனை செய்வதற்கு அதிகமான காலத் தவணையை அளிக்கத் தேன்மொழி உடன்படவில்லை.

ஆம்; அடுத்த ஏழாவது நாளிலேயே 'டேபிள் டென்னிஸ்' கற்றுக்கொள்வதற்கான எல்லா ஏற்பாடுகளும், அந்த மாளிகை வீட்டின் முதல் மெத்தையில் உள்ள நீண்ட கூடத்தில் உருவாகி விட்டன.

அவளுக்குப் பயிற்சியளிக்க மாதவனே வரவழைக்கப்பட்டான். அவனைத் தவிர வேறுயார்தான் அங்கே வர முடியும்? வேறு யாருக்குத்தான் அந்தத் தகுதி இருக்கிறது?

ஆனால்,—

முதன் முதலில் பயிற்சி அளிக்க வந்த அன்று மாதவன் செய்த 'மூக்கறுப்பு' இருக்கிறதே அதை அவளால் மறக்கவே முடியாது! எனினும் அந்த 'மூக்கறுப்பு' அவளது உள்ளத்தை உறுத்தவில்லை; முள்ளாகக் குத்தவும் இல்லை. மாறாக, அது அவளுக்குத்தேனாகவே இனித்தது; இன்றைக்கும் அது தெவிட்டாமலே சுவைக்கிறது.

அவன் செய்த அந்த 'மூக்கறுப்புத்தான்' என்ன?

புதிதாக விளையாட்டைக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடிப்பில் தன்னை அழகுத் தேவதையாகவே அலங்கரித்துக் கொண்டாள் தேன்மொழி. மல்லிகைப் பூக்களாலேயே சிலையாகச் சமைத்த மாதிரி, வெள்ளை வெளேரென்று நைலான் புடவையும் சோளியும் அணிந்திருந்த அவள் அசல் நடன நங்கையாகவே தன் வயிற்றுப் பரப்பும் தெரியுமாறு தோற்றமளித்தாள்.

பச்சை விரிப்புப் போடப்பட்டிருந்த அந்த நீண்ட சதுரமான டென்னிஸ் மேடையை அவள் நெருங்கிய பொழுது, மாதவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய விழிகளில், சுற்றிநிற்கும் மற்றவர்களின் கண்களில் மிதக்கும், அழகைப் பருகுகின்ற 'துய்ப்போ' —இரசனையோ—இல்லை.

''வெள்ளைப் புடவைக்கும் இந்த விளையாட்டுக்கும் ஒத்து வராதே! அதைக் கட்டிக் கொண்டு ஆடினால் ஒளியின் சாயல் (கிளேர்) அடிக்கும்; பிறகு பந்து வருவது போவது சரியாகத் தெரியாது. ஆகையாலே வேறே நிறத்திலே புடவையைக் கட்டிக்கொண்டு வாருங்கள்.''

—என்று அமைதியாகச் சொன்னான் அவன்.

தேன்மொழிக்கோ ஒரே வெட்கமாகப் போய்விட்டது; அசடுதான் வழிந்தது அவள் பூ முகத்தில்!

அதே சமயம்,

'இந்த விதியையெல்லாம் முன்னுலேயே சொல்லித் தொலேயக்கூடாதா? எல்லாருடைய முன்னிலேயிலும் இப்படித்தான் மூக்கறுப்பதா?''—என்று உள்ளூற அவளுக்கு எரிச்சலும் உண்டாயிற்று; ஆனுல் அது வெறுப்பில் விளேந்தது அல்ல; விருப்பில் முகிழ்த்த செல்லமான எரிச்சல்!

* * *

இவ்வாறு பயிற்சி கொடுக்கத் தொடங்கும் பொழுதே தன் இதயத்திற்கு எரிச்சல் கலந்த இனிப்பையே தந்த மாதவன், அதே முறையிலாவது தான் ஏங்கிக் கொண்டிருக்கும் ஓர் அமைதியான வாழ்வைத் தேன்மொழிக்கு அளிக்கக் கூடாதா!

அவனே . . ? இன்பமே இல்லாததாக மட்டுமின்றி—ஒரே எரிச்சலாக, ஏன் எரிமலேயாகவே அவளுடைய வாழ்வைச் சிதற அடித்து விடுவான்போல் இருக்கிறதே?

தேன்மொழியால் விம்மலே அடக்கமுடியவில்லே; கண்ணீரையும் துடைக்க முடியவில்லே.

அவள் இப்படித் துயர வெள்ளத்திலே அமிழ்ந்து கொண்டிருக்கும் பொழுது யாரோ அறைக் கதவைத் தட்டுகின்ற ஓசை கேட்டது.

—(தொடரும்)


கேட்டு வாங்குங்கள்

இந்த இதழுடன்

இலவச இணைப்பு

நமது குரல்


# பொதுப் பணித் துறை

## தமிழ்நாடு அரசு

**ஒப்பந்த விவர அறிக்கை.**

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழகப் பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னரது அலுவலகத்தில் 26—8—1971 மாலே 3·00 மணிவரை கீழ்க் கண்ட வேலேக்கான ''மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள்'' பெற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. வேலேயின் பெயர் : | | தஞ்சை ஜில்லா—நாகப்பட்டினம் தாலுக்கா வேளாங்கன்னி மாதா கோயில் சமீபத்தில் வெள்ளேயாற்றின் இடது கரை மைல் 99/4-260ல் தடுப்புச் சுவர் கட்டுதல். |
| 2. ஒப்பந்தம் வகை | .. | கே. 2. |
| 3. வைப்புத் துகை (கருவூல செலான் உருவில்). | .. | ரூ. 6,000. |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலே அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை என்ற தலேப்பில் செயற்பொறியாளர் வெண்ணுறு கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும். | | ரூ.25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) |
| 5. விற்பனே வரி (அரசினர் கருவூலங்களில் விற்பனே வரி (பி) பற்றுசீட்டு XII நிலவிற்பனே வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனே வரி என்ற தலேப்பில்) செலுத்த வேண்டும். | | 0·88 (பைசா எண்பத்தெட்டு மட்டும்) |
| ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள். | | 7—8—1971. |

24—7—1971

**ஆர். வேணுகோபால்.**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித்துறை,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

# தமிழரசு அளிக்கும்
## செய்தி விளம்பரத்துறை

ரலாற்றுப்
பட்டகம்!
இலக்கியப்
பழை!
வண்ணக்
களஞ்சியம்
என்று
எல்லாரும் போற்றும்
ண்ணம், பல்வகைச்
றப்புடன் தயாராகிறது!

# வெள்ளி விழா மலர்

பல்துறை அறிஞர்கள்
வல்லுநர்கள்,
எழுத்தாளர்கள்,
அனைவரும்
எழுதுகிறார்கள்!
இதில்.....
இல்லாதது
எதுவுமே
இல்லை!

.. இப்பொழுதே
உங்கள் பிரதிக்கு
விற்பனையாளரிடம்
பதிவு செய்க

செப்டம்பர் திங்களில்
கிடைக்கும்

முன்னிலாப் புதுமுறையில்
தன்னந்தனிச் சிறப்போடு வெளிவரும்

**விலை ரூ. 2-50.**


# நெய்வேலியும்...நமது நாடும்


**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது–தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.





**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி–1**


FDSNLC946TM

# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-1513TM

# அரங்கேற்றம்




பூவுக்கே அரங்கேற்றம் வண்டு வந்தே
பொற்காதல் புரிகின்ற நன்னாள்! பெற்ற
நாவுக்கே அரங்கேற்றம் பேச்சைக் கேட்டுப்
பிறர்கைகள் ஒலிக்கின்ற பொன்னாள்! நல்ல
மாவுக்கே அரங்கேற்றத் திருநாள் மூன்று
வரிஅணிலும் கனிக்குலையும் கூடும் நன்னாள்!
பாவுக்கே அரங்கேற்றம் என்றால் தொட்டுப்
படித்தவுடன் நெஞ்சினிலே பதியும் நாளே!

பள்ளிஅரங் கேற்றத்தால் பார கத்தின்
பக்கங்கள் கண்முன்னால் தெரிந்தி டாதா?
வெள்ளிஅரங் கேற்றத்தால் கீழை வானில்
வெளிச்சப்பூ பரிதிமலர் மலர்ந்தி டாதா?
கள்ளவிழிக் காதல்அரங் கேற்றத் தாலே
கனிமழலைக் குழலோசை ஒலித்தி டாதா?
கள்ளிகளின் அரங்கேற்றம் காவில ஏன்,ஏன்?
கருத்துமணம் கவியரங்கில் கமழ வேண்டும்.

கதிரவனின் அரங்கேற்றம் கண்ட பின்னால்
கடன்வாங்கும் நிலாவண்ணம் மங்கிப் போகும்!
பதரெல்லாம் காற்றரங்கில் ஏறும் போது
பளிங்குநெல்லில் ஒட்டாமல் விலகி ஓடும்!
உதிரிகளும் அறிவரங்கில் அடியை வைத்தால்
உண்மைஉரு வெளியாகும்; சாயம் போகும்!
புதியதொரு சிந்தனையாம் பொனன ரங்கில்
'புரட்சிப்பா' பாடுவதே இந்நாள தேவை!

வள்ளுவரின் அரங்கேற்றம் உலகத் திற்கே
மாச்சட்டம் தந்ததனால் நாமு யர்ந்தோம்!
தெள்ளுதமிழ் இளங்கோவின் அரங்கேற்றத்தால்
சிலம்போசை கேட்டதிங்கே; நாம்நி மிர்ந்தோம்!
நள்ளிரவில் அரங்கேறும் உடுக்கள் கோடி;
நம்நினைவில் ஏற் யதோ திங்கள் தானே!
அள்ளிஅள்ளிக் காலமெலாம் சுவைப்ப தற்கே
அருங்கவிதை அரங்கேற்றம் மலர்ந்தி டட்டும்!

கவிஞர். கா. வேழவேந்தன். எம்.எல்.




# பரிசு பிறந்த கதை

ஏறக்குறைய நூற்றி இருபது ஆண்டுகளுக்கு முன்பு !

சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் ஒரு சிறுவன் தலைவலியால் துடித்துக்கொண்டிருந்தான். படுக்கையை விட்டுக்கூட அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அவனது அன்னை அவன் அருகிலேயே அமர்ந்து அவனுக்கு ஆறுதல் சொல்லி வந்தாள். ஆறுதல் மொழி கூறும்போதே, அருஞ்செயல் புரிந்து அழியாப் புகழ் பெற்ற மாவீரர்களின் வீர வரலாற்றையும் எடுத்துச் சொன்னாள் அந்தத் தாய். அவளது முயற்சி வீண்போகவில்லை. தலைவலியால் துடித்துக்கொண்டிருந்த சிறுவன் மனவலிமை அடைந்தான். தன்னம்பிக்கை அவனது இதயத்திலே தளிர்க்கத் தொடங்கியது. அந்தச் சிறுவன் யார் தெரியுமா ?

உலகமெல்லாம் புகழும் வண்ணம் நோபெல் பரிசு என்ற உன்னதமான பரிசை உருவாக்கிப் பெரும் வள்ளல் என்ற பெயரைத் தேடிக்கொண்ட ஆல்பிரட் நோபெல்தான் அந்தச் சிறுவன்.

1833-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ஆம் நாள் பிறந்தார் நோபெல். அவரது தொடக்கக் கல்வி ரஷ்ய நாட்டிலுள்ள லெனின் கிராடில் தொடங்கியது.

அவரது பதினேழாவது வயதில், கப்பல் கட்டும் தொழிலில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. மகனின் மன இயல்பை அறிந்த தந்தை, அவரை அமெரிக்க நாட்டுக்கு அனுப்பி வைத்தார், கப்பல் சம்பந்தப்பட்ட பொறியியல் நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்காக.

சில வருடங்கள் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த நோபெல், ஒரு சிறு நிகழ்ச்சியால் மனம் வருந்தினார். அவருக்குப் பொறியியல் கல்வி கற்றுத் தந்த ஆசிரியர் எரிக்ஸன், துவக்கத்தில் பொருளாதார வளத்துடன் வாழ்ந்தவர்—திடீரென்று வசதியற்றவராகிவிட்டார்; வறுமையில் வீழ்ந்துவிட்டார். அறிவுச் செல்வம் இருந்தும் பொருட்செல்வம் இல்லாததால் அந்த ஆசிரியர் அல்லல் உற்ற காட்சி நோபெலின் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது.

“எதிர்காலத்தில் நான் மிகப் பெரும் பணக்காரனாவேன்! அறிவியலுக்கு ஆக்கந்தரும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் விரிவடைவதற்கு அவர்களுக்கு வேண்டிய பொருள் வசதி செய்துகொடுப்பேன்” என்று தனக்குத் தானே உறுதி எடுத்துக்கொண்டார்.

சில ஆண்டுகளில் சொந்த ஊருக்குத் திரும்பிய நோபெல், தன் தந்தையின் தொழிற்சாலையிலும், சகோதரர்களின் தொழிற்சாலைகளிலும், தனது அறிவியல் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். ‘டைனமைட்’ என்று சொல்லப்படும் வெடிமருந்தை அவர் 1865-ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். அவரது கண்டுபிடிப்பு அவருக்கு மிகுந்த வருவாயைக் கொடுத்தது. பிரான்சு, சுவீடன், அமெரிக்கா, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து முதலிய நாடுகளில் எல்லாம் வெடிமருந்துத் தொழிற் கூடங்களை உருவாக்கினார் நோபெல். மிகக் குறுகிய காலத்திற்குள் அளவற்ற செல்வம் அவரை அண்டியது.

நோபெலின் கண்டுபிடிப்பை, அறிவியலார் புகழ்ந்தார்கள். ஆனால், பொதுமக்கள் கண்டனக் கணைகளை அள்ளி வீசினார்கள்.

“நோபெலின் படைப்பு அரக்கர்களின் கையில் ஆபத்து நிறைந்த ஆயுதத்தைக் கொடுத்துவிட்டது” என்று புலம்பினார்கள்.

நோபெல் பிற்காலத்தில் இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருக்கலாம் என்பது, அவரது நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.

## பிழைபட எழுதேல்!

### ஞாயிறு தோறும்.

பிரதி ஞாயிறுதோறும் விடுமுறை என்று பல்வேறு அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் அறிவிப்புப் பலகைகள் காட்சியளிப்பதை நாம் நாள் தோறும் காண்கிறோம். பிரதி ஞாயிறு எனினும், ஞாயிறு தோறும் எனினும் பொருள் ஒன்றே. எனவே பிரதிஞாயிறு தோறும் என்று பயன்படுத்த வேண்டியதில்லை. பிரதி ஞாயிறு என்றோ, ஞாயிறு தோறும் என்றோ எழுதினால் போதும்—அது தான் சரி.

## பிழைபட எழுதேல்!

### காட்சி.

நாள் தோறும் மூன்று காகஷிகள் நடைபெறும் என்னும் திரையரங்கு விளம்பரங்களை நாம் பல்வேறு திரைப்பட விளம்பரங்களில் காண்கிறோம். 'காகஷிகள்' என்று எழுதுவது தவறு. காண் என்னும் பகுதிச் சொல் 'சி' என்னும் தொழிற் பெயர் விகுதி சேர்த்துக் காட்சி என்றுதான் வருமே தவிரக் காகஷி என வராது. எனவே நாள்தோறும் மூன்று காட்சிகள் நடைபெறும் என்று எழுதுவதே சரி.

கலிங்கப் போரிலே ஏராளமான மக்கள் மாண்டு மடிந்ததைக் கண்டு, மனம் நொந்து, "உலகத்தில் இனிமேல் போரே கூடாது! அன்பே ஆட்சி செய்ய வேண்டும்" என்று அசோக மன்னர் நினைத்தாரல்லவா? அதுபோல, நோபெலும் புதிய சிந்தனைக்கு ஆளானார்.

"உலக அமைதியை எண்ணி நாம் உருவாக்கிய 'டைனமெட்' உலகுக்குக் கேடு தரும் பொருளாகிவிட்டதே" என்ற ஏக்கம் அவரை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியது. அதனால் தான் அவர் பிற்காலத்தில், உலகத்து மனிதர்களின் நன்மைக்காகப் பாடுபடும் ஆற்றலாளர்களுக்குப் பரிசு வழங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். மேலும், ஏற்கனவே தனது அறிவியல் ஆசிரியர் ஒருவர் வறுமையில் வாடியதும், அப்போது தான் சூளுரை உரைத்ததும் அவரது நினைவை விட்டு அகலவே இல்லை. அதனால் 1895-ஆம் ஆண்டு 90 லட்சம் டாலரை மூலதனமாக்கி "அந்த வருமானத்திலிருந்து வருகின்ற வட்டிப் பணத்தை ஆண்டுதோறும் பரிசாகக் கொடுக்க வேண்டும்" என்று ஓர் உயில் எழுதி வைத்தார். ஏறக்குறைய 40 ஆயிரம் டாலர் பரிசுத் தொகையாகக் கொடுக்கப்பட்டது.

இயல்பியல், வேதியில், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய ஐந்து துறைகளில் உலக மக்களின் நலனுக்காகத் தொண்டாற்றுகின்றவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு வழங்கச் செய்தார். சில சமயங்களில் ஒரு துறைக்கு இருவர் அல்லது மூவர் கூட அந்தப் பரிசைப் பெற்றதுண்டு.

1901-ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிசு கொடுக்கப்பட்டு வருகிறது.

இயல்பியல், வேதியல் ஆகிய துறைக்குரிய பரிசுக்குரியவர்களை ஸ்டாக்ஹோமில் உள்ள ராயல் விஞ்ஞானக் கழகம் தேர்ந்தெடுக்கிறது. மருத்துவத் துறையில் பரிசுபெறத் தகுந்தவர்களை ஸ்டாக்ஹோமில் உள்ள கரோலின் கல்வி நிலையம் தேர்ந்தெடுக்கிறது. இலக்கியப் பரிசுக்குரியவர்களை ஸ்வீடன் நாட்டு இலக்கியக் கழகம் தேர்ந்தெடுக்கிறது. உலக சமாதானப் பரிசுக்குரியவர்களை நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தைச் சேர்ந்த ஐந்துபேர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கிறது.

எவரும், நோபெல் பரிசு அடைவதற்குத் தாமே மனுச் செய்துகொள்ள முடியாது. தகுதி வாய்ந்த வேறு ஒருவர், பரிசுபெறத் தகுதியுள்ளவரின் பெயரைச் சிபாரிசு செய்ய வேண்டும்.

இலக்கியத் துறைக் குரிய பரிசு எப்படி நிர்ணயிக்கப்படுகிறது தெரியுமா? அச்சிடப்பட்ட எழுத்தோவியங்களுக்குத் தான் பரிசு வழங்குகிறார்கள். ஓர் இலக்கிய ஆசிரியர் தாமே எழுதித் தமது வீட்டிலேயே வைத்துக்கொண்டிருக்கும் கையெழுத்துப் பிரதிகளுக்கல்ல.

நோபெல் பரிசுக்குரிய பதக்கம்




இதுவரை, சுமார் 350 பேர்களுக்குமேல் இந்த நோபெல் பரிசைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சிலர் இந்தப் பரிசை ஏற்றுக்கொள்ள மறுத்தும் இருக்கிறார்கள்.

இயல்பியல், மருந்தியல், சமாதானம் ஆகிய துறைகளில் அமெரிக்க நாட்டினர்தாம் அதிகமாகப் பரிசு பெற்றிருக்கிறார்கள். வேதியல் துறையில் ஜெர்மன் நாட்டுக்காரர்களும், இலக்கியத் துறையில் பிரெஞ்சுக்காரர்களும் பெரும்பான்மைப் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.


இலக்கியத்துறைக் குரிய பரிசை 1913 ஆம் ஆண்டு நமது நாட்டுக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூர் அடைந்தார்.

இயல்பியல் துறையில், நமது இந்திய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி சர் சி. வி. ராமன் 1930-ஆம் ஆண்டு பரிசு பெற்றிருக்கிறார். இவர்களுக்குப் பிறகு இந்திய நாட்டில் எவருக்கும் இந்தப்பரிசு கிடைக்கவில்லை.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள்—எதிர் காலத்தில் இந்தப் பரிசைப் பெற்று நமது நாட்டுக்கும் பண்புக்கும் பெருமை தேடித்தர வேண்டும்!

—வடிவு


அண்ணன் காட்டிய வழி 4
மருந்து போட்டுக்கிட்டு வேலன் தூங்குறானா?
காலிலே சரியான அடி எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கணும் இப்பத்தான் தூங்க ஆரம்பிச்சான்
எங்க அப்பா பெரிய டாக்டரிடம் காட்டணும்னு சொன்னாங்க நடக்கவே முடியலே! வலியாலே பேசவும் முடியலே பாவம்.....
உங்க ரெண்டு பேர் கூட நடந்துதானே இங்கே வந்தான்?
மருந்து போட்ட பிறகுதானே எல்லாம் தெரியுது!
இப்ப.... என்ன செய்றது?
வேலன் வீட்டிலே சொல்லிட்டு மருத்துவர் ஐயாவைக் கூட்டிக்கிட்டு வருவோம்
வேலனைக் கேட்காமே செய்யலாமா?
அவனை ஏன் கேட்கணும், இப்பத்தான் தூங்க ஆரம்பிச்சான்
வேலன் வீட்டிலே சொல்லிட்டு மருத்துவர் ஐயாவையும்...
வேண்டாம்.. வேண்டாம் எங்க வீட்டிலே சொல்லாதே மருத்துவர் ஐயாவைக் கூப்பிடாதே!
உன்னாலே பேச முடியாது.... தூங்கிறேனு செல்வனும் செந்தாமரையும் சொன்னாங்க....
வந்து... வந்து........ விளையாட்டுக்கு.. உங்களை ஏமாற்றணும்னு.....
அதனாலேதான் அப்படிச் சொன்னோம்
நாங்க பயந்துட்டோம். வேலா! ஒனக்கு ஒன்னுமில்லையே
எனக்கு ஒன்னுமில்லே...
ஒன்னுமில்லாத போது கோபமா ஏன் பேசறே.....
நமக்குள்ளே சண்டை ஏன்? நம்ம ஆண்டு விழாவைப் பற்றி முடிவு செய்வோம்
இங்கேயே உட்கார்ந்து பேசலாமே!
நாம் இங்கே செய்ற முடிவுதான் இறுதி முடிவா இருக்கணும்.
அண்ணனைக் கேட்காமே முடிவு செய்ய முடியுமா?
அண்ணாவைக் கேட்டே இறுதி முடிவு செய்யலாம்
அதுதான்... சரி, அண்ணாவே இறுதி முடிவு செய்யட்டும்
இறுதி முடிவு செய்யும் அந்த அண்ணன் யார்?
தொடரும்
கதை: நம்பியின் தம்பி * படம்: குமார்



# நெஞ்சில் குரல்

முதல்வர்,
டாக்டர், கலைஞர்,
**மு.கருணாநிதி**


நமது
குரல்
முதல்வர்,
டாக்டர், கலைஞர்,
மு.கருணாநிதி
முத்து

# நமது குரல்

நாலரைக்கோடி தமிழ் மக்களின் நல்வாழ்வினைப் பாதிக்குமளவுக்கு மைசூர் அரசு காவிரி நதி நீர் சம்பந்தமான 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி, காவிரியின் மேற்பகுதியில் அணைகள் கட்டிவருவதைக் கண்டித்துத் தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரு முகமான குரல் எழுப்பியுள்ளனர்.

சட்டமன்றத்திலும் பேரவையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக முதல்வர் இரு பேரவைகளிலும் ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

பிரச்சினை இப்போது இந்தியத் தலைமை நீதிமன்றம் வரை சென்றுள்ளது அனைவரும் அறிந்த ஒன்றே.

வணக்கம்.

சென்னை,
11-8-1971.

செய்தி விளம்பரத் துறை,
தமிழ் நாடு அரசு.

# முன்னுரை


வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் பெருமையும் பெற்ற, 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி' தமிழகத்தின் வளத்திற்கு உயிர் நாடியாயுள்ளது. தமிழக வளமும் காவிரி நலமும் இரண்டறக் கலந்தது—காவிரி இன்றேல் தமிழகம் இன்று என்பது இயற்கை நிலை. வற்றாத காவிரியும் தமிழ்நாட்டில் வறண்டிடுமோ என்ற அச்சம் காவிரியின் தலைவாயிலில் அணைகளைக் கட்டி நீரைத் தடுத்திட நினைக்கும் மைசூர் மாநிலத்தின் அவசர நடவடிக்கைகளால் தோன்றியுள்ளது. 1924-ஆம் ஆண்டின் உடன்பாடு தமிழ்நாட்டுக்கும், மைசூருக்கும் வளம் சேர்த்து நலம் காக்கும் நல்லதோர் ஏற்பாடு. அவ்வுடன்பாட்டினை மீறிக் காவிரியின் துணை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய நதிகளில் அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது மைசூர் அரசு. மத்திய அரசின் அனுமதி யின்றியே அணைகளைக் கட்டுவதில் மைசூர் காட்டுகின்ற வேகத்தைப் பார்த்தால் மத்திய அரசின் அதிகாரம் மைசூரில் செல்லுபடி ஆகவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

1892-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இரு மாநிலங்களும் தமது உரிமைகளை வழக்கப்படி அனுபவித்துக்கொள்ள முடியாதபடி, அவ்வுடன்பாடுகளை மீறி, மைசூர்அரசு தனது அணைத் திட்டங்களை நிறைவேற்றுமானால், தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சி எல்லாம் 'பொய்யாய்ப் பழங் கதையாய் போனதே' என்று ஏங்கி வருந்தும் நிலையும், தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சையும், அதை அடுத்த திருச்சியும், பஞ்சப் பகுதிகளாகிப் பாழடையும் நிலையும் ஏற்படும்.

வரப்போகிற இந்த ஆபத்தை ஆழ்ந்து உணர்ந்த காரணத்தால் தான், தமிழகத்தின் மக்கள் அனைவரும் ஓரணியாய்த் திரண்டெழுந்து நிற்கின்றனர்.

தமிழ் நாட்டின் வரலாற்றில் என்றும் காணாத வகையில் தமிழ் நாட்டின் வாழ்வையே அழிக்க வரும் இந்த ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்றிடத் தமிழ் நாட்டின் அரசியல் கட்சியினர் அனைவரும் கருத்து வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டுச் சூளுரைத்து நின்று முழக்கமிடுகின்றனர். தமிழகத்தின் ஒருமித்த உணர்வை, உரத்து முழக்கமிடும் ஆற்றல்மிகு தலைவராகத் தமிழ்நாட்டின் முதல்வர் டாக்டர்

கலைஞர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் விளங்குகிறார்கள். நினைவுக்கெட்டாத காலந்தொட்டு நாம் பெற்று வந்த காவிரி நீரை மட்டுமல்லாமல், இயற்கையன்னை தமக்களித்துவிட்ட ஏற்றமிகு உரிமைகளைக் காப்பதற்கு, எந்தத் தியாகமும் செய்யத் துணிந்துவிட்ட தமிழக மக்களின் இதய உறுதியினைக் கசப்பின்றியும், காழ்ப்பின்றியும், கனிவாகவும், கண்ணியமாகவும் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையொட்டித் தமிழ்நாடு சட்டப் பேரவையிலும், மாமன்றத்திலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், அத் தீர்மானத்தின் மீது டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரையும் இங்கே தொகுத்துத் தரப்பெறுகின்றது.



# நமது குரல்

## தீர்மானம்

தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892—1924 ஆம் ஆண்டு களில் கையெழுத்தான ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்தையும் மீறி, மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவை களுக்கான திட்ட விவரங்களைப் பற்றியும் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெருமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட் டியே பெற்றுக்கொள்ளாமலும், இதனுல் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன்போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப் பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தேக்கங்கள் தகராறுகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்கு காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரித் திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருந்தும்கூடத் தமிழ் நாட்டிற்குத் தொன்று தொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ் நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமை யாத இப் பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்கா மல் அளவு கடந்து காலதாமதம் செய்து வருவதைக் கண்டு இம் மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலம் தாழ்த்தினால் மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத்தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழி கோலுமென்றும் அதனால் பன்னெடுங்காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறிபோய்விடும் என்றும் இப் பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனை மிக்க இத்தகைய சூழ்நிலையில் இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து, இத் தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை இம் மன்றத்தின் தீர்ப்புக்கு விட்டு நியாயம் வழங்குமாறும் நடுவர் மன்றம் இத் தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும் இந்திய அரசை இப் பேரவை வலியுறுத்துகிறது.

## தீர்மானத்தின் நோக்கம்.


தமிழகத்திற்கே உரிய பண்போடும், தமிழ்நாட்டு மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் வைத்திருக்கும் சிறப்பான நம்பிக்கையின் அடிப்படையில் எள்ளளவும் பிற மாநில மக்களுக்கும் நமக்குமிடையே பகை உணர்வு தோன்றக் கூடாது என்கிற உணர்ச்சியோடும், தயாரிக்கப்பட்ட தீர்மானம் இது.

தமிழ்நாட்டிற்குப் பரம்பரை பரம்பரையாக இருந்துவருகிற பாத்தியதை உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கமாகும்.

## காவிரியின் வரலாறு.

காவிரி—இந்தியாவில் இருக்கிற மிகப் பெரிய நதிகளில் நான்காவது நதியாகும்.

804 கிலோ மீட்டர் நீளமுள்ள காவிரி ஆறு இந்தத் தமிழகத்தில் மாத்திரம் 321 கிலோ மீட்டர் அளவுக்கு ஓடிக் கொண்டிருக்கிறது.



இந்த ஆற்றில் மைசூரின் வடக்குப் பகுதிகளிலே துணை நதிகளாக ஹேமாவதி, லோக்பவானி, சிம்சா, ஹார்க்காவதி ஆகிய உப நதிகளும் தெற்கே லட்சுமண தீர்த்தம், கபினி, சொர்ணவதி ஆகிய துணை ஆறுகளும் காவிரியில் கலக்கின்றன.

காவிரியில் கலக்கின்ற வரை இந்த ஆறுகள் அந்தப் பெயரைப் பெறுகின்றன. பின்னர் காவிரி என்ற மொத்தப் பெயரினைப் பெற்று விளங்குகின்றது என்று வரலாறு கூறுகிறது.

### ஒப்பந்த விவரம்.

அந்தக் காவிரியில் தமிழகத்திற்கு உரிய பங்கு—உரிமைகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் தமிழகம் உரிமைக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம்—அன்றையத்தினம் ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் தலையிட்டு 1892-ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1924-ஆம் ஆண்டில் ஒருமுறையும் ஆக இரண்டு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள்.

இந்த ஒப்பந்தங்களில் மிகக் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்

(1) கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கம் இயங்குவது—தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் (Limit flow) எந்த விதத்திலும் குறைந்துவிடக் கூடாது.

(2) தமிழக அரசு மேட்டூர் அணைப் பாசனத்தை மூன்று லட்சத்து ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக்காது.

(3) காவிரியிலோ, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கிளை நதிகளிலோ தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்த வித அணைகளையும் கட்டக் கூடாது.


உத்தேசிக்கப்பட்டிருக்கிற அணைகளைப் பற்றிய முழு விவரங்களையும் மைசூர் அரசு, தமிழக அரசிற்குத் தர வேண்டும்.

அணைக்கட்டுகளில் வேலை தொடங்குவதற்கு முன் தமிழக அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்; புது அணைக்கட்டுகள் காரணமாக தமிழக அரசு தனது பாசனத்திற்கென்று பெற்று வருகின்ற தண்ணீர் அளவு (Limit flow) பாதிக்கப்படக்கூடாது.

### ஒப்பந்தத்தை மைசூர் உதாசீனப்படுத்துகிறது.

இந்த ஷரத்துக்கள் அடங்கிய ஒப்பந்தம் மீறப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் தமிழகத்திற்கு அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாகும்.

மைசூரில் ஹேமாவதியிலே அணை கட்ட வேண்டும் என்ற திட்ட அறிக்கை 1964-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.





அந்தத் திட்ட அறிக்கையை மைசூர் அரசு பெற்றுக் கொண்டு 1968-ல் ஹேமாவதி அணைக்கட்டிற்கான அடிக்கல் நாட்டு விழாவை மைசூர் மாநில முதலமைச்சர் அவர்கள் நடத்தி வைத்தார்கள்.

அந்தச் செய்தி கிடைத்ததும், தமிழக அரசு தனது மறுப்பைத் தெரிவித்தது மாத்திரமல்லாமல், மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல தீர்வினைக் காண வேண்டும் என்று 1968-ஆம் ஆண்டு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது. நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மத்திய அரசும் 1968 டிசம்பர்த் திங்களில் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தது.

'' தமிழகத்தோடு இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணுகிற வரை திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மைசூருக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது '' என அந்தக் கடிதத்தில் மத்திய அரசினர் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் கபினி நதியில் இரண்டரைக் கோடி ரூபாயில் ஒரு சிறிய அணையைக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்டி ஒப்புதலைப் பெற்று, இப்போது அதே அணையை இருபத்தைந்து கோடி ரூபாய் அணைத் திட்டமாக மாற்றிக் கட்டுவதற்கான முயற்சியையும் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள்.




கபினியில் மாத்திரமல்ல— சொர்ணவதியிலேயும் அணைக்கட்டுத் திட்டத்தை அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். குடகுப்பகுதியிலேயுள்ள ஹேரங்கி நதியிலும் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். ஹேமாவதி மாத்திரமல்ல—கபினி, சொர்ணவதி, ஹேரங்கி போன்ற கிளை நதிகளிலும் அணைக்கட்டுத் திட்டங்களை—பாசனத்திட்டங்களைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### தடுப்புரிமை.

குடகுப் பகுதி மைசூரில் சேராமல் தனி மாநிலமாக இருந்தபோது அங்குக் காவிரியின் கிளை நதியான லட்சுமண தீர்த்தத்தில் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தைக் குடகு மாநிலத்தினர் நிறைவேற்ற முயன்றார்கள். அப்போது மைசூர் அரசு இந்த அணைக்கட்டினால் மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்றும் ஆட்சேபம் கிளப்பியது. அந்த ஆட்சேபத்தை முன்னிட்டு, அப்போதிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு மைசூரின் பாசனத்தைப் பாதிக்கிற வகையிலே லட்சுமண தீர்த்தம் என்ற இடத்தில் அணை கட்டக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அந்தக் குடகு மாநிலத்தை மைசூரில் இப்போது இணைத்துவிட்டார்கள். இப்போது அந்தக் குடகுப் பகுதியில் ஹேரங்கியிலே அணைக்கட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தங்களது மாநிலம் பாதிக்கப்படும் என்பதற்காக, தங்களது மாநிலத்திற்கு மேலேயிருந்த குடகில் அங்கே கட்டப்பட்ட லட்சுமண தீர்த்தம் அணைக் கட்டைத் தடுப்பதற்கு மைசூர் அரசுக்கு உரிமை இருந்தது.

### அணைக்கட்டுகளை மறுக்கவில்லை. ஆனால்....

அதே அடிப்படையில் நமது மாநிலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நமது பரம்பரை பாத்தியதைகள்—உரிமைகள்—பாசன வசதிகள்—ஒப்பந்தங்களின்படி நமது பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய வரையறுக்கப்பட்ட தண்ணீர் (Limit flow) பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் ஹேமாவதி, கபினி, சொர்ணவதி, ஹேரங்கி அணைகள் கட்டப்படுவதை நாம் ஆட்சேபிக்கிறோம். இதனால்

அணைக்கட்டுகளையே நாம் மறுக்கிறோம் என்பதல்ல பொருள் ; அந்த அணைக்கட்டுகள் கட்டப்படுவதானால் அந்த விவரங்கள் நமக்குத் தரப்பட வேண்டும். அந்த அணைக்கட்டுகள் கட்டப்படுவதன் மூலம் தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டிய தண்ணீரின் அளவு எந்த விதத்திலும் குறைக்கப்படக் கூடாது என்ற உத்தரவாதம் அன்று அளிக்கப்பட்டது.

## நடப்பு என்ன ?

ஆனால் நடப்பது என்ன ! ஒப்பந்தத்தில் இருப்பதைப் போல நமக்கு விவரங்கள் கொடுக்கப்படவில்லை. நமக்கு விவரங்கள் அளிக்கப்படாதது மாத்திரமல்ல ; மத்திய அரசினுடைய முன் அனுமதி பெறப்படவில்லை. இந்த இரண்டும் அல்லாமல்—நமது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போல் தன் போக்கில் அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஹேரங்கியைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், அந்த ஹேரங்கி ஆறு—ஒப்பந்தத்தின் பட்டியலில் சேர்க்கப்படாத ஆறு என்று.

இங்கேதான் நம்முடைய வாதம் வலுப்பெறுகிறது

"ஒப்பந்தத்தில் வராத ஆறு—ஆகவே நாங்கள் விவரங்களை அளிக்க முடியாது" என்கிறார்கள். ஒப்பந்தத்தில் வராத ஆறு என்பதால் விவரம் அளிக்க முடியாது என்றால் ஒப்பந்தத்தில் இருக்கிற ஆறுகளுக்கு விவரங்களை அளித்தாக வேண்டும் என்பதை அவர்களே தங்களையறியாமல் ஒப்புக்கொள்கிறார்கள். சரி. ஒப்பந்தத்தின் பட்டியலில் உள்ள ஆறுகளுக்காவது விவரங்களை அளித்தாக வேண்டும். அறிவித்தார்களா என்றால். அதுவுமில்லை. விவரங்களையும் அறிவிக்காமலும் பேச்சு வார்த்தையில் நாம் குறிப்பிட்ட கஷ்டங்களையும் சிந்தித்துப் பார்க்காமலும் மத்திய அரசின் முன் அனுமதி பெறாமலும் நடைபெறுகின்ற இந்தக் காரியத்தை 1968-ஆம் ஆண்டு மைசூர் முதல் அமைச்சர் என்றைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினாரோ—அதைத் தொடர்ந்து தமிழக அரசு அதை ஆட்சேபித்து வருகிறது. அவ்விதம் ஆட்சேபித்து வந்த நேரத்திலெல்லாம்—கட்சிச்சார்பற்ற முறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும கூட்டி—அவர்களிடம் நிலைமைகளை விளக்கி அவர்களுடைய அரிய ஆலோசனைகளைப் பெற்று வந்தோம். மைசூர் முதல்வரோடும் கேரள அமைச்சரோடும் திரு கே. எல். ராவோடும் பேச்சு வார்த்தைகளை நடத்துகிறபோதெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் முடிவின் பேரிலேயே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

## அனைத்துக் கட்சிகளும், நாமும்.

அந்த வகையிலே இந்த அரசுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும், தமிழ்நாட்டு மக்களின் நலனை உத்தேசித்து, தங்களுடைய அன்பான ஒத்துழைப்பை அளித்ததற்காக என்னுடைய இதய பூர்வமான பாராட்டுதல்களைத் தமிழக அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.


இந்த நிலைமையில் கடைசியாக, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினேம். அந்தக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டும் நிதானப் போக்கைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களை நடத்துவது.

(2) தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் டில்லிப் பட்டணத்தில் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்துத்தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்தைப் பற்றிய நிலைகளை எல்லாம் விவரமாக விளக்கி, மத்திய அரசின் ஒப்புதலையும் பெறுமல் மைசூர் அரசு அணைகளைக் கட்டுவதை நிறுத்தி வைக்குமாறு கோரும் முறையீடு ஒன்றைத் தருவது.

(3) இதையடுத்து, சட்டப் பேரவையிலும் மேலவையிலும் இந்தப் பிரச்சினை குறித்துத் தீர்மானம் நிறை வேற்றுவது.

இவற்றில் முதலிரண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.




தமிழகம் முழுவதும அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கண்டனக் கூட்டங்கள் மிக எழுச்சி மிக்சதாக உணர்ச்சி நிறைந்ததாக உருக்கம் மிக்கதாக நடந்து முடிந்திருக்கின்றன. அதனைத் தொடர்ந்து—நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சரை டில்லியிலே சந்தித்து நமது நியாயமான உரிமைகளை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

## மூன்றுவது கட்டம்.

மூன்றுவது கட்டமாக இந்தத் தீர்மானத்தை இம் மாமன்றத்தில் நிறைவேற்ற நாம் கூடியிருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் நிச்சயமாகக் கட்சி மாச்சரியத்திற்கு இடமில்லை. இதிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்று கூட அல்ல—தமிழ்நாட்டுக்காரர்கள் என்ற நிலைமையில்—தமிழ்நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்ற அளவில் அனைவரும் பங்கு பெற்றிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையில் பங்கு பெற்று இதுவரை முழு ஒத்துழைப்புத் தந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் இனியும் இந்த அரசுக்கு இது போன்ற ஒத்துழைப்பைத் தருவார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

## ஏன் இந்தப் பொறுமை?

நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய மனப்பூர்வமான ஆதரவைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாகத் தந்தமைக்கு அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் மிகுந்த பணிவன்போடு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு ஆளும் கட்சித் தரப்பிலும், மற்றக் கட்சிகள் தரப்பிலும் பேசிய உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினையில் நாம் இன்னும் வேகம் காட்ட வேண்டும் என்று கூறியிருந்தாலும் வேகம் காட்டவில்லை என்று கூறியிருந்தாலும் இரண்டையும் மத்திய அரசை வலியுறுத்துவதற்கேற்ற நல்ல படைக்கலன்களாக எடுத்துக்கொண்டு, அவர்கள் பேசிய அந்த வார்த்தைகளையே மத்திய அரசோடு இந்த அரசு வாதிடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைத்துக்கொண்டு நிச்சயமாக அரசு வாதிடும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் நான் மிகப் பொறுமையாக இருந்தேன் என்றும், இனிமேலும் இந்தப் பொறுமை தேவையில்லை என்றும் அறிவுரை கூறுகின்ற அளவில் எதிர்க் கட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்.

இதில் பொறுமை காட்டுவதற்கு மிக இன்றியமையாத காரணம் உண்டு! இந்தப் பிரச்சினை மைசூர் மாநிலத்து மக்களுக்கும், தமிழகத்து மக்களுக்கும் பகைமையுணர்ச்சியை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதாலும், இந்திய ஒருமைப்பாட்டில் நாம் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தாலும் அந்த ஒருமைப்பாட்டிற்கு ஊனம் ஏற்பட்டு

விடக் கூடாது என்பதாலும்தான் நாம் இந்தப் பிரச்சினையை மிகுந்த அக்கறையோடு—நிதானத்தோடு—பொறுமையோடு பல மாத காலமாகப் பரிசீலனை செய்து வருகிறோம்.


இந்தப் பிரச்சினையின் தீர்வுக்குரிய அறிக்கை இன்னும் ஒரு மாதத்தில் வரும் வரும் என்று காத்துக் கிடந்தோம். மாதங்கள் 18 உருண்டோடினவே தவிர —உற்ற பயன் ஏதுமில்லை !

அந்த வேதனையான நிலையில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம். வேதனை ஏற்படுகின்ற நேரத்தில் உணர்ச்சிகள் பொங்குவதும் அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் வார்த்தைகள் வெளிப்படுவதும் இயல்பு. எனினும் வெளிப்பட்ட வார்த்தைகள் மறுபடியும் எடுத்து உட்கொள்ளக்கூடியவை அல்ல என்று காரணத்தினுல் அந்த வார்த்தைகளில் நாம் நிதானம் காட்டவேண்டும் அதிலும் பொறுப்பிலே உள்ளவர்கள்அதிக நிதானம் காட்ட வேண்டும் என்பதாலும் பொறுமை காட்டி வருகிறோம்.

அதிலும் குறிப்பாக—மைசூர் அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையில் தேவையில்லாமல் மைசூர் மாநிலத்து மக்களின் மனம் புண்பட்டுவிடக் கூடாதே என்பதால்தான் நாம் இதிலே அளவு கடந்த பொறுமையைக் காட்டி வருகின்றோம்.

**உறவுச் சங்கிலி.**

கர்நாடகத்து மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நீண்ட காலமாக உறவு உண்டு! அந்த உறவினை வலுப்படுத்தும் வகையில் காவிரி ஆறு —இரண்டு உறவையும் இணைக்கின்ற நல்ல சங்கிலியாகவும் இருந்திருக்கிறது. அந்த உறவை இன்று துண்டித்து விடுகின்ற நிலைமையில் இந்தக் காவிரிப் பிரச்சினை ஆகிவிடக் கூடாது என்பதில் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.




இந்த அவையிலே இருக்கிற—இந்த நாட்டிலே இருக்கின்ற பலருக்கு மைசூர் மாநிலத்திலே இருக்கின்ற மக்களோடு நல்ல தொடர்பு உண்டு! மைசூர் மாநிலத்து மக்கள்

பலர் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; தமிழ் நாட்டினர் பலர் மைசூரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில் நாம் ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு—அவர்கள் எவ்வழி செல்ல வேண்டும் என்று சுட்டிக் காட்டும் நிலைமையில் தமிழக அரசு செயல்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையிலேதான்—இந்தப் பிரச்சினையில் கசப்புகள் ஏற்பட்டு அதனால் விபரீத விளைவுகள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலைவைப்பதாகவும், இரண்டு மாநிலங்களுக்கிடையிலேதான் நாம் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறோம்.

ஆனால், நாம் காட்டி வருகிற அக்கறையும், போற்றி வளர்த்து வருகிற பண்பாடும் நாம் உருவாக்கியிருக்கிற நல்லெண்ண முயற்சிகளும் மைசூர் மாநில அரசின் சார்பிலே காட்டப்படவில்லையென்பதைச் சில பல ஆதாரங்களின் மூலமாக எடுத்துக் காட்டினார்கள். மேலும்,

கொடும்பாவி.

தமிழக முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்பட்டதையும்சுட்டிக்காட்டினார்கள்

முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்படுவதைப்பற்றிக்கூட நான் வருத்தப்படவில்லை. கவலைப்படவில்லை. ஆனால் அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதைச் சிலபேர் நம்முடைய தமிழ்நாட்டிலே மகிழ்ச்சிகரமாக விளம்பரப்படுத்துகிறார்களே என்பதை எண்ணித்தான் நான் வருத்தப்படுகிறேன். தமிழ்நாட்டில் சிலர், காவிரி நீர்ப்பிரச்சினையை நான் சீக்கிரம் தீர்க்கவில்லை என, எனக்கு எதிர்ப்பாக இன்னும் தீவிரமாகச் செயல்படவேண்டுமென்று எனக்குச் சுட்டிக்காட்ட-அதற்கு அடையாளமாக என்னுடைய கொடும்பாவியைத் தமிழ் மண்ணிலே ஒரு தமிழ் மகன் கொளுத்தினால் கூட நான் வருத்தப்படமாட்டேன். நாம் இன்னும் வேகமாகச் செயல்படவில்லை-இன்னும் வேகமாகச் செயல்படவேண்டுமென்று இப்படித் துரத்துகிறார்கள் என்று எண்ணி மகிழ்ச்சியடைவேன். ஆனால் இம்மாதிரிச் செய்திகளைப் போடுகின்ற நேரத்திலே செய்தியளவிலே போடாமல் மகிழ்ச்சியுடன் போடுவதுமாதிரி போடுகிறார்களே என்றுதான் வேதனைப்படுகிறேன்.

நான் ஒருமுறை, 'நமக்குள்ளே ஆயிரம் தகராறுகள் இருந்தாலும் வெளி மாநிலங்களுக்கு நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக் கொடுப்பதிலும் நம்முடைய மாநிலத்தின் மான உணர்ச்சியை விட்டுக் கொடுப்பதிலும் கிஞ்சிற்றும் கட்சி

மாச்சர்யங்களுக்கு ஆட்பட்டுவிடக்கூடாது’ என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். அது, இங்குள்ள ஒவ்வொரு உறுப்பினருடைய உணர்வுகளைப் பொறுத்த விஷயமாகும். ஆனால் ஒரு பத்திரிகையில்—[பத்திரிகையின் பெயரை வெளியிட விரும்பவில்லை]— அந்தச் செய்தி எப்படி வெளியிடப்பட்டிருந்தது என்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். ‘‘பெங்களூரில் 500 கன்னடத்தவர் ஒருவருடைய தலைமையில்—[அவருடைய பெயரை விளம்பரப்படுத்த விரும்பவில்லை]—தமிழக முதல் மந்திரி கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக்கொள்கையை எதிர்த்து அவருடைய கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச்சென்று எரித்தார்கள்’’. நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக அவர்கள் கற்பனை செய்து ஊர்வலமாகச் சென்று எரித்தார்கள் என்ற செய்தியை வெளியிட்டிருந்தாலும் செய்தி அளவிலே தான் போட்டார்கள் என்று நான் அதைப்பற்றிக் கவலைப் பட்டிருக்க மாட்டேன். நான் மைசூர் எதிர்ப்புக்கொள்கையை உடையவனாக இருக்கிறேன் என்று அவர்கள் சுட்டிக் காட்டிய குற்றச்சாட்டை இங்குள்ள பத்திரிகைக்காரர்கள் ஏற்றுக் கொண்டு, கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்து அவனுடைய கொடும்பாவி அங்கே கொளுத்தப்பட்டது என்று போடும் போது தான் வருத்தப்படுகிறேன். இந்தப் பிரச்சினையில் கட்சிகளை மறந்துவிட்டு, எல்லாக் கட்சிகளும் இதிலே ஒருமித்த குரலினை எழுப்ப வேண்டுமென்று தான் 1968-லே இருந்து பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் இருந்து வருகிறது. இப்பிரச்சினையில் ஒரு காலக்கெடு வைக்க வேண்டும். இப்படியே நாம் பேச்சு வார்த்தைகள் நடத்துவதும், பேச்சு வார்த்தைகள் முறிவதும், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து 18 மாதங்கள் கழிவதும், பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டுவதும், அதன்படி கண்டனக் கூட்டங்களை நடத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊர்வலத்தை நடத்தி, இப்போது சட்ட மன்றத்தில் தீர்மானம் போட்டுவிட்டு அனுப்பி இதற்கும் மத்திய அரசு இறங்கி வந்து—தமிழகம் இருளடைவதைத் தடுக்கும் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபடாவிட்டால் என்ன செய்வது? அதற்கு ஒரு காலக் கெடு வேண்டாமா? என்றெல்லாம் இங்கு பேசிய தலைவர்களும் உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

### காலக்கெடு

இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தைப்பற்றி மேலவையிலும் பேரவையிலும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் பேசிய பேச்சுக்களின் சுருக்கங்கள், நான் ஆற்றிய உரையின் சுருக்கங்கள்

அனைத்தையும், இந்தத் தீர்மானத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் இந்த மாதம் 15 நாளைக்குள்ளாக பதில் அனுப்பாவிட்டால் அதற்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி நாம் எந்தவிதக் கிளர்ச்சியை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு ஒரு கெடுவினை மத்திய அரசுக்கு அறிவித்துவிட்டு நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

### கசப்புணர்ச்சியை வளர்க்க வேண்டாம்

மைசூர் மாநில மக்களுக்கும் நமக்கும் ஏற்படும் தகராறுக மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற வேண்டுகோளை என் சார்பாக மாத்திரமல்ல-இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் மைசூர் மாநிலத்திலேயிருக்கின்ற பெருங்குடிமக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனது உணர்வுகளை, நமது இரு மன்றங்களையும் சார்ந்த உறுப்பினர்களின் உணர்வுகளை மைசூர் மாநில மக்களிடம் யாரும் திரித்துக்கூறி, அவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு கசப்பு உணர்ச்சியை ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமென்றும்கேட்டுக்கொள்கிறேன்.

### நியாயமும் உரிமையும்

மகாஜன் கமிட்டித் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மைசூர் அரசு காட்டும் ஆர்வத்தை இந்த ஒப்பந்தத்தில் ஏன் காட்டவில்லை? என்று கேட்டார்கள். நான் டெல்லிக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருந்தபோது மைசூர் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம் மைசூர் அரசினுடைய நியாயமான வாதங்களுக்குப் பின்னால் நானும் நிற்க வேண்டும் என்பதாகும். அவர்கள் அப்போது என்னிடம் பேசும்போது மகாஜன் கமிட்டி நிறுவப்பட்டு அந்தக் கமிட்டி தீர்ப்பளித்த பிறகு அதற்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்திற்குப் புறம்பாகவோ நடக்கலாமா என்று கேட்டார்கள். ஆமாம், இந்தக் கமிட்டியின் தீர்ப்புக்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்துக்குப் புறம்பாகவோ யாரும் நடக்கக்கூடாதென்பது நியாயம்தான் என்று நான் சொன்னேன்.

மைசூர், ஒப்பந்தத்தை மீறுகிறது என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன், என்பதைப் புரிந்துகொண்டு சிரித்தார்கள். அதற்குப் பிறகும் இன்னும் மகாஜன் கமிட்டியின் அறிக்கையை அங்கீகரிக்க வேண்டுமென்று எப்படி மத்திய அரசை நிர்ப்பந்திக்க மைசூர் அரசுக்கு உரிமை இருக்கிறதோ அதைப் போல, தமிழக அரசுக்கு நியாயமான கோரிக்கையில் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று வலியுறுத்துவதில் ஏராளமாக உரிமைகள் இருக்கின்றன.

## மைசூரின் போக்கு

கிட்டத்தட்ட 1943-லிருந்து இதுவரையில் மைசூரின் போக்கு முரண்பட்டிருக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அப்போது குடகு மாநிலம் மைசூரில் இல்லாததால்-குடகில் லட்சுமணதீர்த்தம் அணைகட்டப்படும்போது அப்போது மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்று அந்த அணைக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது. அப்போது தமிழ்நாடும் உதவிக்கு அழைக்கப்பட்டது. இதனால் தமிழ் நாடும் பாதிக்கும்; நீங்களும் சேர்ந்து குடகிலே அமைக்கப்போகிற லட்சுமண தீர்த்தம் அணைக்கட்டுக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள்' என்று மைசூர்அரசாங்கம் நம்மைக் கேட்டது.

இப்போது மைசூரும் குடகும் ஒன்றாகப் போனதும் தமிழ்நாட்டைப் பாதிக்கும் வகையில் ஹேரங்கி அணைக் கட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

## நடுவர் தீர்ப்புக்குவிட நடுங்குவதேன்?

ஹேமாவதி திட்டத்திற்கு 1964-ல் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டதென்று சொன்னேன். 1964-ல் மைசூர் அன்று தயாரித்த ஹேமாவதி பற்றிய அறிக்கையில் நமக்குச் சாதகமான பல விஷயங்கள் இருக்கின்றன.

நடுவர் தீர்ப்பு என்றால் ஏன் பயப்படுகிறார்கள் என்று இங்கு கேட்டார்கள். இதுதான் காரணம். அதிலே என்ன இருக்கிறது என்றால், அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டினால்,

> "It is not possible to utilise the entire quantity as the Hemavathi river is a 'scheduled river' governed by the Cauvery agreement of 1924 between Madras and Mysore."

"மைசூருக்கும் தமிழகத்திற்குமிடையே 1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட காவிரி ஒப்பந்தத்தின் கீழ் பட்டியலிட்ட நதியாக ஹேமாவதி இருப்பதால் அந்த ஹேமாவதி நதியின் முழுமை நீர் அளவையும் உபயோகப்படுத்துவது என்பது இயலாது". என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல; இன்னும் ஒரு முக்கியமான விஷயம்.

### மைசூருக்காகத் தயாரித்த புத்தகம் :

The project does not affect utilisation or interstate interests the project is designed keeping in view 1924 agreement of Madras and Mysore states. The project comes under the purview of 1924 agreement.

' இந்தத் திட்டம் நீர் உபயோகத்தையோ-மாநிலங்களுக்கிடையேயான நலன்களையோ பாதிக்காது. மைசூர்-தமிழக அரசுகளின் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மீதான கண்ணோட்டத்தில் உருக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் வரம்புக்குக் கீழே வருகிறது ' என்று இருக்கிறது. இவ்வளவும் ஹேமாவதி அணையைப் பற்றி 1964-ம் ஆண்டு ஹேமாவதி ரிசர்வாயர் பிராஜெக்ட் என்று தலைப்பிட்ட இந்தப் புத்தகம் மைசூர் அரசால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட புத்தகம். இதிலே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தான் ஹேமாவதி அணை கட்டப்படும். கட்டப்படவேண்டும், தமிழ்நாட்டுக்குத் தரப்பட்ட வேண்டிய (லிமிடேஷன் ப்ளோ ரூல்ஸ் ஆப் ரெகுலேஷன்) பாதிக்காமல் அணை கட்டப்பட வேண்டும் ; கட்டப்படும் என்று உறுதி அளிக்கின்ற புத்தகம் தான் இது '

அடுத்து, 1967-ஆம் ஆண்டு இன்னொரு சம்பவம் நடைபெற்றது. தமிழ் நாட்டு நீர்ப்பாசனப் பொறியாளரும், மைசூர் நீர்ப் பாசனப் பொறியாளரும் மத்திய அரசின் நீர்ப்பாசனப் பொறியாளர் தலைமையில் கூடி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசு சி. டபிள்யூ. பி. சி. நீர்ப்பாசனத்துறை பொறியாளர் டி.பி. ஆனந்த் கையெழுத்திட்டு இருக்கிறார். மைசூர் அரசின் சார்பாக மாக்டோம் கையெழுத்திட்டிருக்கிறார். தமிழகத்தின் சார்பாக ஜே. இ. வாஸ் கையெழுத்திட்டிருக்கிறார்.

' 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்க மைசூர் அரசு முற்றிலும் தயாராக இருக்கிறது எனவும் அந்த ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட வரையறைக்குட்பட்ட தண்ணீர்ப் பெருக்கு எந்த வகையிலும் ஹேமாவதி திட்டத்தினால் பாதிக்கப்படமாட்டாது எனவும் மைசூரின் தலைமைப் பொறியாளர் விளக்கினார்.

அடுத்தபடியாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைக்கு உட்பட்டு 1940-41 முதல் ஹேமாவதி ஆற்றின் மூலம் கிடைக்கும் நீர்ப் பெருக்கின் அளவுபற்றிய புள்ளி விவரத்தை வைத்து, தேக்கப்படும் தண்ணீர் பற்றி நீர்மற்றும் மின்துறை அமைச்சகம் ஆய்வு நடத்திடும். சரியான அல

வைக்குறித்த நிர்ணயிப்புகளை மைசூரும் தமிழகமும் சேர்ந்து முடிவு செய்யும். இரு அரசுகளினாலும் நாளடைவில் இது சம்பந்தமான விதிமுறைகள் இயற்றப்படும்—என்று மத்திய அரசின் பொறியாளர் கூறினார்.

### ஒப்பந்தத்தை நாம் மதிக்கிறோம்.

இந்த அளவுக்கு நல்ல ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிற காரணங்களாலேதான், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று நாம் சொல்லுகிற நேரத்தில் மைசூர் அரசு தன் னிடத்தில் நியாயங்கள் இல்லாத காரணத்தால், ''1967-ம் ஆண்டு வரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கிறோம். அதற்குப் பாதகம் இல்லாமல்தான் இந்த அணைகள் கட்டப்படும்'' என்று கூறிவிட்டு, 1968-ல் ஹேமாவதி அடிக்கல் நாட்டு விழாவைத் தமிழக அரசின் இசைவையும் முன் ஒப்புதலையும் பெறாமலும் மத்திய அரசின் முன் அனுமதியும் பெறாமலும் நடத்தினார்கள்.

### கட்சிக் கண்ணோட்டமில்லை.

அன்றைக்கு மைசூரில் முதலமைச்சராக இருந்தவர் —வீரேந்திர பட்டீல்; அவர் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அங்கே காங்கிரஸ்! இங்கே கழக அரசு என்ற அளவில் அப்போதும் அரசியல் கண்ணோட்டத் தோடு பார்க்கவேண்டாம் என்ற அளவில்தான் தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி மிகுந்த நிதானத் தோடும் இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள உறவுகளுக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படக்கூடாது என்ற முயற்சி யோடும் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டது. பேச்சு வார்த்தை நடத்தியது. அதை உறுப்பினர்களும் நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

### தட்டிக் கழிக்கப்பட்டபோது..

1968-ல் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்திய தற்குப்பிறகு, மைசூர் சட்டமன்றத்தில் பேசிய முதலமைச் சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந் தத்தை மைசூர் அரசு மதிக்காது என்று சொன்னார். அணைக்கட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட நேரத்தில்-மதிக்கப் பட்ட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம்-இந்த அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா வரை மதிக்கப்பட்டு வந்த 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1962-ல் மத்திய அரசின் பொறியாளர் முன்னிலையில் தமிழக அரசின் மாநிலங்களின் பொறியாளர் கள் கையெழுத்திடுகின்ற நேரத்தில் மதிக்கப்பட்ட 1924-ம் ஆண்டு ஒப்பந்தம், மைசூர் சட்டசபையில் பேசுகிற நேரத்தில் முதலமைச்சர் இனி மதிக்கப்படாது என்று தட்டிக் கழிக்

கிறார். இதைக் கேட்டுத் திடுக்கிட்ட, அதிர்ச்சியுற்ற தமிழக அரசு உடனடியாக மத்திய அரசிற்கு எழுதுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அதன் உதவியை நாடியது. நம் முறையீடுகள் மத்திய அரசிற்குப் பறந்தன. அதற்குப் பிறகு மத்திய அரசு உடனே தலையிட்டு ''இந்த அணைகளை நீங்கள் கட்டக் கூடாது. நிறுத்தி வையுங்கள், பேச்சு வார்த்தையில் முடிவு காணுகிற வரையில் நிறுத்தி வைக்கப்படவேண்டும்'' என்று மைசூர் அரசுக்கு எழுதியிருப்பதாகத் தகவல் தந்தார்கள்.

அப்போதுகூட சென்னையில் உள்ள பத்திரிகைகள் மத்திய அரசு மைசூர் அரசிற்கு உத்தரவு போடுவது சரியல்ல என்ற அளவில் எழுதியதை மறந்து விடவில்லை. பெங்களூரில் அந்தப் பத்திரிகை விற்பனையாக வேண்டும் என்ற ஒரே ஒரு விற்பனை நோக்கத்தோடு எழுதியது. அதைப்பற்றி எல்லாம் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

### மத்திய அரசின் ஆணை தொடர்ந்து மீறப்பட்டது.

அப்போது மைசூர் அரசுக்கு மத்திய அரசு இட்ட ஆணை தொடர்ந்து மீறப்பட்டு வந்தது. ஒவ்வொரு முறையும் நானும் நம் அமைச்சர் பெருமக்களும் கேரளத்து முதல்வரும் மைசூர் முதல்வரும் மத்திய அமைச்சர் கே.எல். ராவ் அவர்களோடு கூடிப் பேசுகிற நேரத்தில் எல்லாம் எல்லாவற்றையும் பேசிவிட்டுக் கடைசியாக வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றுதான் கூறுவார்.

### மைசூர் ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை.

''இப்போது இருக்கிற ஒப்பந்தத்தின் படி-இன்றுள்ள சூழ்நிலைப்படி எங்களுக்கு வரையறுக்கப்பட்ட லிமிட் ஃப்ளோஸ் தந்தாக வேண்டும்'' என்று கூறினேன். லிமிட் ஃப்ளோஸ் என்று சொல்லி விட்டு மழை இல்லை; தண்ணீர் இல்லை என்றால் என்ன செய்வீர்கள் என்று இங்கு கேட்டார்கள்.

மைசூர் ஒன்றும் ஆப்பிரிக்கா கண்டத்திலும் இல்லை. நாமும் வெகுதூரத்தில் இல்லை. இன்றைக்கு லிமிட் ஃப்ளோஸ் என்று வரையறுக்கப்பட்டால் கிருஷ்ணராஜசாகரில் உள்ளது போல் நம் பொறியாளரும் இருப்பார். அவர்கள் மாநிலத்தைச் சேர்ந்த பொறியாளரும் இருந்து கொண்டிருப்பார். ஆகவே யாரும் அதிலே பொய் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. தவறு செய்துவிட முடியாது.

அந்தக் காரணத்தாலே நமது லிமிட் ஃப்ளோஸ் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த லிமிட் ஃப்ளோ

ரைக்கு எந்த ஊனம் வந்தாலும் இந்த அணைக்கட்டுத் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று திட்ட வட்டமாகக் கூறி இருக்கிறோம்.

மத்திய அரசின் ஆணையை மைசூர் அரசு மதிக்கவில்லை.

1968-ம் ஆண்டு மத்திய அரசு தமிழக அரசுக்கு எழுதிய கடிதத்தில் ''தமிழ்நாட்டோடு இந்தப் பிரச்சினையில் கலந்து பேசி ஒரு முடிவு ஏற்படுகிற வரையில் மைசூரிலே கட்டப் படுகின்ற அணைகளை நிறுத்திவைக்குமாறும் மத்திய அரசு மைசூருக்குத் தெரிவித்திருக்கிறது'' என்று ஒரு குறிப்புத் தெரிவித்தது. ஆனால், மத்திய அரசின் அந்த உத்திரவை மைசூர் அரசு நிறைவேற்றியதா? இல்லை!—அதைப் பொருட்படுத்தியதா? இல்லை! அதற்குத் தரவேண்டிய மதிப்பையாவது தந்ததா? கிடையாது! அப்போது மைசூரிலே இருந்த அரசு—காங்கிரஸ் அரசு! காங்கிரஸ் அரசு என்று குறிப்பிடுவதற்குக் காரணம்—இந்தப் பிரச்சினையில் அரசியலைக் கலக்க வேண்டும் என்பதற்காக அல்ல!

டெல்லியிலே இருந்த காங்கிரசும், மைசூரிலே இருந்த காங்கிரசும் ஒரே காங்கிரசாக இருந்தபோதுதான் இந்தப் பிரச்சினை உருவாயிற்று. ஆனால் அந்த நேரத்திலேயே—கட்சி என்பதை மறந்துவிட்டுத் தங்களுடைய மாநில உணர்வுகள் என்கின்ற அடிப்படையில் மைசூர் முதல்வர் வீரேந்திர பட்டீல்—மத்திய அரசின் தாக்கீதைப் பொருட்படுத்தாமல் தன்னிச்சையாக ''நீங்கள் அனுமதித்தாலும், அனுமதிக்கா விட்டாலும் அணையை நான் கட்டியே தீருவேன். அதற்குப் பணம் தந்தாலும் தராவிட்டாலும் நீங்கள் மாநிலத்திற்காகச் செலவழிக்க விருக்கின்ற பணத்தையெல்லாம் அணைகளைக் கட்டுவதற்காகத் திருப்பி விடுவேன்'' என்கிற அளவிற்கு வீராவேசமாகப் பேசினார்.

மைசூர் அப்படி நடந்துகொள்வது தவறான காரியம்! தவறான போக்கு—என்று மத்திய அரசின் அமைச்சர், கே.எல் ராவ் அவர்கள் அதை அப்போதே உணர்ந்தார். உணர்ந்ததை எடுத்துரைத்தார். மத்திய அரசிலே வீற்றிருக்கின்ற தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உணர்ந்தார்கள். மைசூரின் போக்கு சரியானதல்ல என்றெல்லாம் குறை கூறினார்கள்.

தன் ஆணையைத் தானே மீறுகிறது.

ஒரு கட்சியினுடைய ஆட்சி இல்லை; இன்னும் சொல்லப்போனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இன்று ஆட்சிப் பொறுப்பிலே இல்லை. மைசூரை ஆண்டு கொண்டிருப்பது மத்திய அரசு. கவர்னர் வாயிலாக—

மத்திய அரசினுடைய ஆட்சி, குடியரசுத் தலைவரினுடைய ஆட்சி அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய உத்தரவை யார் மீறுகிறார்கள்? இதுதான் வேடிக்கை! முதலிலே மத்திய அரசினுடைய உத்தரவை மைசூர் அரசு மீறியது. இப்போது மத்திய அரசினுடைய உத்தரவை மத்திய அரசே மீறிக் கொண்டிருக்கிறது. நீ என்ன மீறுவது? நானே என்னுடைய உத்தரவை மீறிக் கொள்கிறேன் போ, என்று சொல்லுவதைப் போல இன்றைக்கு மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது.

## மாமியாராகும் மத்திய அரசு.




கதையொன்று சொல்வார்கள்—ஆற்றிலே குளித்துவிட்டு வீட்டுக்கு வருகின்ற மாமியார் தன்னுடைய வீட்டிலேயிருந்து வெறுங்கையோடு திரும்பிக் கொண்டிருக்கின்ற பிச்சைக்காரனைப் பார்த்து, ''என்னப்பா, ஏன் வெறுங் கையோடு வருகின்றாய்?'' என்று கேட்க ''உன் மருமகள் பிச்சையில்லை என்று சொல்லிவிட்டாள்''—என்று சொன்னதும், ''அப்படியா அவளுக்கு அவ்வளவு திமிரா? வா, வா'' என்று மறுபடியும் அழைத்துக் கொண்டு போய்—இவள் உள்ளே போய் குடத்தை இறக்கி வைத்துவிட்டு, வந்து, பிச்சைக்காரனைப்பார்த்து—''பிச்சையில்லை என்று சொல்ல மருமகளுக்கென்ன உரிமை? நான் சொல்லுகிறேன். இல்லையென்று—நீ போ'' என்று பிச்சைக்காரனுக்கு ஆணையிட்டாளாம்.

அதைப்போல—பிச்சைக்காரனுக்கு ஆணையிட்ட அந்த மாமியாரைப் போல இன்றைக்கு மத்திய அரசு நாங்கள் தருகின்ற உத்தரவை மீறுவதற்கு மைசூர் அரசுக்கு என்ன அதிகாரம்? நாங்களேதான் நாங்கள் போட்ட உத்தரவை மீறுவோம் என்கிற அளவில் அவர்கள் போட்ட உத்தரவை அவர்களே மீறிக் கொண்டிருக்கிறார்கள்.

## தமிழகத்தை அழித்துவிட்டு இந்திய ஒருமைப்பாடா?

இந்திய ஒருமைப்பாட்டிற்காகத் தான் நாம் இந்த வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் பேசுகிற நேரத்தில் கூடச் சொன்னார்கள். நானும்கூட, தொடக்கத்தில் குறிப்பிட்டேன் 'நாம் நடத்துகின்ற எந்தக்கிளர்ச்சியாக இருந்தாலும், நாம் மேற்கொள்ளுகின்ற எந்த நடவடிக்கையாக இருந்தாலும்—அந்த நடவடிக்கைகளனைத்தும் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு உலைவைப்பதாக அமைந்துவிடக்கூடாது! என்று'. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய உள்ளத்திலே கேள்வி எழாமல் இல்லை; பாரதியாரினுடைய பாட்டு நம்முடைய நினைவுக்கு வராமலில்லை.

"கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதோ?" என்று பாரதியார் கேட்டார். நான் கேட்கிறேன்—தமிழகத்தை அழித்துவிட்டு இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதா?

இதைக் கேட்பதால் இந்திய ஒருமைப்பாடு அழிக்கப்பட வேண்டும் என்கிற அந்த எண்ணத்திலே சொல்லவில்லை—மத்திய அரசிலே இருக்கிறவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகம் அழிந்து, அதன் வாயிலாக இந்திய ஒருமைப்பாடு கட்டிக் காக்கப்படவேண்டுமென்றால், அதற்குப் பேர் ஒருமைப்பாடா? 'தேர்தல் காரணத்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது; நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு அஞ்சுகிறார்கள்' என்றெல்லாம் சொல்லப்பட்டது.

மிகவும் பயங்கரமான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட நேரம், பொதுத் தேர்தல் நாடாளும் மன்றத்திற்குப் பல மாநிலங்களிலே நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, அந்த நேரத்திலே பெங்களூரிலேயே பேசிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்—காவிரி நதி நீர்ப் பிரச்சினை நடுவர் தீர்ப்புக்கு விடப்படும் என்று பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள்.

அப்படிச் சொன்ன பிறகும், மைசூரிலே நாடாளுமன்றத் தேர்தலில் எல்லா இடங்களையும் அவர்கள் கட்சிதான் பெற்றிருக்கிறது.

## நியாயத்திற்கு வாக்கு.

இதிலிருந்து, நியாயத்தைப் பேசினால், மைசூர் மக்கள் வாக்களிப்பார்கள் என்று தெரிகிறது. ஆகவே, நியாயத்தைச் செய்தால் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட்டால் மறுபடியும் அவர்களுடைய கட்சிக்கு மைசூர் மாநிலத்திலே

நல்ல வெற்றி கிடைக்கும் என்பதனை இந்த நேரத்திலே அவர்களுக்கு நான் சிபாரிசு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எடுத்து விளக்கப்படவில்லை.

மைசூர் மக்களிடத்திலே யாரும் சரியான நியாயத்தை எடுத்துச் சொல்லவில்லை என்றுதான் கருதுகிறேன். இதனாலேதான் மைசூர் மக்களுக்கு இந்த விஷயம் சரியாகப் புரிய வைக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றது.

1892-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

1924-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

1964-ம் ஆண்டு ஒப்பந்தம் என்ன ?

அறிக்கையில் நாம் ஒப்புக் கொண்டிருக்கின்ற ஒப்பந்த ஷரத்துக்கள் என்ன ? 1967-ம் ஆண்டு இரண்டு மாநிலத்தினுடைய பொறியாளர்களும் மத்திய அரசின் பொறியாளர் தலைமையிலே கையெழுத்துப் போட்டார்களே ; அது எந்த அடிப்படையில் ?

இவைகள் எல்லாம் மைசூர் மக்களுக்கு எடுத்து விளக்கப்படவில்லை-எனவேதான், எங்களுடைய திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்த்து தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் மைசூர் மாநிலத்திற்கு எதிராக இன்றைய தினம் செயல்படுகின்றன. ஆகவே நாம் நம்முடைய மாநிலத்து உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மைசூரிலும் இருக்கின்ற பழைய காங்கிரஸ் கட்சியானாலும், சுதந்திராக் கட்சியானாலும், கம்யூனிஸ்ட்டுக்கட்சியானாலும் கழகமானாலும் நாங்கள் மைசூர் பக்கம்தான் இருப்போம் என்று இன்றைய தினம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

உடன்பாட்டை நாங்கள் மீறவில்லை.

நான் அங்கேயும் உள்ள அந்த அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்—அந்த ஒப்பந்தங்களையெல்லாம் மீண்டும் எடுத்துப் பாருங்கள்.

நாங்கள் ஒரு இம்மி அளவாவது—எள் முனை அளவாவது அந்த ஒப்பந்தங்களுக்கு மாறாக எங்களுடைய கோரிக்கைகளை முன் வைக்கிறோமா ?

ஹேமாவதியோ, கபினியோ, 'ஹேரங்கியோ' சொர்ணவதியோ இந்த நீர்ப்பாசனத்திட்டங்களெல்லாம் நிறைவேற்றப் படக்கூடாதென்று நாங்கள் சொல்கிறோமா ? அந்தப் பாசன

திட்டங்களை நிறைவேற்றுங்கள். அப்படி நிறைவேற்றுகிற நேரத்தில் எங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்; எங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது; தஞ்சை மாவட்டமும் காவிரி டெல்டா பிரதேசமும் இந்த அணைக்கட்டின் மூலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான விதிமுறைகளையெல்லாம் பின்பற்றுங்கள் என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குத்தான் நடுவர் தீர்ப்புத் தேவையென்கிறோம். நடுவர்தீர்ப்புக்கு விட்டால் நமக்கு எந்தவிதமான அச்சமும் கிடையாது.

### அவர்கள் கல்மனக் காரர்களா?

அதை அவர்கள் மறுக்கிறார்களென்றால் அதிலேயே நியாயம் அவர்கள் பக்கத்திலே இல்லையென்பது புலனாகிறது. அதை எடுத்து மைசூர் மாநிலத்து மக்களிடத்திலே சொல்லட்டும்—ஏற்கனவே செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தம்—அந்த ஒப்பந்தத்தை நாம் எப்படி மீறலாம்? என்று மைசூர் மக்களைக் கேட்டால், மைசூர் மக்களென்ன அவ்வளவு பேரும், அப்படிக் கல்மனம் படைத்தவர்களா?—தமிழ்நாட்டு மக்களெல்லாம் வாட வேண்டும்; அவர்கள் வயிறு காய்ந்து போக வேண்டும்; அவர்களுடைய கண்ணீர்க் குளங்களைக் காண வேண்டும்என்கின்றவர்களா மைசூர் மாநிலத்திலே இருக்கின்ற கர்நாடகப் பெருமக்கள்? அல்லவே அல்ல!

### இந்திரா காங்கிரசின் கடமை.

அங்கே இருக்கின்ற மக்களெல்லாம் இந்த ஒப்பந்தங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்கலாம், அங்குள்ள கட்சிக்காரர்கள் தான் இதை எடுத்துச் சொல்லவேண்டும். ஆனால் அங்கேயிருக்கிற நிலைமை என்னவென்றால்— ஒவ்வொரு கட்சிக்காரரும் யார் நடுவர் தீர்ப்பு வேண்டாமென்று சொல்வது என்பதிலே போட்டிபோட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தப் போட்டியை மைசூர் மாநிலத்திலே இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும் தவிர்த்துக் கொண்டு அந்த ஒப்பந்தத்திலே உள்ள எல்லா ஷரத்துக்களையும் மக்களிடத்திலே எடுத்துச் சொல்வார்களேயானால்—அதுவும் இன்றைக்கு இந்தியாவை ஆளும் கட்சியாக இருக்கிற இந்திரா காங்கிரஸ் காரர்கள் இந்தக் காரியத்தை முன்நின்று நடத்துவார்களேயானால் மற்றக் கட்சிக்காரர்களும் அவர்களுக்குப் பின்னால் வந்து மைசூர் மாநிலத்திலே ஒரு அமைதியான நிலையை ஏற்படுத்த முடியுமென்று நான் கருதுகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தால்தானே மறுபடியும் பேச முடியுமென்று அமைச்சர் சுப்பிரமணியம் பேசியதை இங்கே குறிப்பிட்டார்கள்.—அது சரியான வாதம் அல்ல. ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்த நேரத்திலேதான் இங்கேயும் அங்கேயும்—நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்ற நம்முடைய கோரிக்கை வைக்கப்பட்டது.

### ஜனநாயகத்தின் கடமை.

அதிலே கூடப் பெரும்பான்மை பார்க்க வேண்டுமே யானால் தமிழக அரசு, கேரளஅரசு இரண்டுமே நடுவர் தீர்ப்பைக் கேட்டிருக்கிறது. நடுவர் தீர்ப்பு வேண்டாம் என்று சொல்வது ஒரு மாநிலம்; வேண்டும் என்று சொல்வது இரண்டு மாநிலம். அதிலும் கூட ஜனநாயகத்தின்படி இந்தப் பெரும்பான்மையையெண்ணிப்பார்க்காமல் பதினெட்டு மாதக் காலம் அவர்கள் காலத்தைக் கடத்தியிருக்கிறார்கள்

### வேலைகளை நிறுத்தி வையுங்கள்.

இப்பொழுது மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகுதான் பேச வேண்டும் என்று தர்மநியாயப் பேசப்படுமேயானால் நான் அதை வாதத்திற்காக ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அதுவரையில் எந்த அணைக்கட்டிலும் வேலைகள் நடைபெறாது என்கின்ற உத்தரவாதத்தை நீங்கள் தமிழ் நாட்டிற்கு அளியுங்கள். அது மாத்திரமல்ல— வேலைகள் நடத்த வொட்டாமல் நீங்கள் மைசூர் அரசுக்கு உத்தரவு போடுங்கள். உத்தரவு போட்டால், அதை ஏற்று நடத்தக்கூடியவர்கள் இன்றைக்கு மைசூரிலே இருக்கிறார்கள்.

உங்களால் அனுப்பப்பட்ட கவர்னர் மைசூரிலே இருக்கிறார். கவர்னரை எதிர்த்து இந்த உத்தரவு கூடாதென்பதற்கான அமைச்சரவை அங்கே கிடையாது.

மக்கள் பிரதிநிதிகள் வந்து முடிவெடுக்கப்படும் வரையில் இந்தப் பிரச்சினை ஒத்திவைக்கப்படுமென்றால் அதுவரையிலே அணைகள் கட்டுகின்ற வேலையும் ஒத்திவைக்கப்படுவது தானே நியாயம்? இந்தச் சாதாரண நியாயம் கூடவா மத்திய அரசுக்குத் தெரியவில்லை? தெரிந்தும் வேண்டுமென்றே தட்டிக் கழிக்கிறார்களென்றால், தமிழர்களை அவர்கள் ஏமாளிகள் என்று கருதுகிறார்களா? எனக்கு அதுவும் புரியவில்லை.

## பண்பை நாம் பெற்றிருக்கிறோம்.

ஆகவே, இவைகளுக்கெல்லாம் விடை காணத்தான் நாம் இரண்டு மன்றங்களிலும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தீர்மானத்தை உருவாக்கியிருக்கிறோம். அதேநேரத்தில் மத்திய அரசு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வரையில் மத்திய அரசின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும் என்ற பண்பை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு பெற்றிருக்கிறது. வீராணம் திட்டத்திற்கு ஒன்றரை ஆண்டுக் காலம் 2 ஆண்டுக்காலம் மத்திய அரசின் அனுமதி கிடைக்கின்ற வரையில் காத்துக்கொண்டிருந்தது அதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். " வீராணம் திட்டம் தானே ! இது எந்த மாநிலத்தையும் பாதிக்கவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தது, நாங்களே ஏற்படுத்திக் கொள்கிறோம்." என்பதாக அவசரப்பட்டு அந்தக் காரியத்தில் நாம் ஈடுபடவில்லை.

அதேபோல இந்த கோட்டையைச் சுற்றி புல்பூண்டுகளை செதுக்கப்படவேண்டும் என்று சொன்னதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே செய்ய வேண்டும் என்று அதிகாரி சொன்னார். ஆகவே மத்திய அரசின் உதவி அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவரை அழைத்துப்போய் அவர் கண்ணிலே அந்த புல்பூண்டுகளைக் காட்டி அதைச் செதுக்க அனுமதி தர வேண்டும் என்று கேட்டு, நான்கைந்து கடிதம் எழுதி, ஞாபகப்படுத்தி, " புல்பூண்டுகளைச் செதுக்க அனுமதி கொடுத்தேன் போ " என்று அவர்கள் அனுமதி அளித்த பிறகுதான் புல்பூண்டுகள் இப்போது செதுக்கப்பட்டுக் கண்களைக் கவரும் வண்ணம் மலர்கள் கொண்ட பூங்கா தோன்றிக் கொண்டிருக்கிறது.

அந்த அளவுக்கு மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டுப் பணிந்து நடக்கிறோம். ஆனால் 25 கோடி, 30 கோடி என்கிற அளவில்—ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை தமிழ்நாட்டைப் பாலைவனம் ஆக்கக்கூடிய பயங்கர நிலையை எண்ணிப் பாராமலேயே, மத்திய அரசின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில் செய்கிறார்கள் என்றால் நாட்டு நிலைமை என்ன ?

## பாலாறு பாழாறான கதை!

பாலாறு, மைசூர் அணைக்கட்டால் ' பாழாறாக 'ப்போய் விட்டதை மறந்து விடக் கூடாது. ராணிப்பேட்டைக்கருகில் பாலாறு படுகை ஓரத்தில் 9 லட்சத்துக்கு மேற்பட்ட மரங்கள் இருந்தன என்று கணக்கிட்டு, நடந்த மகாயுத்தத்

தின்போது 3 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டு விறகாகக் கொடுக்கப்பட்டன என்றெல்லாம் சரித்திரம் படித்தவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாலாறு இன்றையத் தினம் பாழாறாக மாறியிருக்கிறது.



காவிரியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறபோது பல பேருக்கு இது எவ்வளவு பயங்கரமான பிரச்சினை என்று புரியாமல் இருக்கலாம். அதன் உண்மைத் தத்துவம் தெரியாமல் இருக்கலாம். பாலாற்றை எண்ணிப் பாருங்கள். அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காலம் ஒன்றுண்டு. இன்றைக்கு வெறும் மணல் வெளியாகக் கிடப்பதைப் பார்க்கிறோம். அதைப்போல இன்றைக்கு மைசூர் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறபடி அணைக்கட்டுகளை எல்லாம் கட்டிவிட்டால் சகாரா பாலைவனத்தைப் போல் காவிரி நதியும் மணல் ஆறாகப் போய்விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இளங்கோ காட்டிய காவிரியை நாம் காணமுடியுமா?

இலக்கியங்களில் எல்லாம் காவிரியைப் பற்றி வருணித்திருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட வரலாறுகளை எல்லாம் உறுப்பினர்கள் சொன்னார்கள். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்—

"மருங்குவண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடையதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி"

—என்று அழகுறப் பாடிக் காட்டினார். மைசூர் அரசு அந்த அணைகளைக் கட்டி விட்டால் அங்கே மருங்குவண்டு சிறந்தார்ப்பதைப் பார்க்கமுடியாது. மணிப்பூவாடையை நுகரமுடியாது.

### உணர்ச்சியைப் புரிந்துகொள்ளுங்கள்

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளைக் காப்பாற்ற வேண்டு மென்று திருமதி இந்திராகாந்தி அம்மையார் உலக நாடுகளை எல்லாம் உதவி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாமோ நாளைக்கு இந்த அணைக்கட்டுகளால் அகதிகளாக மாறிவிடக் கூடிய தமிழ்நாட்டு மக்களை ஆபத்தில் இருந்து காக்க உங்கள் உதவியைத் தாருங்கள் என்று அந்த அம்மையாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த உணர்ச்சியை அம்மை யாரவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கி றேன்.

### கவலையில் தோய்ந்த உள்ளங்களின் கவின் முத்துக்கள்!

ஆளும் கட்சியின் சார்பில் பேசியவர்கள் ‘‘ நாம் தற்கொலைப் படையாக இருப்பதற்கும் தயாராக இருக் கிறோம். எந்த யுத்தத்திற்கும் தயாராய் இருக்கிறோம்’’ என்றார்கள். அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இதுபோல் ஒரு தீர்மானம் போடவேண்டிய அவசியம் இல்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டிப் பேச வேண்டியதில்லை. அவை அவர்களுடைய உள் உணர்ச்சிக்கு அடையாளமான வார்த்தைகளே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். எதிர்காலத் தமிழகத்தை எண்ணிப்பார்த்து, கவலையால் குமைந்த நல்ல முத்துக்கள் என்ற அளவில் அவைகளை நான் எண்ணு கின்றேனே அல்லாமல் அவைகளை இந்த உணர்ச்சிகளை மத்திய அரசின் மீது பகைமையோ, அண்டை மாநில அரசின் மீது பகைமையையோ ஆக்கத் திருப்பப்படும் என்று பொருள் இல்லை. பேசிய உறுப்பினர்களே அப்படி நினைத்துப் பேசியிருக்கவும் மாட்டார்கள்.

### ஒரு கருத்து வேறுபாடு

எனினும், இயற்கையில் இது பயங்கரமான உருவம் எடுத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது! மறைக்க முடியாது!

இன்று மத்திய அரசு மாநில அரசின் சில கொள்கைகளை கொஞ்சம் கசப்போடுதான் அணுகுகிறார்கள் என்று கூறப் படுவதை நான் மறைக்க விரும்பவில்லை. அப்படிச் சில நடைமுறைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அத்தனை பிரச்சினைகளையும் தேர்தல், தேர்தல் கால ஒப்பந்தங்கள் ஆகியவற்றோடு—ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பது சரியான வாதமாகாது.

இவை எல்லாம் ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இருக்கக்கூடிய கருத்து வேறுபாடு என்று பார்க்கவேண்டுமே தவிர ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் ஒரு மாநில மக்களுக்கும் இன்னொரு மாநில மக்களுக்கும் இருக்கிற வேறுபாடாகப் பார்க்கக்கூடாது.

## மக்களுக்குள் ஏற்பட்ட தகராறல்ல

ஹேமாவதி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய திரு வீரேந்திர பட்டீல்—அவர் பழைய காங்கிரசைச் சேர்ந்தவர்—ஆகவே அதற்காக இங்கே உள்ள பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறை சொல்ல வேண்டுமென்று குறை சொன்னதில்லை. அது தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற தகராறு என்ற அளவில்தான் பார்த்தோம். உண்மையில் இது மைசூர் அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறே தவிர மைசூர் மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு அல்ல. இந்த இரு அரசுக்கும் இடையே எழுந்துள்ள தகராறில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாக நியாயம் வழங்க வேண்டுமென்று நாம் கோருகிறோம். இந்தத் தகராறில் தலையிட மத்திய அரசு மறுக்கிறது. மாநில அரசின் கருத்துக்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. பிறகு பார்க்கலாம் என்பதாகப் பிரச்சினைகளை ஒத்தி வைக்கிறார்கள். நமது உணர்ச்சிகளைச் சரியான முறையில் புரிந்து கொள்ள முடியாத நிலைமை அங்கே இருக்கிறது.

## காலம் தாழ்த்தும் காரணம்.

அமைச்சர் மாதவன் அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் டெல்லிக்குச் சென்று திரு கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்களே, அங்கே என்ன பேசப்பட்டது, அதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கோருகிறேன் என்பதாக உறுப்பினர் சொன்னார். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர் கூட்டத்தில் விளக்கி இருக்கிறேன். அதைப்பற்றி வேறு விவரங்களை இங்கே சொல்ல விரும்பவில்லை.

திரு கே. எல். ராவ் அவர்கள் அப்போது சொன்ன கருத்துக்களையாவது மறுபடியும் இதுவரை எழுத்துமூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படி எதுவும் செய்யாது காலம் தாழ்த்தி வருகிறார்கள்! அதன் காரணம் நமக்குப் புரியவில்லை. ஆனால் இன்றைய தினம் வேறு ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாநில அரசு தவறு செய்தது, முதல் அமைச்சர் தவறு செய்துவிட்டார். இந்திராகாந்தி அம்மையார் முதல் அமைச்சர்களையெல்லாம் கூட்டி மாநில சுயாட்சிபற்றி விவாதிப்பதாகச் சொல்லவில்லை—அவர்கள் கடிதம் எழுதியது நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் பற்றித் தான் என்பதாக ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார். உண்மையைச் சொல்லிவிட்டு இன்றைக்கு அரசியல்வாதிகள் அதில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அதிகாரிகளை விட்டு மறுப்புவிடச் சொல்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் எழுதிய கடிதத்தை வைத்துக் கொண்டுதான் நான் பேசுகின்றேன். அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது? சந்தேகம் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தக் கடிதத்தை வாங்கிப் பார்க்கலாம்.

These are important issues and we intend to consult all Chief Ministers

(இவை முக்கியமான பிரச்சினைகளாக இருப்பதால் எல்லா முதல்வர்களோடும் கலந்து பேசிட நாங்கள் விரும்பு கிறோம்) என்று சொல்லும் போது எவை எல்லாம் முக்கிய மான பிரச்சினைகள்? அவர்கள் கடிதம் எதற்காக எழுதினார்கள்?

I have received your letter on 15th June with which you have sent me a copy of the report of Centre-State Relations Enquiry Committee.

(தங்களது ஜூன் 15-ஆம் தேதிய கடிதமும் அதனோடு மத்திய—மாநில உறவுகள் பற்றிய விசாரணைக்குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றேன்) என்பதாக அவர்களே நாம் அனுப்பி வைத்த ராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பதில் எழுதினார்கள். அதில்

Your Government will probably examine the recomendation of this report.

(இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை உங்கள் அரசு ஆராயக்கூடும்.) என்று குறிப்பிட்டுவிட்டு

As you know the Administrative Reforms Commission also went into this question.

(இதே பொருள் குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனும் ஆராய்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்)— என்று சொல்லிவிட்டு,

It has already submitted a report and it is under consideration. If the views of your government are made available to us, they will also be taken into account.

(அது ஏற்கனவே ஒரு அறிக்கை கொடுத்துள்ளது. அது ஆய்வில் உள்ளது. உங்கள் அரசின் கருத்தும் எங்களுக்குத் தெரிவிக்கப்படுமானால் அதனையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்)—என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தவரியில் அவர்களே (These are important issues) (இவை முக்கியமான பிரச்சினைகள்) என்று குறிப்பிட்டிருப்பது, ராஜமன்னார் கமிட்டி அறிக்கையைப் பற்றியா, அட்மினிஸ்டேரேஷன் பார்ம் கமிட்டி அறிக்கை என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே, அதைப் பற்றியா ?

ஒரு வேளை நான் குறைந்த ஆங்கில அறிவு பெற்றவன் என்ற காரணத்தால் அந்த வகையில் குறைகூறுகிறார்களோ என்னவோ ? கடிதத்தை எழுதிவிட்டு டெல்லி வட்டாரத்து அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள் என்றால், நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி !

### விழாக் கொண்டாடியிருக்கின்றன !

முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப் போவதில்லையாம் ! கருணாநிதிக்கு 'ஆப்பு' என்றெல்லாம் பத்திரிகைகள் போடக் கூடும். ஒரு பத்திரிகையை மட்டும் சொல்லவில்லை, பல பத்திரிகைகள் இதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடியிருக்கின்றன.

இந்திராகாந்தி அவர்களின் கடிதத்தைக்கூட அப்பத்திரிகைகள் போடுவதில்லை. இந்திரா காந்தி அம்மையார் 'முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டுகிறோம்' என்று சொல்லிவிட்டு பின்னர் அதிகாரிகள் அப்படியெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப் போவதில்லையாம் என்று சொல்வது நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி !

### வருத்தப்பட மாட்டேன்.

முதலமைச்சர்களைக் கலந்து பேசுவதென்றால் தனித் தனியாகப் பேசுவது என்று அர்த்தம் அல்ல. எல்லோரையும் அழைத்துப் பேசுவதுதான்! இந்திரா அவர்களே மறுத்தால் கூட நான் கவலைப்படப் போவதில்லை. அப்படி இந்திரா காந்தி அம்மையாரே மறுத்திருந்தாலும் என்னுடைய வாதம் இன்னும் வலுப்பெறுமே தவிர குறைவுப்படாது ! மாநிலங்களுக்குப் பிரதமர் கடிதம்

பற்றி மகிழ்ச்சியடையவும் உரிமை கொடுக்கவில்லை என்று அதைப் பயன்படுத்திக் கொள்வேனே தவிர, வருத்தப் படப்போவதில்லை.

சென்னை சுத்திகரிப்பாலை தொடக்கவிழா நடைபெற்ற நாட்களில் தமிழக முதல்வருக்கு உரிய மரியாதை காட்டப் படவில்லை என்ற குற்றச்சாட்டை மறுத்து பெட்ரோலிய அமைச்சர் திரு. சேத்தி கூறியிருக்கிறார்.

அப்போது பெட்ரோலிய அமைச்சராக இருந்தவர் திரு. திரிகுணசென் என்பவர். அக்டோபர் 2-ஆம் தேதி யன்று, அதாவது மகாத்மா காந்தி பிறந்த நாளன்று 1969-ஆம் ஆண்டு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார், அதாவது,

October 2, 1969.

While I am looking into how misunderstanding arose which had given you reason to believe that those who organised the function had failed to inform you and other Ministers of your state. I am writing once again to convey my most sincere apologies for your having had occasion to feel that you were not invited whatever may be the reasons for this. I now try to assure you and your government of my highest consideration at all times.

With regards ;

(sd) Triguna Sen.

அக்டோபர் 2, 1969.

தங்களையும் தங்களது மாநிலத்தின் இதர அமைச்சர் களையும் விழா அமைப்பாளர்கள் அழைக்கத் தவறினர் என்று தாங்கள் நம்புவதற்கான காரணத்தை அளித்த அபிப்பிராய பேதம் எப்படி உண்டாயிற்று என்பது குறித்து நான் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் அழைக்கப் படவில்லை என்று தாங்கள் கருத நேர்ந்ததற்காக என் ஆழ்ந்த உள்ளார்ந்த மன்னிப்பைத் தெரிவிப்பதற்காகவே மீண்டும் ஒரு முறை இதனை எழுதுகிறேன். இதற்கான காரணம் எதுவாயினும் ஒன்றை உறுதியாகக் கூறுகிறேன். எல்லாக் காலத்தும் தங்களிடமும் தங்களது அரசிடமும் மிக உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

டி. சென்.

—என்று கடிதம் எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், மாநில அரசின் உணர்வுகளை, மத்திய அரசில் இருப்பவர்கள், தாங்கள் மத்திய அரசில்

இருப்பதால் அவற்றையெல்லாம் மறுத்துவிடுவது, மட்டப் படுத்திவிடுவது என்பதையெல்லாம் சரியான போக்கு அல்ல என்பதை எடுத்துக்காட்டத்தான்.

## நாம் நினைத்தால்.

அவர்களைப்போல நாம் நினைத்தாலும் செய்யலாம். இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு நேருமே என்பதைப் பொருட்படுத்தாமல், மைசூரைப் போல் 25 கோடி ரூபாய் செலவிடாவிட்டாலும், சின்னஞ்சிறு விஷயங்களை மத்திய அரசைக் கேட்காமலேயே நாம் நினைத்தால் செய்துவிட முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

நாம் ஏன் பொறுமை காட்டுகிறோம்! இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைவிக்கக்கூடாதே, மைசூர் மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் வன்மையான போர் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதால்தான் நாம் இவ்வளவு பொறுமை காட்டு கிறோம்!

## எடுத்துச் சொன்னால் . . . . . !

மைசூர் மாநிலத்தில் மக்கள் ஏற்றுக் கொள்கிற வகையில் விஷயங்கள் விளக்கிச் சொல்லப்படாத காரணத் தால் சிலஉணர்வுகள் மைசூர் மாநில மக்களுக்கு ஏற்பட் டிருக்கக்கூடும். மைசூரிலே ஒரு அரசு இன்றைக்கு இல்லா விட்டாலும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகள் எல்லாம் ஒருங்குகூடி, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது, என்பதையும் எந்தெந்த அளவுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதை யும் 1964-ல் ஹேமாவதி அணைகட்டுவதற்காக உடனடியாகத் தயாரித்த அறிக்கை என்ன என்பதையும் மைசூர் மக்களிடத் தில் எடுத்துச் சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களா?

மைசூர் மாநிலத்தில் உள்ளவர்களை, அரசியலுக்காக அரசியல் வாதிகள் பயன்படுத்துகிற காரணத்தால் அம் மக்களுக்குத் தமிழகத்தைப் பற்றியும், தமிழ்நாட்டுக் கட்சிகளைப் பற்றியும், தமிழக மக்களைப் பற்றியும் கசப்பான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தயவு செய்து கர்நாடக மக்கள்—மைசூர் மாநில மக்கள்—தங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அனைவரையும் மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

## பொறுமையைச் சோதிக்காதீர்கள்.

நம் முன்னல் வைத்திருக்கிற தீர்மானத்தை நாளை மறுநாள் டெல்லிக்கு அனுப்ப இருக்கிறேம். இதுவரையில் நம் எண்ணங்களை நம்முடைய வேண்டுகோளை அலட்சியப் படுத்தியது போல் அல்லாமல், காலங் கடத்தியது போல் அல்லாமல் மிகுந்த பரிவோடும், பெருமிதத்தோடும் உணர்ந்து இந்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சர் திரு கே. எல். ராவ் அவர்களும், மத்திய அமைச்சர் அவர்களும் இன்று மைசூரிலிருந்து வந்து மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்களும் நன்கு ஆராய்ந்தறிந்து, தமிழகத் திற்குப் பாதகம் ஏற்படாத அளவில் முடிவை எடுத்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னும் அவர்களிட மிருந்து நமக்குச் சாதகமான பதிலை—நடுவர் தீர்ப்புக்கு விடப்படும் என்ற பதிலை எதிர்பார்க்கின்றேன். அந்தக் காரணத்தினுல்தான் நண்பர்கள் எல்லாம் பேசிய கோபத்தை—ஆத்திரத்தை—வெடிகுண்டு வைத்து தகர்த் தெறிவோம் என்பவைகளையெல்லாம் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த முறை நமக்கு ஏற்றது அல்ல !

தமிழ்நாட்டு மக்களைக் காட்டுமிராண்டிகளாக ஆக்கிவிடக் கூடிய அளவுக்கு அவர்கள் போய்விடக்கூடாது. தமிழ்நாட்டு மக்கள் வேதனைப் புழுதியில் எறியப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த நல்ல முயற்சிகளை மேற்கொள்கிறேம்.

எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள் !

எங்கள் அடக்கத்தை அலட்சியப்படுத்தாதீர்கள் ! !

எங்களுடைய பண்பைப் பரிகாசத்திற்கு உட்படுத்தா தீர்கள் ! ! !

மத்திய அரசிடமிருந்து நல்ல முடிவினை, நல்ல விதமான தீர்ப்பினை, தமிழ்நாடு எதிர்பார்க்கிறது.

த மி ழ ர சு (16--8--71)

# இலவச இணைப்பு